## அத்தியாயம் 9

# வர்த்தகம், சென்மதி நிலுவை மற்றும் சுற்றுலா

### 9.1 பொதுவான நிகழ்வுகள்

2001இல் உலகளாவிய வெளிநாட்டு சூழல் குறிப்பிடத்தக்களவிற்கு மோசமடைந்தது. உலகப் பொருளாதாரம் 2000ஆம் ஆண்டில் வலுவான செயலாற்றத்தினைக் காட்டியதன் பின்னர் நலிவுற்றது. மெதுவான போக்கு கடந்த பத்தாண்டு காலமாக உலகப் பொருளாதார வளர்ச்சிக்கு உந்துதலாக விளங்கிய ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட கடுமையான நலிவு, இன்னமும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படும் யப்பானிய பொருளாதாரம், ஐரோப்பிய ஒன்றியத்தின் வளர்ச்சியில் காணப்பட்ட மிதமான தன்மை மற்றும் புதிதாக கைத்தொழில் மயமான ஆசிய பொருளாதாரங்களிலும் மற்றும் ஏசியன்-4[1] நாடுகளிலும் காணப்பட்ட குறிப்பிடத்தக்க மெதுவானபோக்கு என்பனவற்றின் மூலம் குறித்துக் காட்டப்பட்டது. கைத்தொழில் நாடுகளில் குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளின் கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி பன்னாட்டு வர்த்தகத்தின் மீதும், இலங்கை உட்பட அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் வளர்ச்சி வாய்ப்புக்களிலும் மோசமான தாக்கமொன்றினை ஏற்படுத்தியது. 2001ஆம் ஆண்டுப் பகுதியில் இலங்கையின் வெளிநாட்டுத்துறை நிகழ்வுகள் மோசமான உலகளாவிய வெளிநாட்டுச் சூழல், வெளிநாட்டு அதிர்வுகள், மற்றும் நாட்டில் நிலவிய நிச்சயமற்ற அரசியல் மற்றும் பொருளாதர சூழல் என்பனவற்றைப் பிரதிபலித்தது. எனினும், இந் நிகழ்வுகளின் மோசமான தாக்கம், 2001 சனவரியில் சுதந்திரமாக மிதக்கவிடுகின்ற செலாவணிவீத அமைப்பினை நோக்கி நாடு நகர்ந்தமையின் மூலம் தணிக்கப்பட்டது.

பொருள்கள் மற்றும் பணிகளிலுள்ள பன்னாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி சென்மதி நிலுவையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க குறைவான வர்த்தகம் மற்றும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை, அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக சென்மதிநிலுவையில் காணப்பட்ட திரண்ட நிலுவையில் மிகை, மற்றும் ரூபாவின் பெறுமானத்தேய்வு என்பன 2001இல் இலங்கையின் வெளிநாட்டு நிகழ்வுகளில் காணப்பட்ட முக்கிய பண்புகளாக விளங்கின. உலகளாவிய கேள்வியில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியின் விளைவாக இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் குறிப்பிடத்தக்களவிற்கு 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதி 12.8 சதவீதத்தினாலும் இறக்குமதிகள் 14.9 சதவீதத்தினாலும் (2000ஆம் ஆண்டின் வானூர்திகளின் இறக்குமதிக்கு சீராக்கம் செய்யப்படாமல் 18.4 சதவீதம்) வீழ்ச்சியடைந்தமையானது வர்த்தகப் பற்றாக்குறையில் சாதகமான நிலையினைத் தோற்றுவித்ததுடன் இது 2000ஆம் ஆண்டின் மொ.உ.உற்பத்திகள் 10.7 சதவீதத்திலிருந்து 2001இல் 7.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக ஆடைகள் (14.7 சதவீதம்), ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் (10.3 சதவீதம்), வேளாண்மை உற்பத்திகள் (7.2 சதவீதம்) என்பனவற்றில் பிரதிபலிக்கப்பட்டன. ஆடை ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மட்டும் மொத்த ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியில் 62 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்கு வகைகூறியது. இது, இலங்கை போன்ற தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்கள் மோசமான வெளிநாட்டு வர்த்தக அதிர்வுகளினால் பாதிக்கப்படும் தன்மை மற்றும் நாட்டின் ஏற்றுமதி உயர்வினை மீள் பரிசீலனை செய்வதற்கான தூண்டுதல் ஆகியவற்றை இரு பரிமாணங்களில் எடுத்துக்காட்டியது. முதலாவது, ஒன்று அல்லது இரண்டு ஏற்றுமதிச் சந்தைகளில் ஏற்றுமதி கவனத்தைச் செலுத்துவது, அச்சந்தைகளில் ஏற்படும் அதிர்வுகளினால் இலங்கை பெருமளவிற்கு பாதிப்புறச் செய்யும். இலங்கை ஆடைகளுக்கான மிகப்பெரும் ஏற்றுமதிச் சந்தையான ஐக்கிய அமெரிக்கா ஏறத்தாழ 64 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் ஐரோப்பிய ஒன்றியம் ஏறத்தாழ 30 சதவீதத்திற்கு வகைகூறி இவ்விரு சந்தைகளிலும் இலங்கை மோசமான நிகழ்வுகளை எதிர்நோக்கியமை வெளிப்படுத்தியது. இரண்டாவது, இலங்கை ஆடை ஏற்றுமதிகளில் அளவுக்கதிகமாக தங்கியிருந்தமை (மொத்த ஏற்றுமதிகளில் ஆடை ஏற்றுமதிகள் 50 சதவீதத்திற்கும் கூடுதலாக வகைகூறின) அத்துறையில் மோசமான மாற்றங்களைத் தோற்றுவிக்கும் விதத்தில் இதனைப் பெருமளவிற்குப் பாதித்தது. பல்நூலிழை தொடர்பான உடன்படிக்கை 2005 அளவில் கட்டம் கட்டமாக நிறுத்தப்படவுள்ளமையின் காரணமாக இவை தொடர்பான கரிசனைகள் குறிப்பிடத்தக்கனவாகவுள்ளன. இலங்கை போன்று வர்த்தகத்தில் பெருமளவிற்கு தங்கியிருக்கும் நாடொன்றில் (வர்த்தகம்/மொ.உ.உற்பத்தி விகிதம் 70 சதவீதத்திற்கு மேல்) இழப்புக்களுக்கு அளவிற்கு அதிகமாக ஆளாகும் தன்மையை ஏற்றுமதியில் பன்முகப்படுத்துவதன் மூலம் குறைப்பது பொருளாதாரத்தின் மீட்சியை வலுப்படுத்துவது

1. இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளை உள்ளடக்குகின்றது.

## அட்டவணை 9.1
## சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை

(வர்த்தக வங்கிகளின் வெ.நா.வ.தொ. பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் பகுதியொன்றாக உள்ளடக்கப்பட்டுள்ளது)(அ)

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1997 | 1998 | 1999 | 2000 | 2001(ஆ) | 1997 | 1998 | 1999 | 2000 | 2001(ஆ) |
| வர்த்தக நிலுவை | -1225 | -1092 | -1369 | -1798 | -1157 | -71833 | -69742 | -96702 | -134176 | -102592 |
| ஏற்றுமதிகள் | 4,639 | 4,798 | 4,610 | 5,522 | 4,817 | 274,194 | 310,401 | 325,170 | 420,114 | 430,372 |
| இறக்குமதிகள் | 5,864 | 5,889 | 5,979 | 7,320 | 5,974 | 346,026 | 380,142 | 421,873 | 554,290 | 532,964 |
| பணிகள்: (தேறிய) (இ) | 159 | 145 | 147 | 38 | 108 | 9,386 | 9,300 | 10,342 | 2,907 | 9,514 |
| பெறுகைகள் | 875 | 914 | 968 | 953 | 1,267 | 51,692 | 59,084 | 68,132 | 72,187 | 113,071 |
| கொடுப்பனவுகள் | 716 | 770 | 820 | 915 | 1,159 | 42,306 | 49,783 | 57,791 | 69,280 | 103,557 |
| வருமானம் (தேறிய) (ஈ) | -160 | -180 | -254 | -305 | -280 | -9417 | -11556 | -17831 | -23009 | -25011 |
| பெறுகைகள் | 234 | 214 | 167 | 152 | 93 | 13,792 | 13,882 | 11,810 | 11,568 | 8,329 |
| கொடுப்பனவுகள் | 393 | 394 | 421 | 456 | 374 | 23,210 | 25,437 | 29,640 | 34,577 | 33,340 |
| பொருட்கள், பணிகள் வருமானம் (தேறிய) | -1225 | -1127 | -1476 | -2064 | -1330 | -71864 | -71997 | -104191 | -154278 | -118089 |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) | 788 | 848 | 887 | 974 | 938 | 46,494 | 54,843 | 62,472 | 73,620 | 83,716 |
| பெறுகைகள் (உ) | 922 | 999 | 1056 | 1160 | 1125 | 54,445 | 64,585 | 74,356 | 87,697 | 100,427 |
| கொடுப்பனவுகள் | 135 | 151 | 169 | 186 | 187 | 7,951 | 9,742 | 11,884 | 14,078 | 16,710 |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 44 | 52 | 26 | 24 | 22 | 2,625 | 3,359 | 1,816 | 1,801 | 1,925 |
| நடைமுறைக் கணக்கு | -393 | -226 | -563 | -1066 | -370 | -22745 | -13795 | -39903 | -78857 | -32448 |
| மூலதன மற்றும்நிதியியல் கணக்குகள் | 602 | 413 | 373 | 443 | 585 | 30,691 | 26,570 | 30,473 | 31,827 | 26,849 |
| மூலதனக் கணக்கு | 87 | 80 | 80 | 50 | 197 | 5,140 | 5,109 | 5,650 | 3,795 | 4,373 |
| மூலதன மாற்றல்கள் (தேறிய) | 87 | 80 | 80 | 50 | 197 | 5,140 | 5,109 | 5,650 | 3,795 | 4,373 |
| பெறுகைகள் (ஊ) | 91 | 84 | 86 | 56 | 203 | 5,386 | 5,410 | 6,018 | 4,230 | 4,890 |
| கொடுப்பனவுகள் | 4 | 5 | 5 | 6 | 6 | 246 | 301 | 368 | 435 | 517 |
| நிதியியல் கணக்குகள் | 515 | 334 | 293 | 393 | 389 | 25550 | 21461 | 24823 | 28032 | 22476 |
| நீண்டகாலம் | 716 | 398 | 435 | 304 | 164 | 37,029 | 25,906 | 30,985 | 22,594 | 14,357 |
| நேரடி முதலீடுகள் | 430 | 193 | 177 | 176 | 172 | 25,504 | 12,379 | 12,449 | 13,319 | 15,271 |
| வெளிநாட்டு நேரடிமுதலீடு | 129 | 137 | 177 | 173 | 82 | 7,587 | 8,846 | 12,449 | 13,119 | 7,310 |
| தனியார் மயமாக்கல் பெறுகைகள் | 301 | 56 | 0 | 3 | 90 | 17,918 | 3,533 | 0 | 200 | 7,961 |
| தனியார் நீண்டகால (தேறிய)(இ) | 47 | 2 | 196 | 82 | -257 | 3,054 | 352 | 14,086 | 5,622 | -22,898 |
| உட்பாய்ச்சல் (எ) | 150 | 146 | 361 | 298 | 44 | 8,741 | 9,686 | 25,727 | 22,134 | 4,012 |
| வெளிப்பாய்ச்சல் (ஊ) | 102 | 145 | 165 | 216 | 301 | 5,687 | 9,334 | 11,641 | 16,512 | 26,910 |
| அரச நீண்டகால (தேறிய) (ஏ) | 239 | 203 | 62 | 47 | 249 | 8,471 | 13,175 | 4,451 | 3,653 | 21,984 |
| உட்பாய்ச்சல் | 500 | 493 | 381 | 355 | 575 | 24,761 | 31,896 | 26,896 | 26,965 | 51,193 |
| வெளிப்பாய்ச்சல் | 262 | 290 | 319 | 308 | 326 | 16,291 | 18,721 | 22,445 | 23,312 | 29,209 |
| குறுங்கால | -201 | -64 | -142 | 88 | 225 | -11479 | -4445 | -6162 | 5438 | 8119 |
| பட்டியலிடப்பட்டமுதலீடுகள் | 13 | -24 | -13 | -45 | -11 | 749 | -1521 | -886 | -3355 | -1025 |
| தனியார் குறுங்கால (தேறிய) (ஈ) | -20 | 8 | -10 | 100 | -18 | -1195 | 414 | -667 | 7569 | -1625 |
| வர்த்தக வங்கிச் சொத்துக்கள் (தேறிய)(ஈ) | -323 | 180 | -19 | -141 | 183 | -23384 | 5,035 | 1,766 | -18,736 | -9,076 |
| வர்த்தக வங்கிப் பொறுப்புக்கள்(தேறிய) (ஈ) | 129 | -228 | -101 | 174 | 71 | 12,352 | -8374 | -6375 | 19960 | 19845 |
| அரச குறுங்கால (தேறிய) (ஈ) | - | - | - | - | - | - | - | - | - | - |
| சிஎஉ ஒதுக்கீடுகள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| பெறுமதி சீராக்கம் | - | - | - | - | - | -562 | 8,559 | 2,103 | 5,189 | 13,530 |
| பிழைகளும் தவறுகளும் | -46 | -151 | -73 | 101 | 5 | 8,461 | -7534 | -6857 | 10902 | 9,498 |
| மொத்த நிலுவை(ஐ) | 163 | 37 | -263 | -522 | 220 | 15,845 | 13,800 | -14,184 | -30,939 | 17,430 |
| நாணய அசைவுகள்(ஐ) | -163 | -37 | 263 | 522 | -220 | -15845 | -13800 | 14184 | 30939 | -17430 |
| செலாவணி வீதங்கள் ரூபா/ ஐ.அ.டொ. | | | | | | 58.99 | 64.59 | 70.39 | 75.78 | 89.36 |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான விகிதம் சதவீதத்தில் | | | | | | | | | | |
| வர்த்தகக் கணக்கு | | | | | | -8.1 | -6.9 | -8.7 | -10.7 | -7.3 |
| நடைமுறைக் கணக்கு | | | | | | -2.6 | -1.4 | -3.6 | -6.3 | -2.3 |
| கொடைகளற்ற நடைமுறைக்கணக்கு | | | | | | -2.8 | -1.7 | -3.8 | -6.4 | -2.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இவ்விபரம் பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் 5ஆம் பதிப்புடன் சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் 1994இலிருந்து வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித்தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்பட்டுள்ளன.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) 2001யூலையில் விமான நிலையம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் அழிக்கப்பட்ட விமானத்துக்கான காப்புறுதிக் கோரல்களாக சிறிலங்கன் எயர்லைன்சினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 382.4 மில்லியனை 2001இன் பணிவரவுகள் உள்ளடக்கும் வேளையில், விமானத்தை வாடகைக்கு விட்டோருக்குச் செலுத்தப்பட்ட ஐ.அ.டொலர் 292.8 மில்லியனும் 2001க்கான பணிக் கொடுப்பனவுகள் உள்ளடக்கியுள்ளன. இக்காப்புறுதிக் கோரல்களின் தேறிய வரவு ஐ.அ.டொலர் 89.6 மில்லியனாகக் காணப்பட்டது.

(ஈ) 1994இலிருந்து சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களை திரட்டும்போது வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித்தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்படுகின்றது. சென்மதி நிலுவைப் புள்ளி விபரங்களைத் திரட்டும்போது வெ.நா.வ.பிரிவுகளும் இலங்கையில் வதிவற்றோரும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்கில் சேர்க்கப்படும் வேளையில் வெ.நா.வ.தொ.பிரிவுகளும் இலங்கையில் வதிவுள்ளோரும சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கள்களில் தவிர்க்கப்படுகின்றன.

(உ) 1990இல் வளைகுடா யுத்தத்தின் காரணமாக குவைத்தில் வேலைவாய்ப்பை இழந்த இலங்கையருக்கு 1997,1998,1999 ஆகிய ஆண்டுகளில் முறையே 26,101, 31,279, 37,343 மற்றும் 29,323 இலங்கையர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட ஐ.அ.டொலர் 64 மில்லியன், ஐ.அ.டொலர் 78 மில்லியன், ஐ.அ.டொலர் 85 மில்லியன், 45 மில்லியன் இழப்பீட்டை உள்ளடக்குகின்றது. மேலும் 1999இல் 18,244 இலங்கையர்களால் இரண்டாம் சுற்றுக் கொடுப்பனவுகளாக ஆளொருவருக்கு ஐ.அ.டொலர் 1,500 அடிப்படையில் ஐ.அ.டொலர் 27 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டது.

(ஊ) தனியார் மூலதன வெளிப்பாய்ச்சல்களின் கீழுள்ள தொழில்நுட்ப கடன்தீர்ப்பனவு தொடர்பான ரூ.147.6 மில்லியனையும், 2001யூலையில் வானூர்தி நிலைய தாக்குதலின்போது அழிக்கப்பட்ட வானூர்திகளின் எஞ்சிய மூலதனத்திற்காக 2001இல் பெறப்பட்ட மூலதன மாற்றல் பெறுகைகளின் கீழான தொடர்பான சீராக்கங்களையும் உள்ளடக்குகிறது.

(எ) முன்னைய ஆண்டுகளில் முற்பணம் செலுத்தப்பட்டிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வானூர்திகளுக்கான மூலதன உட்பாய்ச்சலுக்கு 1995இலும், 2000இலும் செய்யப்பட்ட சீராக்கங்களையும் உள்ளடக்குகின்றது.

ஏ) மேலதிக தகவல்களை உள்ளடக்குவதற்காக 1994இன் பின்னரான தரவுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(ஐ) நாணயத் துறையிலான எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டிறுதிச் செலாவணி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.


**அட்டவணை 9.2**
**வெளிநாட்டு வர்த்தகத்தின் செயலாற்றம்**

| ஆண்டு | வளர்ச்சி வீதம்(அ) | | விலைச் சுட்டெண் (1997=100) | | வர்த்தக மாற்று விகிதம் (ஆ) | மொ. உ. உற்பத்தியின் சதவிகிதமாக | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஏற்று மதிகள் | இறக்கு மதிகள் | ஏற்று மதிகள் | இறக்கு மதிகள் | | ஏற்று மதிகள் | இறக்கு மதிகள் |
| 1999 (இ) | -3.9 | 1.5 | 114.6 | 106.4 | 107.7 | 29.2 | 37.9 |
| 2000 (இ)(ஈ) | 19.8 | 22.4 | 125.2 | 123.8 | 101.1 | 33.1 | 43.9 |
| 2001 (உ) | -12.8 | -18.4 | 139.4 | 140.5 | 99.2 | 30.7 | 38.0 |

*மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.*
*இலங்கை மத்திய வங்கி.*

(அ) வளர்ச்சி வீதங்கள் ஐ.அ.டொலர் நியதிகளில் தரப்பட்டுள்ளது.
(ஆ) (ஏற்றுமதிச் விலைச்சுட்டெண்/இறக்குமதி விலைச் சுட்டெண்) X 100.
(இ) 1999 மற்றும் 2000ஆம் ஆண்டு இறக்குமதிச் சுட்டெண்கள் வானூர்தி இறக்குமதிகளைத் தவிர்த்து கணிக்கப்பட்டவை.
(ஈ) திருத்தியமைக்கப்பட்டது.
(உ) தற்காலிகமானவை.

**வரைபடம் 9.1**
**சென்மதி நிலுவை (அ) (ஆ)**




(அ) பகுப்பாயவு, வடிவமைப்பு, சென்மதி நிலுவை கைநூல 4இலிருந்த சென்மதி நிலுவை கைநூல் 5இற்கு மாற்றமடைந்தமையின் காரணமாக வர்த்தக வங்கிகளின் சொத்துக்களிலும் பொறுப்புக்களிலும் ஏற்பட்ட மாற்றங்கள் குறுங்கால மூலதனமாகக் கருதப்படுகின்றது.
(ஆ) 1994ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்த வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது.


மட்டுமன்றி மாற்றமடைந்து வருகின்ற உலகளாவிய சந்தைப் போக்குகளுடன் இணைந்து செல்லும் வேளையில் போட்டித்தன்மை மிக்க அனுகூலங்களை பயன்படுத்திக் கொள்ளவும் செய்யும்.

அதேவேளை இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, முக்கியமாக முதலீட்டுப் பொருள்கள் (24.9 சதவீதம்), பெற்றோலிய உற்பத்திகள் (18.9 சதவீதம்), நுகர்வுப் பொருள்கள் (11.0 சதவீதம்), புடவைகள் (10.3 சதவீதம்) மற்றும் ஏனைய இடைநிலைப் பொருட்கள் (10.1 சதவீதம்) என்பனவற்றில் காணப்பட்டன. ஆண்டு முழுவதிலும் முதலீட்டுப் பொருட்களில் ஏற்பட்ட பெருமளவு வீழ்ச்சி எதிர்கால பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு குந்தகம் விளைவிக்கும் ஆகையால் இது முக்கிய கரிசனைக்குரியதொரு விடயமாகும். உலகளாவிய மெதுவானபோக்கின் சாதகமான அபிவிருத்திகளில் ஒன்றாக மசகெண்ணெய்யின் விலைகள் இவ்வாண்டில் 15 சதவீதத்திற்கும் கூடுதலாக வீழ்ச்சியுற்றமை குறிப்பிடத்தக்கது. இது இலங்கையின் சென்மதி நிலுவையின் மீது குறிப்பிடத்தக்க சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு ரூபா மிதக்கவிடப்பட்டமையுடன் முன்மதியுடைய வழிமுறையொன்றாக இன்றியமையாதனவல்லா இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட மேலதிகக் கட்டணம், நலிவுற்ற உள்நாட்டுக் கேள்வி, சலுகை நியதிகளில் உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்கு அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வசதிகள் இடைநிறுத்தப்பட்டமை என்பனவே காரணங்களாகும்.

கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் எல்.ரி.ரி.ஈ.யின் தாக்குதலில் அழிக்கப்பட்ட வானூர்திக்கெதிரான காப்புறுதிக் கோரல்களின் தீர்ப்பனவு காரணமாக சிறிலங்கன் எயர்லைன்சுக்கு ஐ.அ.டொலர் 90 மில்லியன் உட்பாய்ந்தமையின் விளைவாக பணிகள் கணக்கில் மிகை தோன்றியது. இவ்வுட் பாய்ச்சல் நீக்கிவிடுமிடத்து, பணிகள் கணக்கின் மிகை இவ்வாண்டில் ஏறத்தாழ 50 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு சுற்றுலாவிலிருந்தான பெறுகைகள் 15.5 சதவீதத்தினாலும் துறைமுகம் தொடர்பான பணிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட மெதுவான போக்குமே காரணமாகும். வெளிநாட்டுப் படுகடன் இருப்பில் அதிகரிப்புக் காணப்பட்டபோதும், உலகளாவிய வட்டி வீதங்களில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சினால் வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை வளைகுடாப் போரினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் 2000ஆம் ஆண்டில் நிறைவடைந்தமையின் பின்னர் தேறிய தனியார் மாற்றல்கள் குறைவடைந்தமையின் காரணமாக தேறிய நடைமுறை மாற்றங்கள் 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இச்சிறப்பு விடயங்கள் நீங்கலாக, தேறிய தனியார் மாற்றல் பெறுகைகள் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவு செய்தன. வர்த்தகம், பணிகள், வருமானம் மற்றும் மாற்றல் கணக்குகளில் ஏற்பட இவ்வபிவிருத்திகளின் விளைவாக நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை 2000ஆம் ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 6.4 சதவீதத்திலிருந்து 2001இல் மொ.உ.உற்பத்தியின் 2.5 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் ஒடுக்கமுற்று செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தை குறைவடையச் செய்தது.

அரசிற்கான கடன் மூலதனத்திலும் குறுங்கால மூலதன பாய்ச்சலிலும் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக மூலதன மற்றும் நிதியியல் கணக்குகள் ஓரளவு மேம்பாட்டினைக் காட்டின. மோசமான வெளிநாட்டுச் சூழல், நிச்சயமற்ற அரசியல் நிலைமை ஆகிய இரண்டினதும் காரணமாக வெளிநாட்டு நேரடி

வரைபடம் 9.2
வெளிநாட்டு வர்த்தகம்




(அ) பகுப்பாய்வு, வடிவமைப்பு, சென்மதி நிலுவை கைநூல் 4இலிருந்த சென்மதி நிலுவை கைநூல் 5இற்கு மாற்றமடைந்தமையின் காரணமாக தற்பொழுது நடைமுறைக் கணக்கில் தனி விடயமாகக் காணப்படும் வருமானம் பணிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

முதலீடுகள் கடுமையாக வீழ்ச்சியடைந்தன. சொத்துப் பட்டியல் தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவு செய்ததெனினும், முன்னைய ஆண்டிலும் பார்க்க மிகக் குறைவாகவே காணப்பட்டன. தனியார் மயமாக்கல் பெறுகைகள் முன்னைய ஆண்டிலும் பார்க்க அதிகரித்தபோதும் ஆரம்ப எதிர்பார்ப்புக்களிலும் பார்க்க மிகக்கீழேயே காணப்பட்டன. நடைமுறைக் கணக்கு மற்றும் மூலதன மற்றும் நிதியியல் கணக்குகளில் காணப்பட்ட இவ்வபிவிருத்திகள், முன்னைய இரு ஆண்டுகளிலும், வெளிநாட்டு ஒதுக்குகளில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு மாறாக, சென்மதிநிலுவைகள் கொடுப்பனவுகளிலுள்ள திரண்ட நிலுவையில் ஐ.அ.டொலர் 220 மில்லியன் கொண்ட மிகையொன்றை தோற்றுவித்தன.

நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் இருப்பு ஐ.அ.டொலர் 8566 மில்லியனிற்கு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தனியார் துறைக்கான படுகடனிலும், குறுக்கு செலாவணிமீத விளைவிலும் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். எனினும், மொ.உ.உற்பத்தியுடன் தொடர்புபடுத்தி பார்க்கையில் அதிகரிப்பு 2000ஆம் ஆண்டின் 54.5 சதவீதத்திலிருந்து 2001இன் 54.7 சதவீதமாக சிறிதளவு மட்டும் அதிகரித்தமைக்கு ஐ.அ.டொலர் நியதிகளில் மொ.உ.உற்பத்தி மிக மெதுவாக வளர்ச்சியடைந்தமையே காரணமாகும். தொகை வடிவிலான படுகடன் இருப்பு (76 சதவீதம்) சலுகைரீதியான படுகடனை உள்ளடக்கியிருந்தது. பொருள்கள், பணிகள், வருமானம் மற்றும் நடைமுறை தனியார் மாற்றல்களிலிருந்தான மொத்தப் பெறுகைகள் வீழ்ச்சியடைந்தபோதும் உலக வட்டி வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் படுகடன்பணி வீதம் 12.2 சதவீதத்திலிருந்து 11.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

சுதந்திரமாக மிதக்கவிடப்படுகின்ற செலாவணி வீத அமைப்பிற்கு நகர்ந்தமையின் மூலம் செலாவணி வீத கொள்கை தொடர்பான முக்கிய மாற்றமொன்று 2001 சனவரி 23ஆம் நாளன்று அறிமுகப்படுத்தப்பட்டது. சுதந்திரமான மிதக்கவிடலின் பின்னர் உடனடியாக மிகையாக தற்காலிகமாக உயர்வடைந்த செலாவணிவீதம் பின்னர் உறுதியடைந்தது. செலாவணிவீதம் தற்பொழுது, சந்தைக் கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளின் மூலம் நிர்ணிக்கப்படுகிறது. செலாவணி வீதத்தில் ஏற்படும் மிகையான

தளம்பல்களைக் குறைப்பதற்காக அவ்வப்போது மத்திய வங்கி தலையிடுகின்றது. இவ்வாண்டு முழுவதையும் பார்க்கையில் ஐ.அ.டொலருக்கெதிராக ரூபா 11.3 சதவீதத்தினாலும் புதிய செலாவணிவீத அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் 8.6 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது. அதேவேளை ஐந்து கூடை நாணயங்களுக்கெதிராக (கூடை நாணயம் ஐ.அ.டொலர், இசுடேர்லின் பவுண், யப்பானிய யென், டியூச் மார்க் மற்றும் பிரான்சிய பிராங்கு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது) இலங்கை ரூபாவின் உண்மைப் பயன்தரு செலாவணிவீதம் 1.4 சதவீதத்தினால் உயர்வடைந்து வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த உள்நாட்டு பணவீக்க வீதத்தினைப் பிரதிபலித்தது.

நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2001 இறுதியில் ஐ.அ.டொலர்கள் 2,238 மில்லியனுக்கு 5 சதவீதத்தினால் உயர்வடைந்ததுடன் 2001இன் 4.5 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தது. அதேவேளை மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 1338 மில்லியனாக அமைந்து 2000ஆம் ஆண்டு இறுதியினை விட 28 சதவீதம் உயர்வானதாக இருந்ததுடன் இது 2.7 மாத இறக்குமதிகளை நிதியிடப் போதுமானதாக இருந்தது.

## 9.2 ஏற்றுமதிகள்

2001ஆம் ஆண்டில் ஏற்றுமதித்துறை கடுமையான பின்னடைவைக் கொண்டிருந்தமைக்கு ஏற்றுமதிகளின் அளவு, விலை இரண்டும் 2000ஆம் ஆண்டிலும் பார்க்க குறைவாக இருந்தமையே காரணமாகும். 2001ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதகாலப் பகுதியில் 3 சதவீதத்தினால் வளர்ச்சிடைந்த மொத்த ஏற்றுமதி வருவாய்கள் முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளில் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பா ஒன்றியம் என்பனவற்றில் காணப்பட்ட மெதுவான பொருளாதாரப் போக்கினைத் தொடர்ந்து 2001 மேயின் பின்னர் வீழச்சியடையத் தொடங்கியது. கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலயத்திலும் பின்னர் ஐக்கிய அமெரிக்காவிலும் நடத்தப்பட்ட தாக்குதல், சிறப்புத் தீர்வைச் சலுகைகளின் ஆதரவு காரணமாக ஆடை ஏற்றுமதிச் சந்தைகளுக்கு துணைச் சகாரா நாடுகளிலிருந்து எழுந்த அதிகரித்த போட்டி என்பன நிலைமையை மேலும் மோசமாக்கின. இத்தாக்கம் ஏற்றுமதிகளின் அனைத்து முக்கிய வகைகளிலும் உணரப்பட்டது. யப்பானிய பொருளாதாரத்தில் காணப்பட்ட மந்தமும் இலங்கையின் ஏற்றுமதிகளில் குறிப்பாக இறால், ஏனைய மீன் உற்பத்திகள் இரத்தினக்கற்கள், ஆபரணங்கள் மற்றும் வைரங்கள் என்பனவற்றிற்கான சந்தையை நலிவுறச் செய்தன. சுதந்திர அரசுகளின் பொதுநலவலயத்திலிருந்தும் சில ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தேயிலைக்கு உயர்ந்த கேள்வி காணப்பட்டபோதும் 2001 சனவரியிலிருந்து தேயிலையின் விலை தொடர்ச்சியாக வீழ்ச்சிடைந்தமைக்கு உலகளாவிய பொருளாதாரத்தின் மெதுவான போக்கும் முக்கிய உற்பத்தி நாடுகளின் வழங்கல் அதிகரித்தமையுமே காரணங்களாகும்.

மொத்த ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 4,817 மில்லியனாக விளங்கி 2000ஆம் ஆண்டின் ஏற்றுமதிகளின் உயர்ந்த தளத்தினை (ஐ.அ.டொலர் 5,522 மில்லியன் இது 19.9 சதவீதம் கொண்ட வளர்ச்சி) விட 12.8 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. இவ்வீழ்ச்சி குறைந்த ஏற்றுமதி அளவு (8 சதவீம் கொண்ட வீழ்ச்சி) விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி (5.2 சதவீதமாகும்) இரண்டினதும் விளைவாகும்.

### ஏற்றுமதி அமைப்பு

1977இல் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்ட பின்னர், கைத்தொழில் ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்து, ஏற்றுமதிகளின் விரிவாக்கத்திற்கான முக்கிய பங்களிப்பாளராக மாறியதுடன், 1986இல் பெருந்தோட்ட வேளாண்மைப் பண்டங்களின் பங்கினையும் விஞ்சியது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கு 1977இன் 14 சதவீதத்திலிருந்து 2001இல் 77 சதவீதத்திற்கு படிப்படியாக அதிகரித்தது. இவ்விகிதம் கடந்த 9 ஆண்டுகளாக ஏறத்தாழ 75 சதவீதமாகக் காணப்பட்டது. 1986இல் கைத்தொழில் ஏற்றுமதிகளுக்குள்ளே புடவை மற்றும் ஆடைகள் இலங்கையின் தனியொரு பெரும் ஏற்றுமதி விடயமாக விளங்கியதுடன் 2001இன் கைத்தொழில் ஏற்றுமதிகளில் 69 சதவீதத்திற்கும் பங்களித்தது.

2001ஆம் ஆண்டின் பாரிய பின்னடைவிற்குப் பின்னரும் கூட ஏற்றுமதி அமைப்பு சிறிதளவு மாத்திரமே மாற்றமடைந்தது. மொத்த ஏற்றுமதிகளில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கு 2000ஆம் ஆண்டின் 78 சதவீதத்திலிருந்து 2001இல் 77 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகளின் பங்கு ஒரு சதவீதப் புள்ளியினால் 53 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மற்றைய அனைத்து முக்கிய கைத்தொழில் துறைகளினதும் பங்குகள் முன்னைய ஆண்டினைப் போன்று பெரும்பாலும் மாற்றமின்றிக் காணப்பட்டது. வேளாண்மை ஏற்றுமதிகளின் பங்கு 2000ஆம் ஆண்டின் 18 சதவீதத்திலிருந்து 2001ஆம்

**அட்டவணை 9.3**
**ஏற்றுமதிகளின் அமைப்பு**

| வகை | ஐ.அ. டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1997 | 1998 | 1999 | 2000(அ) | 2001(ஆ) | 1997 | 1998 | 1999 | 2000(அ) | 2001(ஆ) |
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் | 1,060 | 1,088 | 947 | 1,005 | 932 | 62,667 | 70,225 | 66,751 | 76,271 | 83,252 |
| தேயிலை | 719 | 780 | 621 | 700 | 690 | 42,533 | 50,280 | 43,728 | 53,133 | 61,602 |
| இறப்பர் | 79 | 44 | 33 | 29 | 24 | 4,640 | 2,808 | 2,305 | 2,179 | 2,129 |
| தெங்கு | 118 | 94 | 129 | 121 | 82 | 6,939 | 6,110 | 9,119 | 9,174 | 7,348 |
| உள்வீட்டு உற்பத்திகள் | 82 | 56 | 84 | 77 | 41 | 4,864 | 3,632 | 5,973 | 5,786 | 3,639 |
| ஏனையவை | 35 | 38 | 45 | 45 | 42 | 2,075 | 2,478 | 3,146 | 3,388 | 3,709 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 145 | 170 | 165 | 155 | 136 | 8,555 | 11,027 | 11,598 | 11,784 | 12,174 |
| 2. கைத்தொழில் ஏற்றுமதிகள் (ஆ) (இ) | 3,436 | 3,607 | 3,551 | 4,283 | 3,710 | 203,114 | 233,508 | 250,516 | 325,931 | 331,687 |
| உணவு, குடிபானம், புகையிலை | 91 | 118 | 86 | 152 | 128 | 5,354 | 7,586 | 6,093 | 11,573 | 11,389 |
| புடவைகளும் ஆடைகளும் | 2,274 | 2,460 | 2,425 | 2,982 | 2,543 | 134,455 | 159,303 | 171,068 | 226,930 | 227,360 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 97 | 73 | 74 | 98 | 68 | 5,743 | 4,662 | 5,210 | 7,414 | 6,053 |
| இறப்பர் உற்பத்திகள் | 178 | 178 | 161 | 196 | 172 | 10,513 | 11,528 | 11,350 | 14,924 | 15,417 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 55 | 54 | 49 | 47 | 42 | 3,246 | 3,478 | 3,442 | 3,558 | 3,791 |
| தோலும் காலணியும | 183 | 214 | 201 | 176 | 150 | 10,812 | 13,855 | 14,140 | 13,391 | 13,400 |
| பொறிகளும் கருவிகளும் | 204 | 182 | 201 | 244 | 245 | 12,076 | 11,811 | 14,155 | 18,594 | 21,895 |
| வைரங்களும் ஆபரணங்களும்(ஈ) | 142 | 131 | 171 | 192 | 185 | 8,384 | 8,491 | 12,064 | 14,546 | 16,495 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 212 | 197 | 184 | 197 | 178 | 12,531 | 12,794 | 12,995 | 15,002 | 15,887 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 90 | 60 | 64 | 97 | 86 | 5,271 | 3,863 | 4,540 | 7,352 | 7,666 |
| இரத்தினக் கற்கள் | 84 | 56 | 61 | 93 | 82 | 4,899 | 3,577 | 4,326 | 7,091 | 7,276 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 6 | 4 | 3 | 3 | 4 | 372 | 286 | 214 | 262 | 390 |
| 4. பாகுபடுத்தப்படாதவை (இ) (உ) | 53 | 43 | 48 | 137 | 88 | 3,141 | 2,802 | 3,363 | 10,560 | 7,767 |
| மொத்த ஏற்றுமதிகள் | 4,639 | 4,798 | 4,610 | 5,522 | 4,817 | 274,193 | 310,398 | 325,171 | 420,114 | 430,372 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது.
(இ) சீராக்கப்பட்டது.
(ஈ) சுங்கத்தினால் 1998இலும் 1999இலும் பதிவு செய்யப்பட்ட வைரங்களின் ஏற்றுமதிகள், முக்கிய ஏற்றுமதியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளால் சீராக்கஞ் செய்யப்பட்டது.
(உ) மீள் ஏற்றுமதிகள் உட்பட.


மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
முக்கிய வைரக்கல் இறக்குமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி.

ஆண்டில் 19 சதவீதத்திற்கு அதிகரித்து தேயிலை ஏற்றுமதியில் ஏற்பட்ட ஒப்பீட்டுரீதியில் சிறிய வீழ்ச்சியின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. வேளாண்மை உற்பத்திகளுள் தேயிலையின் பங்கு 2000ஆம் ஆண்டின் 70 சதவீதத்திலிருந்து 2001இல் 74 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு தெங்கு, இயற்கை இறப்பர் மற்றும் மிளகு ஏற்றுமதிகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சிகளே காரணமாகும். 2000ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதிகள் மொத்த ஏற்றுமதிகளில் 14 சதவீதத்திற்கு வகைகூறின. கறுவா, தயாரிக்கப்படாத புகையிலை, மிளகு, கராம்பு, காய்கறிகள் மற்றும் பழவகை என்பனவற்றை முக்கியமாகக் கொண்ட பெருந்தோட்டமல்லா வேளாண்மை இறுதிச் சகாப்தத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டி இறப்பர் மற்றும் தெங்குத்துறைகள் வகித்த நிலைமையை விஞ்சிக்கொண்டன. பெருந்தோட்டமல்லா அனைத்து வேளாண்மை ஏற்றுமதிகளும் மொத்த வேளாண்மை உற்பத்திகளில் 15 சதவீதத்திற்கு வகைகூறின. மொத்த ஏற்றுமதியில் கனிப்பொருள் மற்றும் ஏனைய ஏற்றுமதிகளின் பங்கு ஒவ்வொன்றும் முன்னைய ஆண்டினைப் போன்று 2 சதவீதமாகக் காணப்பட்டன. ஏனைய ஏற்றுமதிகள் மின் ஏற்றுமதிகளிலான மின் உருவாக்கிகள், மின்வலுக் கருவிகளின் பாகங்கள் மற்றும் புடவை விடயங்களை உள்ளடக்கும்.


## கைத்தொழில் ஏற்றுமதிகள்

2001ஆம் ஆண்டில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2000ஆம் ஆண்டின் 21 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு மாறாக 13.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2000ஆம் ஆண்டில் வலுவான முறையில் வளர்ச்சியடைந்த புடவைகள் ஆடைகள் துறை குறைந்த கேள்வியின் காரணமாக 2000ஆம் ஆண்டு முழுவதும் பின்னடைவினைக் கொண்டிருந்தது. துணைச் சகாரா நாடுகளில் தோற்றம்

வரைபடம் 9.3
முக்கிய வகைகளின்படி ஏற்றுமதிகளின் பெறுமதிகள்




வரைபடம் 9.4
முக்கிய வகைகளின்படி கைத்தொழிலில் ஏற்றுமதிகளின் பெறுமதிகள்




பெற்றுவரும் ஆடைத் தயாரிப்பாளர்கள் ஐ.அமெரிக்க சந்தையில் சுதந்திரமான வழிவகைகளையும் தீர்வைச் சலுகைகளையும் அனுபவிப்பதனால் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு சவால் விடுப்பவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் குறைந்த செலவினையுடைய தொழிலாளர்களை அனுகூலமாகப் பெற்றிருக்கின்றனர். புடவை மற்றும் ஆடைகளின் பெறுமதி 2000ஆம் ஆண்டின் 23 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு மாறாக, 2001இல் 14.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. புடவை மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளின் அளவு 11.5 சதவீதத்தினாலும் விலைகள் 3.6 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. இவற்றுக்கான கேள்வி ஐக்கிய அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் குறிப்பாக, ஐக்கிய இராச்சியம், சேர்மனி, நெதர்லாந்து, பிரான்சு, பெல்ஜியம் மற்றும் இலக்சம்பேர்க் ஆகிய நாடுகளில் குறைவாகக் காணப்பட்டன. 2001ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள் சிறிதளவு மேம்பட்டதெனினும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் கடுமையாக வீழ்ச்சிடைந்தமைக்கு ஐக்கிய அமெரிக்காவில் காணப்பட்ட மெதுவான பொருளாதார வளர்ச்சி கேள்வியின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தியமையே காரணமாகும். ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 10.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2001 சனவரி 1ஆம் நாளிலிருந்து ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் புடவை மற்றும் ஆடைகளின் இறக்குமதி மீதான அனுமதிப் பங்கு கட்டுப்பாடுகளை அகற்றியபோதும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடை ஏற்றுமதிகள் ஆண்டு முழுவதும் தொடர்ந்து வீழ்ச்சிடைந்து 2001ஆம் ஆண்டு 20.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை விளைவித்தது. ஐரோப்பிய ஒன்றியம் உட்பட அனுமதிப் பங்கு அல்லா நாடுகளுக்கான ஆடை ஏற்றுமதிகளின் பங்கு 2000ஆம் ஆண்டின் 36 சதவீதத்திலிருந்து 2001ஆம் ஆண்டில் 34 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2001இல் ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் இலங்கையின் ஆடை ஏற்றுமதிகளில் 94 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கைக் கொள்வனவு செய்தன. 2001இல் கனடா, யப்பான், இசுபெயின், போர்த்துக்கல் மற்றும் கிரீஸ் என்பனவற்றிற்கான ஆடை ஏற்றுமதிகள் அதிகரித்தன. எனினும் இந் நாடுகளினால் வகைகூறப்பட்ட பங்கு மொத்த ஆடை ஏற்றுமதிகளில் 3 சதவீதமாக மட்டுமே காணப்பட்டது.

புடவை மற்றும் ஆடைகள் துறையிலுள்ள துணை வகைகளிடையே ஆடை ஏற்றுமதிகள் 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில்

புடவை ஏற்றுமதிகள் 38 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. நூலிழை மற்றும் தயாரிக்கப்பட்ட பொருட்களின் ஏற்றுமதிகள் முறையே 16 சதவீதத்தினாலும், 19 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. குறைந்த விலைகளின் தாக்கத்தினையும் உயர்ந்த போட்டியின் காரணமாகக குறைவடைந்த இலாபத்தினையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் புடவை மற்றும் ஆடைகள் துறைகளிலிருந்தான தேறிய வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,223 மில்லியனுக்கு 19 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. முன்னைய ஆண்டினைப் போன்றே, 90 சதவீதத்திற்கும் கூடுதலான புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகள் முதலீட்டுச் சபைக் கம்பனிகளிலிருந்தே மேற்கொள்ளப்பட்டன. முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகளின் ஏற்றுமதி வருவாய்கள் 2000ஆம் ஆண்டின் 24 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2001இல் 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. முதலீட்டுச் சபைக்குப் புறம்பான தொழில் முயற்சிகளின் ஏற்றுமதிகள் 2000ஆம் ஆண்டின் 17 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2001இல் 13 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

தொகுதியாகப் பார்க்கையில் மற்றைய அனைத்து வகைக் கைத்தொழில் ஏற்றுமதிகளும் 2000ஆம் ஆண்டின் 16 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கெதிராக 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. அவற்றில் பொறிகள், எந்திர மற்றும் மின்கருவிகளின் ஏற்றுமதிகள் சிறிதளவால் அதிகரித்தன. இவ்வகையானது மொத்தக் கைத்தொழில் ஏற்றுமதியில் 7 சதவீதத்திற்கு வகைகூறியது. 2001ஆம் ஆண்டில் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 172 மில்லியனுக்கு 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து அனைத்துதர டயர்களிலும் (புதுப்பிக்கப்பட்ட, திண்ம, மென்மையான) 20 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டமையைப் பிரதிபலித்தது. இவ் ஏற்றுமதிகள் 2001 மேயின் பின்னர் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தமைக்கு உலக பொருளாதாரத்தின் மெதுவானபோக்கும் அதனைத் தொடர்ந்து ஐரோப்பிய கேள்வி குறைவடைந்தமையே காரணமாகும். பரிசோதனை மற்றும் அறுவைச் சிகிச்சை மற்றும் கைத்தொழில்களுக்கான கையுறைகள் 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, குறைந்த கேள்வியைப் பிரதிபலித்தன. 2001ஆம் ஆண்டில் இவ்வகைக் கையுறைகள் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட மொத்த உற்பத்திகளில் 33 சதவீதத்திற்கு வகைகூறின. இறப்பரை அடிப்படையாகக் கொண்ட மற்றைய உற்பத்திகளான தட்டுக்கள், விரிப்புக்கள், உள்ளேயுள்ள ரியூப்புக்கள் மற்றும் தோற்றம் பெற்றுவரும் வெளிப்பாகங்கள் ஆடைகளுக்கான துணைப்பொருட்கள் மற்றும் மருந்தாக்கற் பொருட்கள் என்பனவற்றின் ஏற்றுமதி 2001இலும் தொடர்ச்சியாக விரிவடைந்தது. எனினும், இவ்வனைத்து உற்பத்திகளும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் மொத்த ஏற்றுமதிகளில் 8 சதவீதத்திற்கும் மட்டுமே வகைகூறின.

2001இல் உணவு, குடிபானம் மற்றும் புகையிலைத் துறையின் வருவாய்கள் 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு, 2001இல் இத்துணை வகையில் 74 சதவீதத்திற்கும் (2000ஆம் ஆண்டின் 84 சதவீதம்) பங்களித்த நண்டு, இறால், சிப்பி மற்றும் ஏனைய மீன் வகைகளின் ஏற்றுமதிகள் மிகக்கூடுதலாக வீழ்ச்சியடைந்தமையே காரணமாக இருந்தது. 2001இல் இறால் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்த கேள்வியே காரணமாகும். மீன் ஏற்றுமதிகளும் 27 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. நண்டு, சிப்பி இன வகைகள் மற்றும் ஏனைய மீன் உற்பத்திகளின் ஏற்றுமதிகள் யப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளிலேயே குவிந்திருந்தன. அந்நாடுகளில் காணப்பட்டன குறைந்த நுகர்வோர் கேள்வி மீன் உற்பத்திகளின் விலைகளைப் பாதித்து, ஏற்றுமதிகளிலிருந்தான மொத்தப் புரள்வினைக் குறைத்துவிட்டது. சிங்கப்பூர், கொங்கொங் மற்றும் கிழக்காசிய நாடுகளில் இவ்வுற்பத்திகளுக்கான கேள்வி ஆண்டு முழுவதும் உறுதியாகக் காணப்பட்டது. மற்றைய உணவு ஏற்றுமதிகளிடையே கொக்கோ தயாரிப்புக்கள் தகரத்திலும், போத்தல்களிலுமடைக்கப்பட்ட பழவகை, பழ மற்றும் காய்கறிச் சாறுகள், தயாரிக்கப்பட்ட புகையிலை, தேங்காய் பால்மா, தேங்காய் களிம்பு, தகரத்தில் அல்லது போத்தலிலடைக்கப்பட்ட பழவகை, மோல்ட் கலக்கப்பட்ட பால், இனிப்பூட்டப்பட்ட விசுக்கோத்துக்கள், கனிமநீர் மற்றும் விலங்குத்தீன் என்பன 2000ஆம் ஆண்டினைவிட மேம்பாட்டினைக் கொண்டிருந்தன.

2001ஆம் ஆண்டின் வைர ஏற்றுமதிகள் 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து பெல்ஜியம், இசுரேல், வியட்நாம், ஐக்கிய அமெரிக்கா போன்ற முக்கிய வர்த்தகப்படுத்தல் மையங்களின் குறைந்த

கேள்வியைப் பிரதிபலித்தன. இச்சந்தைகளிலுள்ள வாங்குனர்கள் பதனிடப்பட்ட வைரங்களின் பெரும் இருப்புக்களை வைத்திருக்கின்றனர். உறுதியான மீட்சியொன்றைக் காட்டிய ஆபரணச் சந்தை 2000ஆம் ஆண்டில் 25 சதவீத வளர்ச்சியையும் 2001இல் அதற்கு மேற்பட்ட முன்னேற்றத்தினையும் காட்டியது. 2001ஆம் ஆண்டில் ஆபரண ஏற்றுமதிகள் 46 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், 2001 ஏப்பிறலில் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழிலின் மீது அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய பாதுகாப்புத் தீர்வையின் மூலம் ஆபரண உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டனர். இது மற்றைய உற்பத்தி நாடுகளுடன் இக் கைத்தொழில் போட்டியிடும் அனுகூலங்களைக் குறைத்துவிட்டது. எனினும் ஆபரணக் கைத்தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக உள்ளூர் சந்தையில் வைரங்கள் மற்றும் இரத்தினக்கற்களுக்கான கேள்வி உயர்வாகக் காணப்பட்டது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை கைவினைஞர்களின் தேர்ச்சியையும் சிறு உற்பத்தியாளர்களினால் தயாரிக்கப்படும் ஆபரணங்களின் தரத்தையும், ஆபரண வடிவமைப்பாளர்களின் தேர்ச்சியையும், கற்களைப் பதிப்பதில் இரத்தினக்கல் தேர்ச்சியையும் செயலமர்வுகள் ஆய்வரங்குகள் மற்றும் ஆலோசனைகள் என்பனவற்றினூடாக மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டன. புதிய மற்றும் ஏற்கனவேயுள்ள ஏற்றுமதியாளர்கள் பன்னாட்டுச் சந்தையில் நுழைவதற்கு உதவிகள் வழங்கப்பட்ட வேளையில், சில ஏற்றுமதியாளர்கள் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வர்த்தக சந்தைகளிலும், கண்காட்சிகளிலும் கலந்து கொள்வதற்கு வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டன. தெரிந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கு இலவசமாக வெப்தளமும் விளம்பர வசதிகளும் வழங்கப்பட்டன. ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கையிலிருந்து ஆபரணங்களை வாங்கும் மிகப்பெரும் வாங்குனராக இருந்து வருவதுடன் அதனைத் தொடர்ந்து சேர்மனி, யப்பான், சுவிற்சர்லாந்து மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பன காணப்பட்டன.

2001இல் பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 31 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட குறைந்த விலைகளும் 2001 செத்தெம்பரின் பின்னரான ஏற்றுமதிகளில் செல்வாக்கினைக் கொண்டிருந்தன. 2001இல் பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதி அளவு 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உள்ளூர் உற்பத்தியினை மின் உருவாக்கம் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள் என்பனவற்றின் அதிகரித்த கேள்வியினை ஈடுசெய்ய வழங்க வேண்டியிருந்தமையின் காரணமாக இக் குறைப்பு நீர்க்கல எரிபொருளிலேயே பெருமளவிற்குக் காணப்பட்டது. 2001ஆம் ஆண்டின் – முதற் காலாண்டில் பெற்றோலிய உற்பத்திகளின் உற்பத்தி குறைவாக இருந்தமைக்கு தூய்மி வழமையான பேணல் வேலைகளுக்காக முடப்பட்டிருந்தமை காரணமாக இருந்ததுடன் இது குறைந்தளவான ஏற்றுமதிகளுக்கும் காரணமாயிருந்தது.

பயணப் பொருட்கள், காலணி மற்றும் ஏனைய தோற்பொருட்கள், மட்பாண்ட உற்பத்திகள், பிளாத்திக்கு மற்றும் இரசாயன உற்பத்திகள், மரத்திலான பொருட்கள், பொம்மைகள் பித்தளையிலான பொருட்கள், அளவைகள், துடைப்பங்கள், தூரிகைகள், நாரினாற் பொருத்தப்பட்ட சங்கீதக் கருவிகள் என்பனவற்றை உள்ளடக்கிய மற்றைய அனைத்து முக்கிய வகைகளினதும் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் முக்கியமாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

## பெருந்தோட்டப் பயிர்கள்

2001ஆம் ஆண்டில் அனைத்து மூன்று முக்கிய பெருந்தோட்டப் பயிர்களிலுமிருந்தான வருவாய்கள் 6.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. பன்னாட்டு தேயிலை விலைகள் ஆண்டின் பெரும்பாலான பகுதிகளில் வீழ்ச்சியைப் பதிவு செய்ததுடன் 2001ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் மீட்சியடைந்தன. 2001 ஏப்பிறலின் பின்னர் தேயிலை விலைகள் முன்னைய ஆண்டிலும் பார்க்க குறைவாகவே காணப்பட்டன. இவ் வீழ்ச்சிக்கு போட்டி நாடான கென்யாவின் தேயிலை உற்பத்தியும் (25 சதவீத வளர்ச்சி) உலக பொருளாதாரத்தில் ஏற்பட்ட மந்தநிலையின் விளைவாக கேள்வி வீழ்ச்சியுற்றமையுமே காரணமாகும். தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை 2000ஆம் ஆண்டில் கிலோகிறாமிற்கு ஐ.அ.டொலர் 2.43 இலிருந்து 2001இல் ஐ.அ.டொலர் 2.34 இற்கு வீழ்ச்சியடைந்தது. உற்பத்தியில் வீழ்ச்சி காணப்பட்டபோதும் தேயிலை ஏற்றுமதிகளின் அளவு 2001இல் 295 மில்லியன் கி.கிறாம்களுக்கு 6.7 மில்லியன் கி.கிறாம்களால் அதிகரித்து பழைய இருப்புக்கள் பயன்படுத்தப்பட்டமையைப் பிரதிபலித்தது.

2001இல் தேயிலை உற்பத்தி 295 மில்லியன் கி.கிறாம்களுக்கு 10.8 மில்லியன் கி.கிறாம்களினால் வீழ்ச்சியடைந்தது. இலங்கையில் தயாரிக்கப்பட்ட தேயிலையின் பொதுவான தரமும், அளவும் 2001ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் நிலவிய தொழிலாளருடன் தொடர்பான பிரச்சனைகளினாலும் மோசமான வானிலை நிலைமைகளினாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டன.

மொத்த தேயிலை ஏற்றுமதியில் 60 சதவீதமானவை தொகையாகவும், 34 சதவீதம் பொதிகளிலடைக்கப்பட்டும் இருந்தன. எஞ்சிய தொகை தேயிலைப் பொதிகளாகவும் வெளிநாட்டு தேயிலையுடன் கலக்கப்பட்ட தேயிலையினையும் மற்றும் பச்சைத் தேயிலையாகவும் உயர்ந்த பெறுமதி கூட்டப்பட்ட வடிவங்களில் காணப்பட்டன. மரபுவழித் தேயிலை இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகளில் 99 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்கு வகைகூறிய வேளையில் வெட்டி, கிழித்து, சுருட்டப்பட்ட தேயிலை மிகச்சிறிய அளவிலேயே உற்பத்திசெய்யப்பட்டது. 3.6 மில்லியன் கி.கிறாம் தேயிலை கலக்கும் நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்டது. இது 2001ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1 சதவீதம் மட்டுமேயாகும். 2001ஆம் ஆண்டிலும் ருசியா தொடர்ந்தும் மிகப்பெரும் வாங்குனராக (22 சதவீதப் பங்குகள்) இருந்தது. ஐக்கிய அரபு எமிறேட்ஸ் இரண்டாவது பெரும் வாங்குனராக (12 சதவீதப் பங்கு) இருந்த வேளையில் சிரியா (8 சதவீதப் பங்கு) தொடர்ந்தும் மூன்றாவது இடத்தை தக்கவைத்துக் கொண்டது. மற்றைய முக்கிய வாங்குனர்களாக லிபியா, துருக்கி (ஒவ்வொன்றும் 6 சதவீதப் பங்கு) ஈரான், ஈராக் (ஒவ்வொன்றும் 4 சதவீதப் பங்கு) ஆகியவையாக இருந்தன. எனினும் ஒரு தொகுதியாகப் பார்க்கையில் 2001இல் மத்தியகிழக்கு நாடுகள் மொத்த தேயிலை ஏற்றுமதியில் 46 சதவீதத்தினை வாங்கியவேளையில் சுதந்திர அரசுகளின் பொதுநலவாய நாடுகள் 22 சதவீதத்தினையும் ஐரோப்பிய ஒன்றியம் 10 சதவீதத்தினையும் கொள்வனவு செய்தன.

2001இல் மூன்று முக்கிய தெங்கு உற்பத்திகளிலுமிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 47 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. தேங்காய்த்துருவலினதும் தேங்காய் எண்ணெய்யினதும் ஏற்றுமதி அளவுகள் முறையே 40 சதவீதத்தினாலும், 27 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. பன்னாட்டு விலைப் போக்குகளைத் தொடர்ந்து, மூன்று முக்கிய தெங்கு உற்பத்திகளினதும் சராசரி விலைகள் 1999 நவெம்பரிலிருந்தும் வீழ்ச்சிடைந்தன. இதற்கு 1999 ஆண்டின் முதற் காலாண்டு தொடக்கம் உலகத் தெங்கு உற்பத்தி தொடர்ச்சியாக மேம்பட்டு வந்தமையே காரணமாகும். 2001இல் உலர்த்திய தேங்காயின் உலக உற்பத்தி 5.74 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 8.5 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி 3.57 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 9 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் உலகின் தெங்கு உற்பத்தி 2002இல் வீழ்ச்சியடையுமெனவும் 2002இல் விலைகள் மேம்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. 2000ஆம் ஆண்டின் 3,096 மில்லியன் காய்களுடன் ஒப்பிடுகையில் 2001இல் 2,796 மில்லியன் காய்களை (10 சதவீதம் கொண்ட வீழ்ச்சி) அறுவடை செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளமைக்கு சாதகமற்ற வானிலை நிலமைகளே காரணமாகும். காய்களின் குறைந்த உற்பத்தியே தேங்காயெண்ணெய்யினதும் தேங்காய் துருவலினதும் குறைந்த அளவு ஏற்றுமதிகளுக்குக் காரணமாகும். 2000ஆம் ஆண்டில் தேங்காய் எண்ணெய்யின் விலைகள் குறைவாக இருந்தவேளையில், இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய்யிலிருந்தான போட்டியைக் குறைப்பதற்காக 2000 யூலை 17ஆம் நாளன்று தற்போது நிலவுகின்ற 25 சதவீத இறக்குமதித் தீர்வையுடன் மேலதிக கட்டணமாக 25 சதவீதத்தினை விதிப்பதற்குத் தீர்மானித்தது. இம் மேலதிகக் கட்டணமாக 2001 சனவரி 12ஆம் நாள் தொடக்கம் திசெம்பர் 31ஆம் நாள் வரையான காலப்பகுதியில் கி.கிறாமொன்றிற்கு ரூ.20 கொண்ட குறித்துரைக்கப்பட்ட மேலதிக கட்டணமாக மாற்றப்பட்டவேளையிலும் கூட உற்பத்தியில் வீழ்ச்சியும் சந்தையில் உயர்ந்த விலைகளும் காணப்பட்டன. இதன் விளைவாக, சமையல் எண்ணெய்யின் இறக்குமதிகள் 2001ஆம் ஆண்டில் 17.3 மில்லியன் கி.கிறாம்களால் வீழ்ச்சியடைந்து உள்நாட்டு தெங்கு விலைகளில் மேலும் அழுத்தத்தினைத் தோற்றுவித்தன. சந்தையில் காணப்படும் குறைந்த நிரம்பலைக் கருத்திற் கொண்டு உடன்காய்களின் விலைகள் (சில்லறை விலை) 2000ஆம் ஆண்டினைக் காட்டிலும் ஏறத்தாழ 12 சதவீதத்தினால் அதிகரித்து, தேங்காய் எண்ணெய் மற்றும் தேங்காய்த்துருவல் கைத்தொழிலுக்கான உள்ளீடுகளின் செலவினை அதிகரித்தது. சோயா அவரை, தானிய எண்ணெய், ஒலீவ், தாவரஎண்ணெய் போன்ற ஏனைய சமையல் எண்ணெய் விலைகளின் உலக உற்பத்தி உயர்ந்த உற்பத்தியை பதிவு செய்துள்ளமையானது அதற்கு நெருக்கமான பதலீடுகளின் விலையைக் குறைக்க உதவியது.

2001இல் மற்றைய தெங்கு உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து குறைவடைந்த பன்னாட்டு விலைகளினைப் பிரதிபலித்தது. மற்றைய தெங்கு உற்பத்திகளுக்கு உள்ளீட்டினை வழங்குகின்ற உடன்காய்களின் உற்பத்தி குறைவாகக் காணப்பட்டபோதும் தும்பு மெத்தைகளின் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு முன்னைய ஆண்டுகளின் இருப்பு முன்கொண்டு செல்லப்பட்டமையே காரணமாகும். எனினும் உயர்ந்த அளவுகளின் சாதகமான தாக்கத்தினை சமப்படுத்துவதற்கு விலைகள் வீழ்ச்சியடைந்தன. கயிறு தவிர்ந்த அனைத்து தும்பு உற்பத்திகளினதும் விலைகள் 2000இலும் பார்க்க 2001இல் குறைவாகக் காணப்பட்டன. தெங்கை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளிலிருந்தான மொத்த ஏற்றுமதி வருவாய்கள் நாட்டின் மொத்த ஏற்றுமதிகளில் 1 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தன.

ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்த இறப்பர் உற்பத்தி ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் உயர்வடைந்தது. எனினும், 2001இல் கிடைத்த 86 மில்லியன் கி.கிறாம் கடந்த ஐந்து தசாப்தங்களில் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த உற்பத்தியாக இருந்தது. இது, 2000ஆம் ஆண்டின் 88 மில்லியன் கி.கிறாம்களை விட 2 சதவீதம் குறைவானதாகும். இறப்பரை அடிப்படையாகக் கொண்ட துணைத்துறை சுருக்கமடைந்தமையின் காரணமாக இறப்பரின் உள்நாட்டு இடைநிலை நுகர்வு 55 மில்லியன் கிலோக்கிறாம்களிலிருந்து 54 மில்லியன் கிலோக்கிறாமாக வீழ்ச்சியடைந்தது. உள்ளீட்டுத் தேவைகளை ஈடுசெய்யும் பொருட்டு 2001இல் உள்நாட்டு தயாரிப்புக் கைத்தொழிலுக்காக 2000இல் இறக்குமதி செய்யப்பட்ட 3,291,878 கிலோக்கிறாம்களுடன் ஒப்பிடுகையில் 726,865 கி.கிறாம்கள் இறக்குமதி செய்யப்பட்டது.

இயற்கை இறப்பரின் ஏற்றுமதி விலைகள் 2000ஆம் ஆண்டு திசெம்பரின் பின்னர் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து 2001இல் 16 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இதேபோன்று இறப்பர் ஏற்றுமதிகளின் அளவும் 2001இல் 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதன்படி, இயற்கை இறப்பரின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. முக்கிய உற்பத்தி நாடுகளில் காணப்பட்ட உற்பத்தி மிகைகள், உலகசந்தையில் குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவிலும் இயற்கை இறப்பருக்கான குறைந்த கேள்வி என்பன குறைந்த இறப்பர் விலைகளுக்கு காரணமாயிருந்தன. இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 1 சதவீதத்திற்கும் குறைவான அளவிற்கே வகைகூறின.

## ஏனைய வேளாண்மை உற்பத்திகள்

2001இல் ஏனைய வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக 12 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 136 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தன. 1998இல் மிக உயர்ந்த வருமான அளவான ஐ.அ.டொலர் 170 மில்லியனைப் பதிவுசெய்த இத்துணை துறையிலிருந்தான வருவாய்கள் கடந்த மூன்றாண்டுகளில் விரைவாக வீழ்ச்சியடைந்தமைக்கு காலந்தவறிய வானிலை நிலமைகள் உயர்ந்த உலக உற்பத்தியின் விளைவாகத் தோன்றிய தாழ்ந்த விலைகள், பன்னாட்டுப்போட்டி போன்ற காரணிகளின் இணைந்த விளைவே காரணமாகும். கறுவா ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்த விலைகளே காரணமாக இருந்ததுடன் அதிகரித்த அளவின் சாதகமான தாக்கத்தினை இது எதிரீடு செய்துவிட்டது. கறுவாவின் விலைகள் ஆண்டு முழுவதும் தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டபோதும், விலைகள் சார்புரீதியில் மிகக் குறைவாகக் காணப்பட்ட இரண்டாம் காலாண்டு தவிர மற்றைய காலப்பகுதியில் ஏற்றுமதி அளவுகள் மிக உயர்வாக இருந்ததன. இது உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியை தம்வசமே வைத்திருப்பதற்கு நிர்ப்பந்தித்தது. தயாரிக்கப்படாத புகையிலையிலிருந்தான வருவாய்கள் 6.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்த விலைகளும் ஒசுத்திரியா, பெல்ஜியம், ஐக்கிய இராச்சியம் மற்றும் இசுப்பெயின் ஆகியவற்றிலிருந்தான தாழ்ந்த கேள்வியும் காரணங்களாகும். 2001ஆம் ஆண்டில் சிறுவேளாண்மை உற்பத்திகளிடையே கராம்பு குறிப்பிடத்தக்கதொரு பண்டமாகக் காணப்பட்டது. இந்தியாவிலிருந்தான உயர்ந்த கேள்வியின் காரணமாக கராம்பின் விலை ஆண்டு முழுவதும் உறுதியாகக் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து மிளகின் விலைகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தமைக்கு உலகளாவிய உயர்ந்த உற்பத்திகளே காரணமாகும். இந்நான்கு உற்பத்திகளும் சேர்ந்து ஏனைய வேளாண்மைகளின் மொத்த உற்பத்தியில் 71 சதவீதத்திற்கு வகைகூறின. இந்தியாவில் அபரிமிதமான அறுவடை காணப்பட்டபோதும் 2001ஆம் ஆண்டின் இறுதி மூன்று காலாண்டுகளிலும் ஏலக்காயின் விலைகள்

தொடர்ந்தும் உயர்வாகக் காணப்பட்டமைக்கு குவாட்டமாலாவின் நிரம்பல் வீழ்ச்சியுற்றமையே காரணமாகும். எனினும், ஏற்றுமதி அளவு குறைவாகக் காணப்பட்டமைக்கு, தாழ்ந்த உள்ளூர் உற்பத்திகளின் காரணமாக நிரம்பல் தடைப்பட்டமையே காரணமாகும். உலர வைக்கப்பட்ட மற்றும் உடன்காய்களின் அதிகரித்த அளவு ஏற்றுமதிகள், குறைந்த விலைகள் காணப்பட்டபோதும் உயர்ந்த ஏற்றுமதிப் பெறுமதியைப் பெறக்காரணமாயின. பாக்கு, கோப்பி, சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரி, வெற்றிலை, எள்ளு மற்றும் இன்றியமையாத எண்ணெய் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2000ஆம் ஆண்டினை விட வீழ்ச்சியடைந்தன. ஏனைய எண்ணெய் விலைகள் மற்றும் முந்திரி என்பனவற்றின் ஏற்றுமதிகள் அவை முழுமையான பெறுமதிகளில் சிறிதாக இருந்தபோதும் கணிசமான இலாபத்தினைப் பதிவுசெய்தன.

### கனிப்பொருள் உற்பத்திகள்

2001ஆம் ஆண்டில் கனிப்பொருள் உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 10.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. கனிப்பொருள் ஏற்றுமதிகளில் 95 சதவீதத்தினை உள்ளடக்கியுள்ள இரத்தினக்கல் ஏற்றுமதிகள் 2000ஆம் ஆண்டின் 52 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு மாறாக 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2001ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் இரத்தினக்கல் ஏற்றுமதிகள் சிறந்த செயலாற்றத்தினைக் காட்டியபோதும் ஆண்டின் பின்னரைப் பகுதியில் முக்கிய இறக்குமதி நாடுகளில் காணப்பட்ட குறைந்த கேள்வியினால் மோசமாகப் பாதிக்கப்பட்டன. 2001 யூலையில் கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையம் மீதான தாக்குதல் வெளிநாட்டவர்களுக்கான இரத்தினக்கற்களின் சில்லறை விற்பனையை தடுத்து விட்டது. 2001 செத்தெம்பரில் ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதல் உலகளாவிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களின் கைத்தொழிலை பாதித்து உலகளாவிய கேள்வியைக் குறைத்துவிட்டது. பன்னாட்டுத் துறையில் நிலவிய சிக்கல் நிறைந்த மோசமான தன்மைகளுக்குப் புறம்பாக இரத்தினக்கல் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகள், ஆபரணத் தயாரிப்பு, வெட்டப்பட்ட இரத்தினக்கற்கள், மற்றும் பட்டை தீட்டல் என்பனவற்றின்மீது 2001 ஏப்பிறல் 1ஆம் நாள் தொடக்கம் தேசிய பாதுகாப்புத் தீர்வையை அறிமுகப்படுத்தியது. இதன் விளைவாக செலவில் ஏற்பட்ட உயர்வு இந்தியா, இந்தோனேசியா, மலேசியா மற்றும் பிலிப்பைன்சு ஆகிய நாடுகளிலுள்ள உற்பத்தியாளர்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் ஏற்றுமதியாளர்களின் போட்டி இலாபத்தினை குறைத்துவிட்டது. இத்தகைய எதிர்மறையான நிகழ்வுகள் காணப்பட்டபோதும் , இலங்கை மிகச்சிறந்த தரமான இயற்கை வர்ணம் கொண்ட நீலக்கல்லை உலகச் சந்தைக்கு தொடர்ந்தும் வழங்கியதுடன் இவ்வுற்பத்திகளின் விலைகளும் இவ்வாண்டுக் காலத்தில் உறுதியாக அதிகரித்தது. ஐரோப்பா மற்றும் ஐக்கிய அமெரிக்கா சந்தைகளில் தரப்படுத்தப்பட்ட நீல, இளஞ்சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத்தைக் கொண்ட நீலக்கற்களுக்கான கேள்வி ஆண்டு முழுவதும் உறுதியாகக் காணப்பட்டது. மாணிக்கம் நீலக்கல் மற்றும் மரகதம் என்பனவற்றிற்கான ஐக்கிய அமெரிக்காவின் கேள்வி உறுதியாகக் காணப்பட்டது. கொங்கொங், ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் மிகச்சிறந்த இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்களுக்கான நிலயமாக தோற்றம் பெற்றிருக்கிறது. யப்பானும் தாய்லாந்தும் இலங்கையின் இரத்தினக்கற்களுக்கான முக்கிய சந்தைகளாக உயர்ந்த உள்ளார்ந்த ஆற்றலுடன் தொடர்ந்தும் காணப்பட்டவேளையில் சுவிற்சலாந்து, பிரான்சு, ஐ.இராச்சியம் மற்றும் சேர்மன் என்பன ஐரோப்பிய சந்தையில் முக்கிய வாங்குனர்களாக காணப்பட்டன. வழங்கல் பக்கத்தில், அரசிற்கும் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும் சொந்தமான காணிகளை இரத்தினக்கல் அகழ்விற்காக ஏலத்தில் விடுவதன் மீது விதிக்கப்பட்டிருந்த இடைநிறுத்தம் அகற்றப்பட்டமையும் 2001இல் செப்பனிடப்படாத இரத்தினக்கற்களின் வழங்கலை மேம்படுத்தியது. ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 26 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு உலோகதாதுகள் மற்றும் இரும்பு படிவுகளிலிருந்தான உயர்ந்த வருவாய்களே காரணமாகும்.

## 9.3 இறக்குமதிகள்

2001ஆம் ஆண்டின் இறக்குமதி மீதான செலவினம் ஐ.அ.டொலர் 5,974 மில்லியனாக விளங்கி 2000ஆம் ஆண்டினைவிட 18.4 சதவீதங்கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. சிறிலங்கன் ஏயர்லைன்ஸ் மீள் தொகுதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2000ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட மூன்று வானூர்திகளுக்காக சீராக்கம் செய்யப்பட்ட வேளையில் இறக்குமதிகள் 14.9 சதவீதங்கொண்ட வீழ்ச்சியை

**அட்டவணை 9.4**
**இறக்குமதிகளின் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு**

| விடயம் | ஐ.அ. டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1997 | 1998 | 1999 | 2000(அ) | 2001(ஆ) | 1997 | 1998 | 1999 | 2000(அ) | 2001(ஆ) |
| 1. நுகர்வுப் பொருட்கள் | 1,223 | 1,255 | 1,242 | 1,388 | 1,236 | 72,062 | 80,956 | 87,505 | 105,403 | 110,059 |
| உணவும் குடிபானமும் | 781 | 723 | 661 | 693 | 655 | 45,996 | 46,543 | 46,562 | 52,584 | 58,466 |
| அரிசி | 73 | 42 | 46 | 4 | 11 | 4,331 | 2,621 | 3,290 | 288 | 969 |
| சீனி | 184 | 129 | 106 | 141 | 115 | 10,788 | 8,384 | 7,448 | 10,777 | 10,289 |
| கோதுமை | 139 | 127 | 111 | 127 | 110 | 8,128 | 8,133 | 7,792 | 9,625 | 9,783 |
| ஏனையவை | 385 | 425 | 398 | 421 | 420 | 22,749 | 27,405 | 28,032 | 31,894 | 37,425 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | 442 | 532 | 581 | 696 | 581 | 26,066 | 34,413 | 40,943 | 52,819 | 51,593 |
| 2. இடைநிலைப் பொருட்கள் | 3,096 | 2,982 | 3,057 | 3,789 | 3,321 | 182,754 | 192,494 | 215,658 | 287,196 | 296,522 |
| பெற்றோலியம் | 539 | 345 | 500 | 901 | 731 | 31,828 | 22,275 | 35,344 | 68,381 | 65,190 |
| வளமாக்கி | 66 | 62 | 66 | 80 | 67 | 3,916 | 3,989 | 4,690 | 6,059 | 6,047 |
| இரசாயனங்கள் | 136 | 143 | 136 | 147 | 142 | 8,024 | 9,241 | 9,590 | 11,152 | 12,647 |
| புடவைகள் | 1,386 | 1,397 | 1,320 | 1,471 | 1,320 | 81,816 | 90,099 | 93,105 | 111,386 | 117,993 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 969 | 1,035 | 1,035 | 1,190 | 1,060 | 57,170 | 66,890 | 72,929 | 90,218 | 94,644 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் | 1,325 | 1,477 | 1,565 | 1,737 | 1,081 | 78,232 | 95,322 | 110,599 | 130,889 | 96,185 |
| பொறியும் கருவியும் | 742 | 786 | 678 | 787 | 610 | 43,853 | 50,592 | 47,736 | 59,538 | 54,287 |
| போக்குவரத்துக் கருவி (அ) | 208 | 264 | 523 | 529 | 129 | 12,276 | 17,098 | 37,191 | 39,489 | 11,469 |
| கட்டடப் பொருட்கள் | 272 | 303 | 260 | 305 | 249 | 16,030 | 19,590 | 18,296 | 23,087 | 22,145 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 103 | 124 | 105 | 116 | 93 | 6,073 | 8,042 | 7,376 | 8,776 | 8,285 |
| 4. பகுக்கப்படாத இறக்கமதிகள் | 220 | 176 | 115 | 406 | 337 | 12,978 | 11,367 | 8,126 | 30,802 | 30,198 |
| மொத்த இறக்குமதிகள் (இ) | 5,864 | 5,890 | 5,980 | 7,320 | 5,974 | 346.026 | 380,138 | 421,888 | 554,290 | 532,964 |

(அ) சீராக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) வரையறுக்கப்பட்ட இலங்கை வளமாக்கிக் கம்பனியிடமிருந்தும் ஏனைய முக்கிய வளமாக்கி இறக்குமதியாளர்களிடமிருந்தும் பெறப்பட்ட ரவுகளுக்குப் பதிலாக 1997இலிருந்து வளமாக்கி மீதான சுங்கத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(ஈ) சுங்கத்தினால் 1998இலும் 1999இலும் பதிவு செய்யப்பட்ட வைர இறக்குமதிகள் முக்கிய இறக்குமதியாளர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு சீராக்கம் செய்யப்பட்டது.
(உ) 199இல் சிறிலங்கன் எயார் லைன்சினால் இறக்குமதி செய்யப்பட்ட 3 வானூர்திகளின் பெறுமதியையும் உள்ளடக்கும்.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்.
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்.
இலங்கை வளமாக்கிக் கம்பனியும் ஏனைய வளமாக்கி முக்கிய இறக்குமதியாளர்களும்.
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
முக்கிய வைரக்கல் இறக்குமதியாளர்கள்.
இலங்கை மத்திய வங்கி.
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை

எடுத்துக்காட்டியது. இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மெதுவான பொருளாதார வளர்ச்சி, இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட மேலதிகக் கட்டணம், மற்றும் குறைந்த பெற்றோலிய விலைகள் என்பனவே முக்கிய காரணங்களாக இருந்தன.

அனைத்து மூன்று முக்கிய வகைகளான நுகர்வோர், முதலீட்டு மற்றும் இடைநிலை பொருட்களின் இறக்குமதிகள் 2001இல் வீழ்ச்சியடைந்தன. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் 11 சதவீதத்தினாலும், இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 12 சதவீதத்தினாலும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 38 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. 2000இல் இடம்பெற்ற வானூர்தி இறக்குமதிகளுக்காகச் சீராக்கம் செய்யப்பட்டபோதும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

இறக்குமதிகளின் பெறுமதியில் ஏற்பட்ட குறைப்பு சராசரி இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட 4 சதவீத வீழ்ச்சியினதும் அளவில் ஏற்பட்ட 11 சதவீத வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாகும். பெற்றோலியம், புடவை மற்றும் சில முதலீட்டுப் பொருட்கள் போன்ற முக்கிய உள்ளீடுகளின் குறைந்த பன்னாட்டு விலைகள் சராசரி இறக்குமதி விலையை வீழ்ச்சியடைய உதவின. உணவு மற்றும் நீண்டகால நுகர்வுப் பொருட்கள் (சீனி, கோதுமை, பால் உற்பத்திகள், உந்து ஊர்திகள், வானொலி மற்றும் தொலைக் காட்சிப் பெட்டிகள்) இடைநிலைப் பொருட்கள் (பெற்றோலிய உற்பத்திகள், புடைவகள், வைரங்கள், இரசாயனங்கள், மற்றும் பிளாத்திக்குகள்) முதலீட்டுப் பொருட்கள் (கட்டடவாக்கப் பொருட்கள் மற்றும் பொறிகள்) என்பனவற்றின் குறைந்தளவு இறக்குமதிகளே குறைந்த அளவிற்கு முக்கிய காரணங்களாக இருந்தன.

## இறக்குமதி அமைப்பு

1977இல் பொருளாதாரம் தாராளமயமாக்கப் பட்டதனைத் தொடர்ந்து கடந்த 24ஆண்டுக் காலப்பகுதியில் இறக்குமதி உள்ளடக்கத்தில் நுகர்வுப் பொருட்களிலிருந்து இடைநிலைப் பொருட்களுக்கும் முதலீட்டுப் பொருட்களுக்குமான படிப்படியான நகர்வு அவதானிக்கப் பட்டிருக்கிறது. அரிசி மற்றும் ஏனைய உணவுப் பொருட்களின் உள்நாட்டு நிரம்பலில் ஏற்பட்ட முன்னேற்றம் உணவு இறக்குமதியைக் கட்டுப்படுத்த உதவியது. கைத்தொழில் துறையில் ஏற்பட்ட விரிவு இடைநிலைப் பொருட்களின் உயர்ந்த இறக்குமதியை தேவைப்படுத்திய வேளையில் முன்னேற்றங்கண்ட தொழில் நுட்பத்தின் அதிகரித்தளவு பயன்பாட்டுடன் இணைந்து உட்கட்டமைப்பு வசதிகளிலும் கட்டடவாக்கம் மற்றும் போக்குவரத்து துறைகளிலும் ஏற்பட்ட முன்னேற்றங்கள் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியை அதிகரித்தன. 2001இல் இறக்குமதி அமைப்பு நுகர்வுப் பொருட்களை நோக்கி சிறிதளவு நகர்வதைக் காட்டுவதானது மெதுவான பொருளாதார நடவடிக்கைகளைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. 2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களின் ஒப்பீட்டு ரீதியிலான முக்கியத்துவம் 75 சதவீதத்திலிருந்து 74 சதவீதத்திற்கு (வானூர்தி இல்லாமல்) வீழ்ச்சியடைந்த வேளையில் நுகர்வுப் பொருட்கள் 20 சதவீதத்திலிருந்து 21 சதவீதத்திற்கு அதிகரித்தது. மற்றைய இறக்குமதிகளின் பங்கு (பாதுகாப்புத் தொடர்பான இறக்குமதிகள் உட்பட) 2000ஆம் ஆண்டின் அதே மட்டத்திலேயே காணப்பட்டது.

## நுகர்வுப் பொருட்கள்

2001இல் உணவு மற்றும் நீண்டகால நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தது. உணவு விடயங்களின் இறக்குமதிகள் 2001 யூலைவரை தொடர்ந்தும் அதிகரித்ததுடன் அதன் பின்னர் அதிகரித்த வீதத்தில் வீழ்ச்சியடையத் தொடங்கியதன் மூலம் உணவு மற்றும் குடிபான இறக்குமதிகளில் 5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை விளைவித்தது. இன்றியமையாத உணவுப் பொருட்கள் மேலதிகக் கட்டணத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தமையின் காரணமாக இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட மேலதிகக் கட்டணத்தினால் உணவு விடயங்களின் மோசமான முறையில் பாதிக்கப்படவில்லை. கோதுமைத் தானியத்தின் இறக்குமதி 2000ஆம் ஆண்டின் 921,653 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 2001இல் 760,416 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. 2001 திசெம்பரில் வந்துசேரும் என எதிர்பார்க்கப்பட்ட 58,513 மெற்றிக் தொன் கோதுமையை ஏற்றிக் கொண்டுவந்த கப்பலொன்று 2002 சனவரியில் வந்து சேர்ந்தமையைக் கணக்கிலெடுத்தாலும்கூட கோதுமை இறக்குமதி குறைவாகவே இருந்தது. இதற்கு உள்ளூர் பேக்கரிகள் மற்றும் இனிப்புக் கைத்தொழில்களிலிருந்தான குறைவடைந்த கேள்வியும் உள்நாட்டு இருப்புக்களில் ஏற்பட்ட குறைப்புமே காரணமாகும். 2000ஆம் ஆண்டு பெப்புருவரி இறுதியில் கோதுமை மற்றும் மா இறக்குமதிகள் தாராளமயமாக்கப்பட்ட பின்னர் 2000ஆம் ஆண்டில் மா இறக்குமதி 34,706 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தபோதும், 2001இல் 6,338 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. சீனி இறக்குமதிகளும் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த பன்னாட்டு விலைகளின் காரணமாக வீழ்ச்சியடைந்தன. அரிசி அறுவடையில் குறைப்புக் காணப்பட்டபோதும் 2000 யூலை 21ஆம் நாள் தொடக்கம் அரசாங்கம் அரிசி இறக்குமதியை தொடர்ந்தும் இறக்குமதிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தமையானது அரிசி இறக்குமதியை உயர்தர வகைகளுக்கு மட்டுப்படுத்தியிருந்தது. உள்நாட்டில் அரிசியின் விலைகள் உயர்வடைந்தமையின் காணமாக 2001 நவெம்பர் 22ஆம் நாளன்று அரிசி இறக்குமதி மீதான தீர்வைத் தளர்த்தல்களை அரசாங்கம் அறிவிக்கும்வரை அரிசி இறக்குமதிகள் 35 சதவீத இறக்குமதித் தீர்வைக்குட்பட்டிருந்தன. 2001இன் முதல் பதினொரு மாதகாலப்பகுதியில் 12,810 மெற்றிக் தொன்னும், 2001 திசெம்பரில் 39,133 மெற்றிக் தொன்னும் கொண்ட அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. தாழ்ந்த வருமான மட்டங்களும் உயர்ந்த உள்நாட்டு விலைகளும் பால்மா மற்றும் மீன் உற்பத்திகளுக்கான கேள்வியைக் குறைத்துவிட்டன. உயர்ந்த இறக்குமதித் தீர்வை மற்றும் அதிகரித்த உள்ளூர் உற்பத்தி என்பனவற்றின் காரணமாக உருளைக்கிழங்கு இறக்குமதிகள் குறைவாக இருந்தன. வெங்காயம், மிளகாய் மற்றும் ஏனைய உணவுப் பொருட்களின் இறக்குமதி குறைவாக இருந்தமைக்கு மேலதிக இறக்குமதிக் கட்டணங்களின் காரணமாக ஏற்பட்ட உயர்ந்த இறக்குமதிச் செலவுகளே காரணமாகும்.

நீண்டகால நுகர்வுப் பொருட்கள் வகையில், அரசதுறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பகுதியளவான தீர்வைத் தளர்த்தல்கள் நீக்கப்பட்டதனைத் தொடர்ந்து, 2001

பெப்புருவரியின் பின்னர் உந்துஊர்திகள் மற்றும் உந்து ஈருருளிகளின் இறக்குமதிகள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தன. 2000ஆம் ஆண்டுப் பகுதியில் தீர்வைச் சலுகையின்கீழ் 11,767 ஊர்திகள் இறக்குமதி செய்யப்பட்டவேளையில் 2001இல் 1,206 ஊர்திகள் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டன. 2001இல் வானொலிப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், என்பனவற்றின் இறக்குமதிகள் 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் இறப்பர் டயர்கள், டியூப்புக்களின் இறக்குமதிகள் 28 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. மருத்துவ மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகளின் இறக்குமதிகள் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. 2001இல் இறக்குமதியில் வீழ்ச்சியைக் காட்டிய மற்றைய நீண்டகால நுகர்வுப் பொருட்களாக கண்ணாடி இழையம் தாள் மற்றும் தாள் அட்டைகள், காலணி, அட்டைகள் மற்றும் பெட்டிகள், பொம்மைகள், ஆமைப்பூட்டுக்கள் மற்றும் பூட்டுக்கள், மட்பாண்ட நீர்த்தொட்டிகள் என்பன காணப்பட்டன. இவ்வனைத்து விடயங்களினதும் இறக்குமதிகள் 2001 பெப்புருவரி 21ஆம் நாளிலிருந்தும் 40 சதவீத மேலதிகக் கட்டணங்களுக்குள்பட்டதாகும்.

## இடைநிலைப் பொருட்கள்

2001இல் இடைநிலைப் பொருட்களின் இறக்கமதிப் பெறுமதி 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பெற்றோலிய உற்பத்திகள் புடவைகள், வைரங்கள் மற்றும் ஏனைய இடைநிலைப் பொருட்களின் குறைந்த விலைகளே காரணமாகும். மசகெண்ணெய்யின் விலைகள் படிப்படியாக வீழ்ச்சியடைந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் மிகக்குறைவாகக் காணப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெய்யின் விலைகள் படிப்படியாக வீழ்ச்சியடைந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் மிகக் குறைவாகக் காணப்பட்டன. இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெய்யின் அளவு 2000ஆம் ஆண்டின் 17.3 மில்லியன் பீப்பாய்களிலிருந்து 2001இல் 14.4 மில்லியன் பீப்பாய்களுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு பெற்றோலியத் தூய்மி வழமையான பேணல் வேலைகளுக்காக 2001ஆம் ஆண்டில் ஏறத்தாழ ஐந்து வாரங்கள் மூடப்பட்டிருந்தமையே காரணமாகும். இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் மசகெண்ணெய்யின் சராசரி விலை பீப்பாய் ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 24.77இலிருந்து 28.77 இற்கு (15 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுத் தேவைகளை ஈடுசெய்வதற்காக சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் உயர்ந்தளவில் இறக்குமதி செய்யப்பட்டபோதும் தாழ்ந்த விலைகள் இறக்குமதிகளின் செலவினை 6 சதவீதத்தினால் குறைத்துவிட்டன. இதன்விளைவாக, பெற்றோலிய உற்பத்திகளின் மொத்தச் செலவு 19 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும், பெற்றோலிய உற்பத்திகள் நீங்கலான இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 10.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை கைத்தொழில்துறையின் எதிர்க்கணிய வளர்ச்சிக்கு பதிலிறுப்பதாக இருந்தது.

2001ஆம் ஆண்டில் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளில் புடவை இறக்குமதிகள் 40 சதவீதத்திற்கு வகைகூறின. ஆடை ஏற்றுமதிகளுக்கான குறைந்த கேள்வியுடன் இணைந்து செல்லும் விதத்தில் புடவை இறக்குமதிகளின் அளவு 2001 ஓகத்துவரை வீழ்ச்சியடைந்து அதன் பின்னர் படிப்படியாக அதிகரித்து எதிர்கால ஆடை ஏற்றுமதிகளில் காணப்பட்ட உள்ளார்ந்த மேம்பாட்டினைக் காட்டியது. எனினும் தாழ்ந்த பன்னாட்டு விலைகளின் காரணமாக, புடவை இறக்குமதிகள் மீதான செலவினம் 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. வைர இறக்குமதிகளும் 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து வைரத்திற்கான உலகச் சந்தை மந்தமடைந்து காணப்பட்டமையைப் பிரதிபலித்தது. ஏனைய இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து சவர்க்காரம், ஆடைகள், இரசாயனங்கள், மற்றும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புக் கைத்தொழில்களுக்கான உள்ளீடுகளின் குறைந்த இறக்குமதிகளை எடுத்துக்காட்டின. சமையல் எண்ணெய் வகைகளின் மீது 2000 யூலை 17ஆம் நாளன்று விதிக்கப்பட்ட மேலதிகக் கட்டணத்தின் காரணமாக அவ்விடயங்களின் இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன.

## முதலீட்டுப் பொருட்கள்

2001இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 38 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2000ஆம் ஆண்டின் முன்று வானூர்திகளின் இறக்குமதிகளுக்குச் சீராக்கம் செய்யப்பட்டபோது முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 2001இல் 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. போக்குவரத்துக் கருவிகள்

அட்டவணை 9.5
முக்கிய இறக்குமதிகளின் அளவுகள் (அ)

'000 மெற்றிக் தொன்

| விடயம் | 1997 | 1998 | 1999 | 2000 | 2001(அ) |
|---|---|---|---|---|---|
| அரிசி | 306 | 168 | 214 | 15 | 52 |
| 1ஆம் காலாண்டு | 104 | 136 | 24 | 7 | 3 |
| 2ஆம் காலாண்டு | 9 | 12 | 12 | 7 | 7 |
| 3ஆம் காலாண்டு | 12 | 2 | 31 | ... | 2 |
| 4ஆம் காலாண்டு | 181 | 18 | 146 | 1 | 40 |
| கோதுமை | 789 | 880 | 859 | 922 | 760 |
| 1ஆம் காலாண்டு | 302 | 340 | 207 | 266 | 231 |
| 2ஆம் காலாண்டு | 172 | 155 | 263 | 210 | 229 |
| 3ஆம் காலாண்டு | 168 | 126 | 189 | 247 | 177 |
| 4ஆம் காலாண்டு | 147 | 259 | 200 | 199 | 123 |
| சீனி | 545 | 444 | 479 | 562 | 420 |
| 1ஆம் காலாண்டு | 176 | 79 | 152 | 128 | 100 |
| 2ஆம் காலாண்டு | 163 | 129 | 64 | 185 | 127 |
| 3ஆம் காலாண்டு | 83 | 99 | 138 | 85 | 109 |
| 4ஆம் காலாண்டு | 123 | 137 | 125 | 164 | 84 |
| பெற்றோலியம (மசகெண்ணெய) | 1,814 | 2,156 | 1,832 | 2,347 | 1,954 |
| 1ஆம் காலாண்டு | 299 | 567 | 244 | 608 | 237 |
| 2ஆம் காலாண்டு | 389 | 431 | 503 | 583 | 539 |
| 3ஆம் காலாண்டு | 606 | 662 | 548 | 613 | 624 |
| 4ஆம் காலாண்டு | 520 | 496 | 537 | 543 | 554 |
| வளமாக்கி | 391 | 440 | 539 | 559 | 460 |
| 1ஆம் காலாண்டு | 56 | 109 | 97 | 149 | 66 |
| 2ஆம் காலாண்டு | 87 | 98 | 158 | 102 | 183 |
| 3ஆம் காலாண்டு | 87 | 82 | 129 | 174 | 83 |
| 4ஆம் காலாண்டு | 161 | 151 | 155 | 134 | 128 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
வரையறுக்கப்பட்ட இலங்கை பிறிமா

(வானூர்தி நீங்கலாக) பொறிகள் மற்றும் கருவிகள் (2000ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 84 மில்லியன் பெறுமதியான உயர்ந்த செலவினைக் கொண்ட வலு உருவாக்கி நீங்கலாக) என்பனவற்றின் இறக்குமதிகள் முறையே 44 சதவீதத்தினாலும் 13 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. கட்டடப் பொருட்களின் இறக்குமதிகள் 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தபோதும் கட்டுமான நடவடிக்கைகள் விரிவடைந்தன. சீமெந்து மீதான இறக்குமதித் தீர்வை 2001 ஒத்தோபரில் குறைக்கப்பட்டது. ஏனைய முக்கிய முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளும் முதலீட்டு நடவடிக்கைகளின் வீழ்ச்சி காரணமாக வீழ்ச்சியடைந்தன.

## வர்த்தகத்தின் போக்கு

2001ஆம் ஆண்டில் இலங்கை ஏற்றுமதிகளின் முக்கிய சேரிடங்களாக கைத்தொழில் நாடுகளே தொடர்ந்தும் காணப்பட்டன. எனினும் இந்நாடுகளின் சந்தைப்பங்கு 2000ஆம் ஆண்டின் 77 சதவீதத்திலிருந்து 2001இல் 75 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பங்கு 20 சதவீதத்திலிருந்து 21 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பங்கும் 3 சதவீதத்திலிருந்து 4 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இலங்கை இறக்குமதிகளின் முக்கிய மூலங்களாக உள்ள அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் இலங்கைச் சந்தையில் 67 சதவீதத்தினைக் கொண்டுள்ள வேளையில் கைத்தொழில் நாடுகள் 33 சதவீதத்தினைக் கொண்டிருந்தன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளினதும் அபிவிருத்தியடைந்த நாடுகளினதும் ஒப்பிடத்தக்க சந்தைப் பங்குகள் 2000ஆம் ஆண்டில் முறையே 64 சதவீதமாகவும், 36 சதவீதமாகவும் காணப்பட்டன. 2001இல் மாறிச் செல்லும் காலகட்டத்திலுள்ள ஐரோப்பிய நாடுகள் மிகச்சிறிய பங்கான 0.2 சதவீதத்திற்கு வகைகூறின.

பிராந்திய ஒத்துழைப்பிற்கான தென்னாசிய அமைப்பிலுள்ள நாடுகள் (சார்க்) மொத்த ஏற்றுமதிகளில் 3 சதவீதத்திற்கும் மொத்த இறக்குமதிகளில் 13 சதவீதத்திற்கும் வகைகூறின. சார்க் பிராந்தியத்தில் இந்தியா இலங்கையின் மிகப் பெரும் ஏற்றுமதிச் சேரிடமாகவும் (மொத்த ஏற்றுமதியில் 2 சதவீதம்) மிகப்பெரிய இறக்குமதி நாடாகவும் (மொத்த இறக்குமதிகளில் 11 சதவீதம்) விளங்கியது. 2001இல் ஐரோப்பிய ஒன்றியம் மொத்த ஏற்றுமதிகளில் 27 சதவீதத்திற்கும் மொத்த இறக்குமதிகளில் 16 சதவீதத்திற்கும் வகைகூறின. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஐக்கிய இராச்சியம் (12 சதவீதப்பங்கு) முக்கியமான இறக்குமதி நாடாகவும் (4 சதவீதப்பங்கு) விளங்கியது. ருசியாவிற்கான உயர்ந்த தேயிலை ஏற்றுமதிகளுடன் சுதந்திர அரசுகளின் பொதுநலவாய நாடுகளுக்கான ஏற்றுமதிகள் 28 சதவீதத்தினால் அதிகரித்தமை சுதந்திர அரசுகளின் பொதுநலவாய நாடுகள் இலங்கையின் ஏற்றுமதிச் சந்தையில் 4 சதவீதத்திற்கு வகைகூறின.

ஐக்கிய அமெரிக்கா இலங்கை ஏற்றுமதிகளின் மிகப்பெரும் தனியொரு வாங்குனராக 1979 தொடக்கம் இருந்து வருகின்றது. 2001இல் ஐக்கிய அமெரிக்காவின் சந்தைப்பங்கு (41 சதவீதம்) மாற்றமின்றிக் காணப்பட்டது. எனினும் ஐக்கிய அமெரிக்காவிற்கான ஏற்றுமதிகளின் பெறுமதி 2001ஆம் ஆண்டில் 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஐக்கிய அமெரிக்காவுக்கான மொத்த ஏற்றுமதிகளில் புடவைகள் ஆடைகளின் ஏற்றுமதிகள் 78 சதவீதத்திற்கு வகைகூறின. எனினும் ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள் 2001இல் 11 சதவீதத்தினால்

வீழ்ச்சியடைந்தன. இரண்டாவது பெரும் வாங்குனரான ஐக்கிய இராச்சியம் 12 சதவீதப்பங்கினைப் பதிவு செய்தது. இதனைத் தொடர்ந்து சேர்மனியும் நெதர்லாந்தும் (ஒவ்வொன்றும் 4 சதவீதப்பங்கு) காணப்பட்டன. ஐக்கிய இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களில் ஆடைகளும் தேயிலையும் முறையே 78 சதவீதத்திற்கும் 3 சதவீதத்திற்கும் வகைகூறின. யப்பான், நண்டு இறால் வகைகள், பொறிகளின் பாகங்கள் மற்றும் துணைப் பொருட்கள், தேயிலை, மீன் உற்பத்திகள் மற்றும் அருங்கற்களுக்கான முக்கிய சந்தைகளுள் ஒன்றாக விளங்கியது. சேர்மனிக்கான மொத்த ஏற்றுமதியில் ஆடைகளும் தேயிலையும் முறையே 39 சதவீதத்திற்கும் 6 சதவீதத்திற்கும் வகைகூறின. இதன்படி, தொகுதியாகப் பார்க்கையில் மேற்குலக கைத்தொழில்நாடுகள் 2001இலும் இலங்கையின் மிகப்பெரும் வர்த்தகப் பங்காளர்களாக தொடர்ந்தும் இருந்து வருகின்றன.

2001இல் மீண்டுமொருமுறை இந்தியா மிகப்பெரும் தனியொரு ஏற்றுமதியாளராக (11 சதவீதப்பங்கு) விளங்கிய வேளையில் கொங்கொங்கும், (9 சதவீதப்பங்கு) சிங்கப்பூரும் (8 சதவீதப் பங்கு) இலங்கைக்கான இரண்டாவது மற்றும் மூன்றாவது ஏற்றுமதியாளராக விளங்கி யப்பானின் இடத்தைப் (6 சதவீதப்பங்கு) பிடித்துக் கொண்டன. யப்பானிலிருந்தான இறக்குமதிகள் 48 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு 2001ஆம் ஆண்டில் உந்து ஊர்திகளின் இறக்குமதிகளில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டமையே காரணமாகும். 2001இல் கொங்கொங் (3 சதவீதமான வீழ்ச்சி) மற்றும் சிங்கப்பூர் (17 சதவீதமான வீழ்ச்சி) இறக்குமதிகளும் வீழ்ச்சியடைந்தன. 2001இல் இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் 0.2 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தன. மருந்தாக்கற் பொருட்கள், பருப்பு, மிளகாய், பெரிய வெங்காயம், போன்ற உணவு விடயங்கள், முச்சில்லு வண்டிகள் மற்றும் புடவைகள் என்பன இந்தியாவிலிருந்தான இறக்குமதிகளில் முக்கிய விடயங்களாக இருந்தன. ஆடைக் கைத்தொழிலுக்கான துணி மற்றும் துணைப் பொருட்கள் கொங்கொங்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய விடயங்களாகக் காணப்பட்டன. சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விடயங்களிடையே பெற்றோலிய வாயு, தையல்பொறி, தொலைபேசிக்கருவிகள், மற்றும் தகவல் செய்முறைப்படுத்தல் பொறி மற்றும் பாகங்கள் என்பன முக்கியமானவை. இலங்கைக்கான ஏனைய முக்கிய ஏற்றுமதியாளர்களாக கொரியக்குடியரசு மற்றும் தாய்வான் (முறையே 6 சதவீதம், ஐக்கிய அமெரிக்கா (4 சதவீதம்) ஐக்கிய இராச்சியம் (4 சதவீதம்) என்பன காணப்பட்டன. இதன்படி தொகுதியாகப் பார்க்கையில் ஆசிய நாடுகள் இலங்கைக்கான இறக்குமதிகளின் மூலநாடுகளாகத் தொடர்ந்தும் இருந்ததுடன் அவை தமது சந்தைப் பங்குகளை 2000ஆம் ஆண்டின் 53 சதவீதத்திலிருந்து 2001இல் 56 சதவீதத்திற்கு அதிகரித்துக் கொண்டன. எனினும் கிழக்காசிய நாடுகளிலிருந்தான குறைந்த இறக்கமதிகளின் காரணமாக முழுமையான பெறுமதி நியதிகளில் ஆசிய நாடுகளிலிருந்தான இறக்குமதிகள் 9.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

## 9.4 பணிகள் மற்றும் வருமானம்

பணிகள் கணக்கின் மிகை, 2000 யூலையில் கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் மீது எல்.ரீ.ரீ.ஈ. நடத்திய தாக்கதலில் அழிக்கப்பட்ட வானூர்திக்கான காப்புறுதிக் கொடுப்பனவாக சிறீலங்கன் எயர்லைன்சுக்கு கிடைத்த ஐ.அ.டொலர் 90 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சலின் காரணமாக உயர்வடைந்தது. வழமைக்கு மாறாகவுள்ள இவ்வுட்பாய்ச்சலை நீக்கினால் பணிகள் கணக்கிலுள்ள மிகை 50 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு, கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தின் மீது யூலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் சுற்றுலாவிலிருந்தான பெறுகைகள் கடுமையாக வீழ்ச்சியடைந்தமை முக்கிய காரணமாக இருந்ததுடன், இது செத்தெம்பர் 11இல் ஐக்கிய அமெரிக்காவின் பல கேந்திர நிலையங்களின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் மேலும் மோசமானது. ஆண்டின் முதலரைப்பகுதியில் 11 சதவீத வளர்ச்சியுடன் வலுவான முறையில் மீட்சிபெற்ற சுற்றுலாவிலிருந்தான பெறுகைகள் ஆண்டின் பின்னரைப்பகுதியில் 44 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டுப் பகுதியில் சராசரியாக 15.5 சதவீதத்தினால் குறைவடைந்தது. அதேவேளை, சரக்கு மாற்றி ஏற்றல் கையாளலில் 2.5 சதவீத அதிகரிப்புக் காணப்பட்டபோதும் பன்னாட்டு வர்த்தக அளவு வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக போக்குவரத்து பணிப்பெறுகைகள் 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. போக்குவரத்துப் பணிக் கொடுப்பனவுகள் 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. தேறிய தொலைத்தொடர்பூட்டல் பணிகளின் கொடுப்பனவுகள் அதிகரித்தமைக்கு பெறுகைகள் கொடுப்பனவுகளிலும் பார்க்க உயர்ந்த வீதத்தில் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும்.

### அட்டவணை 9.6
### தேறிய பணிகளும் வருமானமும் மாற்றல்களும் (அ)

| விடயம் | ஐ.அ.டொ.மில்லியன் | | ரூபா மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2000 | 2001 (ஆ) | 2000 | 2001 (ஆ) |
| 1. போக்குவரத்து | 69 | 90 | 5,237 | 7,922 |
| 2. பயணம் | 8 | -32 | 553 | -3,022 |
| 3. தொலைத்தொடர்புப் பணிகள் | -1 | -5 | -127 | -457 |
| 4. காப்புறுதிப் பணிகள் | 19 | 109 | 1,438 | 9,773 |
| 5. ஏனைய வியாபாரப் பணிகள் | -50 | -49 | -3,714 | -4,322 |
| 6. அரச செலவினம் வே.எ.கு. | -6 | -4 | -479 | -380 |
| மொத்தப் பணிகள் | 38 | 108 | 2,907 | 9,514 |
| 1. ஊழியர்களின் இழப்பீடு | -2 | -2 | -159 | -186 |
| 2. நேரடி முதலீடு | -108 | -102 | -8,194 | -9119 |
| 3. வட்டியும் ஏனைய கட்டணங்களும்(இ) | -194 | -176 | -14,656 | -15,706 |
| மொத்த வருமானம் | -305 | -280 | -23,009 | -25,011 |
| 1. தனியார் (ஈ) | 974 | 938 | 73,620 | 83,716 |
| 2. பொது அரசு | 24 | 22 | 1,801 | 1,925 |
| மொத்த நடைமுறை மாற்றல்கள் | 998 | 959 | 75,421 | 85,641 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இவ்விளக்கம் ப.நா.நிதியத்தின் சென்மதி நிலுவை கையேட்டின் 5ம் பதிப்புடன் (1993) சாத்தியமானஅளவுக்கு இணங்கிச் செல்கின்றமையை உறுதிப்படுத்துகிறது.

(ஆ) தறகாலிகம்

(இ) வானூர்தி நிலையத்தின் மீது எல்.ரீ.ரீ.ஈ. மேற்கொண்ட தாக்குதலில் அழிக்கப்பட்ட குத்தகை நிதியிடலின் கீழ் இருந்த இரண்டு வானூர்திகளினதும் எஞ்சிய மூலதனப் பெறுமதி தீர்ப்பனவு (தனியார் நீண்டகாலக் கடன் பத்திரங்களின் கீழ் மூலதன மீள் கொடுப்பனவுகளாகப் பிரதிபலிக்கப்பட்டது) செய்யப்பட்ட வேளையில் இணைச் சீராக்கங்கள் மூலதன மாற்றல்களில் செய்யப்பட்டுள்ளமையினால் மூலதன மாற்றம் நிதியியல் கணக்குகளின் மீதான தேறிய தாக்கம் பூஜ்யமாக இருந்தது.

(ஈ) 1994இலிருந்து சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களை திரட்டும்போது வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்படுகின்றது. இதன்படி சென்மதி நிலுவைப் புள்ளி விபரங்களைத் திரட்டும் வெ.நா.வ.பிரிவுகளும் இலங்கையில வதிவற்றவர்களும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும் வேளையில் வெ.நா.வ.தொ. பிரிவுகளும் வதிவுள்ளோரும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் கள் நீக்கப்படுகின்றன.

(உ) 1990இல் வளைகுடா யுத்தத்தின் காரணமாக குவைத்தில் வேலைவாய்ப்பை இழந்த இலங்கையருக்கு 2000 ஆண்டில் 29323 இலங்கையருக்குச் செலுத்தப்பட்ட ஒவ்வொருவருக்குமான ஐ.அ.டொ.2500 இனை உள்ளடக்குகினறது.

2001இல் வருமானக் கணக்கின் பற்றாக்குறை 8 சதவீதத்தினால் ஒடுங்கியமைக்கு வட்டி வருமானத்திலும் பார்க்க மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டமையே காரணமாகும். உலகளாவிய வட்டி வீதங்களில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி வட்டிக் கொடுப்பனவுகளை ஐ.அ.டொலர் 79 மில்லியனால் (24 சதவீதம்) குறைவடையச் செய்தவேளையில் இவ்வாண்டில் வெளிநாட்டுச் சொத்துக்கள் மீதான வட்டி வருமானம் ஐ.அ.டொலர் 60 மில்லியனால் (44 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. உலகளாவிய வட்டி வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி வட்டிக் கொடுப்பனவுகள் ஓரளவிற்கு வீழ்ச்சியடைய மட்டுமே உதவின. இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் முக்கியமாக சலுகைரீதியான கடன்களையே உள்ளடக்கியிருந்ததுடன் பொதுவாக இது கூடிக்குறையலாம். நிலையான குறைந்த வட்டி வீதங்களைக் கொண்டிருந்தது. மாறாக, வட்டி வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி வெளிநாட்டுச் சொத்துக்களின் மீது ஏற்பட்ட குறைந்த வட்டி வீதங்களில் முழுமையாகப் பிரதிபலிக்கப்பட்டது.

## 9.5 நடைமுறை மாற்றல்கள்

இவ்வாண்டுக் காலத்தில் மொத்த தேறிய நடைமுறை மாற்றல்கள் 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு, நடைமுறை அலுவல்சார் மாற்றல்களிலும் அதேபோன்று நடைமுறை தனியார் மாற்றல்களிலும் ஏற்பட்ட வீழ்ச்சிகளே காரணமாகும். பின்னயது வளைகுடாப் போரின்போது இடம்பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்களுக்கு 2000ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் முற்றுப்பெற்றமையின் விளைவாகும். 2000ஆம் ஆண்டில் காணப்பட்ட இக் கொடுப்பனவுகள் நீங்கலான தனியார் மாற்றல் பெறுகைகள் 1 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்தன. இது முன்னைய ஆண்டின் 18 சதவீத வளர்ச்சியுடன் பார்க்கையில் மிகவும் மிதமானதாகும். இவ்வீழ்ச்சிக்கு இவ்வாண்டுப் பகுதியில் எண்ணெய்க்கான குறைந்த விலைகள் காரணமாக எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஐக்கிய அமெரிக்காவின் மீது செத்தெம்பர் 11 அன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் மேற்கு ஆசிய பிராந்தியத்தில் காணப்பட்ட நிச்சயமற்ற அரசியல் தன்மை மற்றும் ஆப்கானிஸ்தானின் போர் என்பன காரணங்களாக அமைந்தன. 2001இல் தனியார் மாற்றல் பெறுகைகள் ஐ.அ.டொலர் 1125 மில்லியன்களாக அமைந்து தேறிய ஆடை ஏற்றுமதிகளுக்கு அடுத்து இரண்டாவது பெரிய வெளிநாட்டு செலாவணி உழைப்பாளராக விளங்கியதுடன் வர்த்தகக் கணக்கில் காணப்பட்ட பற்றாக்குறையில் பெரும்பாலும் முழுவதையும் பொருட்கள் பணிகள் மற்றும் வருமானக் கணக்குகளின் 85 சதவீதத்தினையும் ஈடுசெய்யப் போதுமானதாக இருந்தது.

## 9.6 மூலதன அசைவுகள்

இவ்வாண்டில், தேறிய மூலதன மாற்றல்கள் சிறிதளவால் வீழ்ச்சியடைந்து, அலுவல்சார் மூலதன மாற்றல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியினைப் பிரதிபலித்தன. தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களை நோக்கி தனியார் மூலதனப் பாய்ச்சல் இவ்வாண்டில் அதிகரித்தபோதும் சீனா உட்பட ஒருசில நாடுகளிலேயே குவிந்து காணப்பட்டது. மற்றைய தோற்றம் பெற்றுவரும் சந்தைகளை நோக்கிய தனியார் மூலதனப் பாய்ச்சல்கள் குறிப்பாக, ஐக்கிய அமெரிக்கா மீது செத்தெம்பர் 11இல்

இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் பாதிக்கப்பட்டன. பன்னாட்டு முதலீட்டாளர்கள் எச்சரிக்கையுடையவர்களாக மாறியமையானது தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களின் முறி வழங்கல்களுடன் குறிப்பாக, பாதுகாப்புக் கரிசனைகளுடன் தொடர்பான இடர்நேர் கட்டணக் கணக்குகளில் அதிகரிப்புக்களைத் தோற்றுவித்தது. இம் மோசமான நிகழ்வுகள் பன்னாட்டுச் சந்தையில் எதிர்பார்க்கப்பட்ட ஐ.அ.டொலர் 200 மில்லியன் கொண்ட கடன்பாடுகளை பிற்போட நிர்ப்பந்தித்தன. சாதகமற்ற வெளிநாட்டுச் சூழலும் 2001இல் இலங்கை ரெலிகொம்மின் மேலதிக பங்குகளை விற்பனை செய்வதில் மேலும் தாமதமேற்பட வழிவகுத்தது.


2001இல் தேறிய மூலதனமும் நிதியியல் பாய்ச்சல்களும் மேம்பாடடைந்தமைக்கு முக்கிய காரணமாக, 2001 வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க குறைவாக இருந்தபோதும் அரசிற்கான மூலதனங்கள் உயர்வடைந்தமையும் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக குறுங்கால மூலதன உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட கடுமையான அதிகரிப்பும் விளங்கின. இதன் விளைவாக, சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை 2000ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 522 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2001இல் ஐ.அ.டொலர் 220 மில்லியன் கொண்ட மிகையைப் பதிவு செய்தது.

## நீண்டகால மூலதனம்

இலங்கைக்கான தேறிய தனியார் மூலதனப் பாய்ச்சல்கள் 2000ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 82 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சலிருந்து ஐ.அ.டொலர் 257 மில்லியன்[1] கொண்ட வெளிப்பாய்ச்சலுக்கு மிகக் கூடுதலாக வீழ்ச்சியடைந்தது. தனியார்துறையினதும் அரச கூட்டுத்தாபனங்களினதும் நீண்டகாலக் கடன்பாடுகள் வீழ்ச்சியடைந்ததுடன் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கடுமையாக வீழ்ச்சியடைந்தன.

தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான நீண்டகால மூலதனப் பாய்ச்சல் எதிர்பார்ப்பிலும் பார்க்க வீழ்ச்சியடைந்தமைக்கு முதலீட்டிற்கான மூலதனத்தினை ஒருசில கூட்டுத்தாபனங்களும் தனியார்துறை நிறுவனங்களும் மட்டும் பயன்படுத்திக் கொண்டமையே காரணமாகும். முதலீட்டாளர் நம்பிக்கை மிகக் குறைவாகக் காணப்பட்டமையினால் தனியார்துறை நிறுவனங்களில் பெரும்பாலானவை காத்திருந்து பார்க்கும் அணுகுமுறையைப் பின்பற்றின. உள்நாட்டுச் சந்தையில் கொடுகடனுக்கான கேள்வி மிக மெதுவான வேகத்தில் வளர்ச்சியடைந்தமையினால், அபிவிருத்தி நிதிநிறுவனங்களில் சில பன்னாட்டுச் சந்தையில் அவற்றின் கடன்பாட்டுத் திட்டங்களை பிற்போட்டன. தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான நீண்டகால மூலதனப் பாய்ச்சல் கணனி திஸ்ச வலுச்செயற்றிட்டத்திற்காகப் பெறப்பட்ட கடன்களையும் (ஐ.அ.டொலர் 15 மில்லியன்) முதலீட்டுச்சபை நிறுவனங்களினால் பெறப்பட்ட நீண்டகால வர்த்தக கொடுகடன்களையும் (ஐ.அ.டொலர் 15 மில்லியன்) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அதன் முத்துராஜவெல எண்ணெய் தாங்கிப் பண்ணை செயற்றிட்டத்திற்கான கடன்களையும் (ஐ.அ.டொலர் 10 மில்லியன்) மற்றும் இந்திய தொடர்க் கொடுகடனின் கீழ் பெறப்பட்ட நீண்டகால வர்த்தகக் கொடுகடன்களையும் (ஐ.அ.டொலர் 2.6 மில்லியன்) உள்ளடக்கியிருந்தன. முத்துவராஜவெல எண்ணெய் தாங்கி செயற்றிட்டத்தின் கீழான இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கொடுகடன் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமைக்கு செயற்றிட்ட நடைமுறைப்படுத்தலில் காணப்பட்ட தாமதம் காரணமாக இருந்தவேளையில், இந்திய தொடர் கொடுகடனின் கீழான கொடுகடன் பயன்பாடு மெதுவாக இருந்தமைக்கு நிருவாகச் சிக்கல்கள் நாட்டின்

**வரைபடம் 9.5**
**மூலதனப் பாய்ச்சல்கள்**




(அ) பகுப்பாய்வு, வடிவமைப்பு, சென்மதி நிலுவை கைநூல் 4இலிருந்து சென்மதி நிலுவை கைநூல்5இற்கு மாற்றமடைந்தமையின் காரணமாக முன்னர் குறைக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த தனியார் மற்றும் அரச மூலதன மாற்றல்கள் நீண்டகால மூலதனப் பாய்ச்சல்களாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன், முன்னர் நாணயத் துறையில் உள்ளடக்கப்பட்டிருந்த வர்த்தக வங்கிகளின் சொத்துக்களிலும் பொறுப்புக்களிலும் ஏற்பட்ட மாற்றங்கள் குறுங்கால மூலதனப் பாய்ச்சல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) 1994ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித்தொழில் முறையின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது.

---

1 வானூர்தி நிலையத்தின் மீது எல்.ரீ.ரீ.ஈ. மேற்கொண்ட தாக்குதலில் அழிக்கப்பட்ட குத்தகை நிதியிடலின் கீழ் இருந்த இரண்டு வானூர்திகளினதும் எஞ்சிய மூலதனப் பெறுமதி தீர்ப்பனவு (தனியார் நீண்டகாலக் கடன் பத்திரங்களின் கீழ் மூலதன மீள் கொடுப்பனவுகளாகப் பிரதிபலிக்கப்பட்டது) செய்யப்பட்ட வேளையில் இணைச் சீராக்கங்கள் மூலதன மாற்றல்களில் செய்யப்பட்டுள்ளமையினால் மூலதன மாற்றம் நிதியியல் கணக்குகளின் மீதான தேறிய தாக்கம் பூஜ்யமாக இருந்தது.

**சிறப்புக் குறிப்பு 11**

## இலங்கையில் மூலதனக்கணக்கினை தாராளமப்படுத்துவதற்கான வாய்ப்பு

மூலதனக்கணக்கின் தாராளமயப்படுத்தலானது நாடுகளுக்கிடையேயான மூலதன அசைவினை அனுமதிக்கின்றது. இது முதலீடுகளை விஞ்சிய சேமிப்புக்களைக் கொண்டுள்ள நாடுகளில் உள்ள முதலீட்டாளர்கள் அவர்களின் முதலீடுகளின் மீது உயர்ந்த வீத வருவாயை உழைப்பதற்கு இயலச் செய்யும் விதத்தில் அவர்களுக்கு கூடியளவு முதலீட்டு வாய்ப்புக்களை வழங்குகிறது. மாறாக, பொருளாதார அபிவிருத்தியின் விரும்பத்தக்க மட்டத்தினை பெறுவதற்குத் தேவைப்படும் அனைத்து முதலீடுகளையும் நிதியிடுவதற்கு போதுமான உள்நாட்டுச் சேமிப்புக்களைக் கொண்டிராத நாடுகளின் முதலீட்டு-சேமிப்பு இடைவெளியை இச் செயற்பாட்டு முறை நிரப்புகிறது. சந்தை விசைத் தத்துவங்களுக்கிணங்க இச் செய்முறை தொழிற்படுமாயின், இரு தரப்பினர்களும், அதாவது முதலீடு செய்யும் நாடும் அதனைப்பெறும் நாடும் சிறந்த நன்மைகளைப் பெறமுடியும். இச் செயல்முறையின் அனுகூலங்களைக் கண்டறியும் பொருட்டு, முதலீட்டாளர்கள் தமது முதலீடுகள் உயர்ந்த இடர்நேர்வுகளுக்கு சீராக்கம் செய்யப்பட்ட வருவாய் வீதத்தினை உருவாக்கும் என்ற நம்பிக்கையை கொள்ளும்விதத்தில் மூலவளம் குறைந்த நாடுகள், அதனைக் கட்டியெழுப்ப வேண்டும். இவ்வடிப்படைத் தத்துவத்திற்கு கிழக்காசியாவிலுள்ள நாடுகள் சில அண்மைய நெருக்கடிகளுக்கு முன்னர் நீண்டகாலமாக வெளிநாட்டு சேமிப்புக்களின் பாய்ச்சலை உறுதியாகவும், தொடர்ச்சியாகவும் கவரக்கூடியனவாகவும் "அதிசயிக்கத்தக்க" வளர்ச்சியை எய்தக்கூடியனவாகவும் இருந்தவேளையில் பெரும்பாலான ஆபிரிக்க நாடுகள் இன்னமும் அபிவிருத்தியடைந்த நாடுகளின் மற்றும் அரச நிறுவனங்களுக்கிடையிலான அலுவல்சார் அபிவிருத்தி உதவிகளிலும் தொடர்ந்தும் தங்கியிருப்பதையும் இந்த அடிப்படைத் தத்துவம் விளக்குகின்றது. இந் நாடுகளில் பெரும்பாலானவை முதலீட்டாளர் நம்பிக்கையினை பெருமளவிற்கு அதிகரித்த கட்டுப்பாடற்ற மூலதன அசைவினை அனுமதித்துள்ளன. உண்மையில் நீண்டகாலமாக இந் நாடுகளில் காணப்பட்ட விரைந்த பொருளாதார அபிவிருத்தியின் காரணமாக இந் நாடுகளில் சில, தேறிய மூலதனப் பெறுநர்கள் என்ற நிலையிலிருந்து தேறிய மூலதன வழங்குநர்கள் என்ற நிலைக்கு படிப்படியாக மாறின.

எனினும், தாராளமயப்படுத்தப்பட்ட மூலதனக் கணக்கானது மூலதன வெளியிலும் அதே விரைவாக உள்ளேயும் பாயலாம் என்பதை உட்கிடையாகக் கொண்டுள்ளது. எனவே இந்த முறையில் நம்பிக்கை தான் முக்கியம் என்பது அத்தியாவசியமாக உள்ளது. கிழக்காசிய நெருக்கடியின்போது, இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா மற்றும் தென்கொரியா போன்ற மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகள் குறுகிய காலமொன்றில் பாரிய மூலதன வெளிப்பாய்ச்சல்களுக்கு உட்பட்டன. எனினும் சிங்கப்பூர், கொங்கொங் மற்றும் தாய்வான் போன்ற சில நாடுகள் இந் நெருக்கடியை திறம்பட எதிர்த்து நின்றன. இந் நெருக்கடிக்கு அவர்கள் பதிலிறுத்த விதத்தில் காணப்பட்ட வேறுபாடுகளுக்கு நிதியியல் முறையின் ஆற்றல், அளவில் காணப்பட்ட வேறுபாடுகளே பெருமளவிற்குக் காரணம் என விவாதிக்கப்பட்டு வருகிறது. பாரியளவு மூலதன உட்பாய்ச்சலைக் கவர்ந்த வலுவான முதலீட்டாளர் நம்பிக்கை இப் பிராந்தியத்திலுள்ள அனைத்து நாடுகளுக்கும் பொதுவானது. எனினும் சில நாடுகளின் நிதியியல் முறை போதுமானளவிற்கு ஆற்றல் அற்றதாகவும் போதுமான அளவு ஒழுங்கு முறைப்படுத்தப்படாததாகவும் காணப்பட்டது. சொத்து விலை அதிகரிப்புக்களுக்கு காரணமான உண்மைச் சொத்து போன்ற இலாபமளிக்காத ஊக நடவடிக்கைகளுக்குள் மூலதன உட்பாய்ச்சல்கள் நகர்ந்தன. இந் நாடுகளே இந் நெருக்கடியினால் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தன. இந் நாடுகளின் உள்ளாட்டு நிதியியல் துறையின் தாராளமயமாக்கலானது நலிவுடைய நிதியியல் நிறுவனங்களின் அதிகரிப்பினை அனுமதிக்கும் வகையில் போதுமானளவு வலுவான முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் மற்றும் மேற்பார்வைகளினால் முழுமைப்படுத்தப்படவில்லை. இந் நிறுவனங்கள் பெரும்பாலும் குறுங்கால மூலதனத்தினைப் பெறுவதுடன் பெரும்பாலும் நீண்டகால முதலீடுகளுக்கு நிதியிடுகின்றன. அவற்றின் வருவாய்கள் உள்நாட்டு நாணயங்களிலேயே இருந்தன. இதன் விளைவாக, நாணய பொருத்தப்பாடின்மை காணப்பட்டது. நாணயங்கள் மீதான ஊகத் தாக்குதல்களின் காரணமாக முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழந்ததனால் பாய்ச்சல்கள் முழுமையாக நேர்மாற்றமடைந்து நிறுவனங்கள் தகர்ந்துபோய், நிதியியல் துறைக்கு பாரிய சேதங்களை விளைவிக்கின்றன.

## சிறப்புக் குறிப்பு 11 (தொடர்ச்சி)

இப் பிராந்தியத்தில் காணப்படும் நெருக்கடிக்கு இன்னொரு காரணம் முழுமையான திறந்த மூலதன கணக்குகளுடன் இடைநிலை செலாவணிவீத முறைகள் பேணப்பட்டமையேயாகும். நடைமுறையில் நிரல்படுத்தப்பட்டிருந்த செலாவணிவீதத்தில் இறுக்கத்தை பேணியமையும், விலை உறுதிப்பாட்டினை எய்துவதற்கு வட்டி வீதங்களைப் பயன்படுத்தியமையும், உயர்ந்த வட்டி வீதங்களின் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்காக குறுங்கால வெளிநாட்டு மூலதனங்களின் உட்பாய்ச்சலை ஊக்குவித்தன. நிலையாக நிருணயிக்கப்பட்ட செலாவணிவீத அமைப்பு உறுதியற்றதாக மாறுகின்ற வேளையில் நாணயங்கள் ஊகத்தாக்குதலுக்கு உட்படுகின்றன. உயர்ந்த ஊகத்தாக்குதல் வேளையில் மூலதனப் பாய்ச்சல்கள் உடனடியாக நேர்மாற்றமடைவதனைத் தொடர்ந்து நாணய நெருக்கடியும் பின்னடைவும் தோன்றுகின்றன.

அண்மைய நெருக்கடியின் அனுபவங்கள் மூலதனங்களை வழங்குபவர்களுக்கும் மூலதனங்களைப் பெறுபவர்களுக்கும் பல பாடங்களைப் புகட்டியிருக்கிறது. மூலதனங்களை வழங்குவோர் இப்பொழுது அவர்களது முதலீட்டுத் தீர்மானங்கள் பற்றி கூடியளவு எச்சரிக்கையுடன் இருக்கிறார்கள். முதலீட்டாளர் மனப்பான்மை மாற்றமடைந்துள்ளதுடன் உறுதியற்ற பேரண்டப் பொருளாதாரத்தையும், அரசியல் அடிப்படைகளையும் கொண்ட நாடுகளினால் வெளிநாட்டு மூலதனக் கணக்குகளைத் திறப்பது பாரிய மூலதன வெளிப்பாய்ச்சல் அபாயத்துடன் கூடிய ஒரு கேடாகும். வெளிநாட்டு மூலதனத்தைக் கவரும் நோக்குடன் அவற்றின் மூலதனக் கணக்கினை திறப்பதற்கு திட்டமிட்டுவரும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தாராளமயப்படுத்தலுக்கான குறிப்பிட்ட முன்நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டியிருக்கும். முழுமையாகத் திறந்த மூலதனக் கணக்குகளை விதந்துரைத்த ப.நா.நிதியம் போன்ற பல்புடை நிறுவனங்கள் கூட இப்பொழுது மிகக்கூடிய எச்சரிக்கையான அணுகுமுறை தேவை என்பதனை ஏற்றுக் கொண்டுள்ளன.

பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு முதல் முன் நிபந்தனையாக விதிக்கப்பட்டிருக்கிறது. போட்டித்தன்மையும் வினைத்திறனும் மிக்க நிதியியல் முறை இரண்டாவதாகும். வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் கூடியளவிற்கு தாராளமாக்கப்பட்ட சூழலொன்றில் நலிவடைந்த நிதியியல் நிறுவனமாக உருவாவதனைத் தடுக்கும் பொருட்டு அவை முன்மதியுடைய ஒழுங்குவிதிகளுக்கும், மேற்பார்வைக்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும். நிதியியல் நிறுவனங்கள் தமது இடர்நேர்வு முகாமைத்துவத்தினை மேம்படுத்துதல் வேண்டும். அதேநேரம் உள்நாட்டு மூலதன மற்றும் பணச்சந்தைகளின் அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட வேண்டும். இடையீட்டு நிதியங்களுக்காக வங்கித்துறை மீது அளவுக்கதிகமாகத் தங்கியிருப்பதுடன் தொடர்பான இடர்ப்பாடுகளை நெருக்கடிகள் எடுத்துக்காட்டின. நீண்டகால மூலதனப் பாய்ச்சல்கள் மீதான கட்டுப்பாடுகள் குறுங்காலப் பாய்ச்சல்களுக்கு முன்னதாக தாராளமயப்படுத்தப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. மூலதனக்கணக்கு தாராளமயமாக்கல் செயற்பட்டு வருவதனால், வட்டிவீத வேறுபாடுகளின் நன்மைகளை அடைந்துகொள்ளப் பார்க்கும் செலாவணி உட்பாய்ச்சலைத் தணிப்பதற்கு பெருமளவு செலாவணிவீத நெகிழ்ச்சி விருப்பப்படுகிறது.

### இலங்கைக்கான வாய்ப்புக்கள்

பொருத்தமான ஒழுங்குமுறையான சீர்திருத்தங்களுடன் திறந்த மூலதனக் கணக்கிலிருந்தான நன்மைகளை இலங்கையும் பெறமுடியும். இலங்கையில் மூலதனக்கணக்கு ஓரளவிற்கு தாராளமயப்படுத்தப்பட்டுள்ளது. 1977இல் பொருளாதார தாராளமயப்படுத்தல் செயல்முறை அறிமுகப்படுத்தப் பட்டதுடன் மூலதனக்கணக்கினை ஓரளவிற்கு தாராளமயப்படுத்துவதற்கான படிப்படியான செயலாற்றமானது, வர்த்தக வங்கிகள் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டமையுடன் 1978இல் தொடங்கியது. வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள் நிறுவப்பட்டமையானது எந்த ஒரு வதிவற்றோருக்கும் அல்லது முதலீட்டுச்சபைக் கம்பனிகள் போன்ற ஒப்புதலளிக்கப்பட்ட வதியும் தொழில் முயற்சிகளுக்கும் கடன்களையும் முற்பணங்களையும் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டமையானது இம் முன்னேற்றத்தில் மேலும் ஒரு படியாகும். அதன் பின்னர் மூலதனக் கணக்கு தாராளமயப்படுத்தலின் செயற்பாடு மெதுவடைந்தது.

இச் செயற்பாட்டின் இரண்டாவது கட்டம் 1990களின் தொடக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் மூலதனக்கணக்கு தாராளமயப்படுத்தலில் விரைவான முன்னேற்றமொன்று எய்தப்பட்டது. முக்கிய அபிவிருத்திகள் வருமாறு.

(அ) 1990ஆம் ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ள விலக்கல்கள், வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய வெளிநாட்டு

## சிறப்புக் குறிப்பு 11 (தொடர்ச்சி)

கம்பனிகளிலுள்ள பங்குகளிலுள்ள தமது முதலீடுகளை வழங்கப்பட்ட பங்கு மூலதனமான 40 சதவீதத்திலிருந்து 100சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் கொள்வனவு செய்யப்படும் பங்குகளின் மீதான 100 சதவீத மாற்றல் வரி நீக்கப்பட்டது.

(ஆ) 1990ஆம் ஆண்டில் கொழும்புப் பங்கு பரிவர்த்தனையின் முதலீடுகளுக்கு வசதி செய்யுமுகமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளைத் திறப்பதற்கும் தொழிற்படுத்துவதற்கும் வர்த்தக வங்கிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

(இ) 1994ஆம் ஆண்டில் ஏற்றுமதிப் பணப்பெறுகைகள் தொடர்பான மீளவனுப்பல்கள் மற்றும் சமர்ப்பித்தல்கள் ஒழிக்கப்பட்டன.

(ஈ) 1995ஆம் ஆண்டில் வர்த்தக வங்கிகள் அவற்றின் மூலதன மற்றும் ஒதுக்குகளில் 15 சதவீதம் வரையில் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டன.

(உ) 1996ஆம் ஆண்டில் தனியார்துறை நிறுவனங்களுக்கு அவை வெளிநாடுகளில் கட்டுப்பாடற்ற மிகச் சுதந்திரமான முறையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு விடயங்கள் ஒவ்வொன்றினதும் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டன.

(ஊ) 2001ஆம் ஆண்டில் வதிவற்றோர் டொலரில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களில் முதலீடு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

(எ) 2002ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம், தொடர்பான ஒழுங்குபடுத்தல்கள் அதிகாரசபையின் ஒழுங்குவிதிகளுக்குட்பட்டு வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்களின் மீதிருந்த பெரும்பாலான கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு முன்மொழிந்தது.

இலங்கையில் மூலதனப் பாய்ச்சல்களின் மீதான ஒழுங்குவிதிகள் பின்வரும் முக்கிய துறைகளில் மட்டும் இன்னமும் பேணப்படுகின்றன.

1. கம்பனி கடனீட்டுப் பத்திரங்கள் போன்ற தனியார் துறையினால் வழங்கப்பட்ட நிலையான வருமானப் பிணையங்களில் வதிவற்றோர் முதலீடுகள்
2. வெளிநாடுகளிலிருந்து குறுங்கால மற்றும் நீண்டகால தனியார் கடன்பாடுகள்
3. வதிவோரின் வெளிநாட்டு முதலீடுகள்

மூலதனக்கணக்கினை முழுமையாக தாராளமயப்படுத்துவது 1977இல் தொடக்கப்பட்ட தாராளமயமாக்கல் செயற்பாட்டினைத் தர்க்கரீதியாக பூரணப்படுத்தும். எனினும், அண்மைய அனுபவங்களும், நெருக்கடிகளும் இக் குறிக்கோளினை அடைவதற்கு எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது முக்கியமானது என்பதனை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. ஆகவே தாராளமயமாக்கலின் முழு நன்மைகளையும் பெற்றுக்கொள்வதற்கு மூலதனக் கணக்கினை தாராளமயமாக்குவதில் உறுதியான செயற்பாடு அவசியமாகவுள்ள அதேவேளையில், அடிக்கடி மாறுபடும் பன்னாட்டு மூலதன பாய்ச்சலிலிருந்தான எந்த ஒரு பாதகமான தாக்கத்தினையும் தவிர்க்கும் விதத்தில் முன்னெச்சரிக்கை வழிமுறைகளையும் எடுத்தல் வேண்டும். நெருக்கடியான நிலை ஒன்றில் எந்தவொரு மோசமான தாக்கத்தினையும் தவிர்ப்பதற்குத் தேவையான கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான உரிமையை நாடுகள் கொண்டுள்ளன. நெருக்கடியின் போது அடிக்கடி மாறுபடும் குறுங்கால மூலதன அசைவுகளின் நிலைகுலையச் செய்யும் தாக்கங்களைக் குறைக்கும் பொருட்டு தெரிந்தெடுக்கப்பட்ட சில கட்டுப்பாடுகளை மலேசியா விதித்தது. ஒப்பந்த உறுப்புரைகளின் பன்னாட்டு நாணய நிதியத்தின் உறுப்புரை vi நடைமுறைக் கணக்கின் மீது கட்டுப்பாடுகளை விதிக்காமல் பன்னாட்டு மூலதன அசைவுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு நாடுகளை அனுமதிக்கிறது. ஆகவே, மூலதனக் கணக்கின் எந்த ஒரு மேலதிக தாராளமயமாக்கலும், தேவைப்படுமிடத்து கட்டுப்பாடுகளை மீளவிதிக்கப்பட முடியாது என்பதனை உட்கிடையாகக் கொண்டிருக்கவில்லை. முழுமையாக தாராளமயமாக்கப்பட்ட நடைமுறைக் கணக்கின் கீழ், மூலதன வெளிப்பாய்ச்சல் மீதான கட்டுப்பாடுகள் மிகக் குறைவான தாக்கத்தினையே கொண்டிருந்தன. வெளிப்பாய்ச்சல்களின் மீது கட்டுப்பாடுகள் இருக்குமாயின் பன்னாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கு தயங்குவார்களாகையால் தற்போதுள்ள கட்டுப்பாடுகள் சாத்தியமான உட்பாய்ச்சலை குறைத்துவிடும் போல் தோன்றுகின்றது.

மூலதனக் கணக்கினை பூரணமாக

## சிறப்புக் குறிப்பு 11 (தொடர்ச்சி)

வழங்குவதுடன் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தினையும். ஒழுங்குபடுத்தும், நலிவடைந்த உள்நாட்டு நிதியியல் நிறுவனங்கள் மூலதனக் கணக்கினை திறந்துவிடுவதன் மூலம் போட்டியை எதிர்கொள்ள இயலாது காணப்படும். உள்நாட்டு வட்டி வீதங்களையும் கணிசமான அளவு உயர்வடைவதற்கு அனுமதிக்கப்பட முடியாது. அவை அரசிறை மற்றும் நாணயக்கொள்கை ஆகிய இரண்டினதும் நடைமுறைப்படுத்தலுக்கான சந்தை நடத்தையை வழங்குகின்றன. எனவே அதிகளவு போட்டித்தன்மை கொண்டதும் தாராளமயமாக்கப்பட்டதுமான பொருளாதார மொன்றை ஏற்றுக்கொள்ளவும் அதற்கு முகம் கொடுப்பதற்கும் தம்மைத் தயார்படுத்திக்கொள்வதற்கு மூலதனக்கணக்கினை தாராளமயப்படுத்தும் தொடர் நிகழ்வுகள் உள்நாட்டு நிதியியல் நிறுவனங்களுக்கு போதுமான காலத்தை வழங்க வேண்டும். மூலதனக் கணக்கின் தாராளமயப்படுத்தலுக்கு முன்பாகத் தேவைப்படுத்தப்படும் பெருமளவிலான அரசிறை உறுதிப்பாட்டுக்கு அது சந்தை நடத்தையொன்றையும் வழங்கும்.

ஏற்கனவே உள்ள கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கான தொடர் நிகழ்வில் முதலாவதாக உள்நோக்கிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்காக ஏற்கனவேயுள்ள மட்டுப்படுத்தல்கள் அகற்றப்பட வேண்டிய வேளையில் சில துறைகளுக்குத் தேவையான ஒழுங்குமுறைப்படுத்தல் முறைகளை அபிவிருத்தி செய்தல் வேண்டும். இரண்டாவதாக அவர்களினது கொடுகடன் நம்பகத்தன்மையின் அடிப்படையில் பன்னாட்டு நிதியியல் சந்தைகளிலிருந்து நீண்டகால கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு தனியார் துறையினருக்கு அனுமதி வழங்கப்படலாம். அத்துடன் கம்பனி கடனீட்டுப்பத்திரம் போன்ற நிலையான வருமான பிணையங்களில் முதலீடு செய்வதற்கு வதிவற்றோரும் அனுமதிக்கப்படலாம். இறுதியாக வதிவுடையோருக்கு வெளிநாட்டு முதலீடும் குறுகிய கால கடன்பாடுகளும் தாராயமயமாக்கப்படலாம். தாராளமயப்படுத்தலின் தொடர்நிகழ்வுகள், அதிகளவு போட்டித்தன்மை கொண்டதும் தாராளமயமாக்கப்பட்டதுமான சூழல் ஒன்றுக்கு தம்மை தயார்படுத்திக் கொள்வதற்கு உள்நாட்டு நிதியியல் துறைக்கு போதுமான காலத்தினை வழங்க வேண்டும். குறுகியகால பாய்ச்சல்களுக்காக மூலதனக் கணக்கினை திறந்துவிட முன்பு அரசியல் மற்றும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு உகந்ததாகும். இந்தச் சூழலில் பேரண்டப் பொருளாதார சமமின்மைகளை குறைப்பதற்கான நம்பத்தகு அரசிறை உறுதிப்பாட்டு நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இதே வேளையில் நிதியியல் முறையின் ஒழுங்கு விதிகளையும் கண்காணிப்பு முறையினையும் வலுப்படுத்துவதற்கும் மூலதனப் பாய்ச்சல்களை கண்காணிப்பதற்கான நவீன முறையொன்றினை விருத்தி செய்வதற்கும் மேலாண்மையாளர்கள் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்.

காரணமாக இருந்தன. குறிப்பாக பின்னயது சிறந்த அரசியல் எண்ணங்களை செயல்முறையில் தொழிற்படுத்தக்கூடிய உபாயங்களுக்கு பயன்மிக்க முறையில் மாற்றக்கூடிய விதத்தில் நிறுவனரீதியில் அபிவிருத்தி மற்றும் சிறந்த இணைப்பு மற்றும் பரஸ்பர விளக்கம் (இரண்டு பக்கமும் நேரடியாக ஈடுபடுபவர்களிடையே) என்பனவற்றிற்கான அவசியத்தினை கோடிட்டுக் காட்டியது.

அதேவேளை, 2001இல் இலங்கைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சல் முக்கியமான பின்னடைவினை எதிர்நோக்கியமைக்கு மோசமான வெளிநாட்டுச்சூழல் பாதுகாப்புக் கரிசனைகள் மற்றும் குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில் காணப்பட்ட நிச்சயமற்ற அரசியல் சூழல் என்பனவற்றினை உள்ளடக்கிய காரணிகளே காரணமாகும். 2001இல் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 82 மில்லியனாக விளங்கி 52 சதவீதமான வீழ்ச்சியை எடுத்துக்காட்டின. நான்காம் காலாண்டில் உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 2 மில்லியனுக்கு கூடுதலாக இருக்கவேயில்லை. வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல் முக்கியமாக வலு (27 சதவீதம்), புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் (22 சதவீதம்), இரசாயனம் (21 சதவீதம்) மற்றும் தொடர்பூட்டல்கள் (12 சதவீதம்) என்பனவற்றில் காணப்பட்டன. புடவை மற்றும் ஆடைகள் துறை நாட்டிற்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சலில் முக்கியமான பங்கினை தொடர்ந்தும் கவர்ந்துகொண்டது. முன்னர் எடுத்துக்காட்டப்பட்டவாறு, இத்துறை வெளிநாட்டு அதிர்வுகளினால் பாதிப்படையக் கூடியதாகும். ஆடைத்துறையில் வெளிநாட்டு முதலீடுகளைத் தொடர்ந்தும் ஊக்குவிப்பது இனிவரும் ஆண்டுகளில், குறிப்பாக பல்நூலிழை தொடர்பான உடன்படிக்கை கட்டம் கட்டமாக 2005இல் ஒழிக்கப்படும்போது மோசமான நிலையை ஏற்படுத்தக்கூடும். மேலும், இலங்கை ஆடை ஏற்றுமதியாளர் என்ற நிலையிலிருந்தும் விலகி, விரைவாக வளர்ச்சியடைந்து வரும் துறைகளான,

குறிப்பாக தகவல் தொழில்நுட்பதுறை மற்றும் தயாரிப்புத்துறைகளின் மீது கவனம் செலுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டாலொழிய, உறுதியான உயர்ந்த வளர்ச்சிப் பாதையில் முன்னேறுவது கடினமானதாக இருக்கும். எனவே, போட்டித்தன்மை மிக்க உலகளாவிய சூழலில் விரைவான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டுவருகின்ற அதேவேளையில் பொருளாதாரத்தின் மீள் எழுச்சியையும் வலுப்படுத்தக்கூடிய துறைகளில் ஆகக்கூடிய மூலதனப்பாய்ச்சல்களையும் பன்முகப்படுத்தப்பட்ட முதலீடுகளையும் மேற்கொள்ளக்கூடிய விதத்தில் முதலீட்டு மேம்பாட்டுக் கொள்கையினை மீளாய்வு செய்வது விரும்பத்தக்கதொன்றாகும்.

பிறிமா மாவாலையின் உடன்படிக்கையின் அந்தஸ்து கட்டு, சொந்தமாக்கு, மாற்றல்செய் என்ற நிலையிலிருந்து கட்டு, சொந்தமாக்கு, தொழிற்படுத்து என்ற நிலைக்கு மாற்றமடைந்தமைக்கான ஐ.அ.டொலர் 65 மில்லியன் மற்றும் சிறீலங்கன் எயார்லைன்சின் தனியார் மயமாக்கல் பெறுகையில் மீதித்தொகையான ஐ.அ.டொலர் 25 மில்லியன் பெறுகைகள் கிடைத்தமை என்பனவற்றின் காரணமாக 2001இல் தனியார் மயமாக்கல் பெறுகைகள் ஐ.அ.டொலர் 90 மில்லியனாகக் காணப்பட்டன. ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் தனியார் மயமாக்கலிலிருந்தான பெறுகைகள் ஐ.அ.டொலர் 3 மில்லினாக மட்டும் காணப்பட்டன. வெளிநாட்டுச் சூழல் குறிப்பாக தொலைத்தொடர்பூட்டல் துறையில் சாதகமாக இருக்காததனால், இலங்கை ரெலிகொம்மின் மேலதிக பங்குகளின் எதிர்பார்க்கப்பட்ட விற்பனையை மேற்கொள்ள முடியவில்லை.

அரசிற்கான நீண்டகாலக் கடன் மூலதனப்பாய்ச்சல் 20 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பாதுகாப்பு தொடர்பான இறக்குமதிகளுக்கான நீண்டகால நிரம்பலர் கொடுகடனே முக்கிய காரணமாகும். இந் நிரம்பலர் கொடுகடனை நீக்கிவிடின், அரசிற்கான மூலதன உட்பாய்ச்சல் சிறிதளவால் மட்டும் அதிகரித்தது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான அலுவல்சார் அபிவிருத்தி உதவிகளின் பொதுவான வீழ்ச்சிக்கு காரணமாக இருந்த மோசமான வெளிநாட்டுச் சூழல், ஆண்டின் பின்னரைப்பகுதியில் காணப்பட்ட நிச்சயமற்ற அரசியல் நிலை, நிறுவனரீதியான பலவீனமான தன்மை மற்றும் நிருவாகச் சிக்கல்கள் காரணமாக திட்ட நடைமுறைப்படுத்தல்களில் காணப்பட்ட தாமதம் என்பன அரசிற்கான மூலதனப்பாய்ச்சலின் மெதுவான வளர்ச்சிக்கு பங்களித்த காரணிகளாகும். நிறுவனரீதியான பலவீனங்களும், நிருவாகச் சிக்கல்களும் வெளிநாட்டு சலுகைரீதியான உதவிகளின் சிறந்த பயன்பாட்டிற்கு முக்கிய தடையாக மாறியுள்ளமையானது சரியான வழிமுறைகளின் அவசிய தேவையை வலியுறுத்துவதாகவுள்ளது.

பல சந்தர்ப்பங்களில் இத்தடைகள் வெளிநாடுகளினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள் இரத்துச் செய்யப்படுவதற்கு காரணமாக இருந்திருக்கின்றன. சலுகைரீதியான வெளிநாட்டு உதவிகளை, குறிப்பாக சலுகைரீதியான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது மூலவளங்கள் கிடைக்கின்ற அதேநேரத்தில் அவற்றைப் பயனுள்ள முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு மேற்குறிப்பிட்ட பிரச்சனைளைக் கட்டுப்படுத்துவது மிக இன்றியமையாததாகும். ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த தலைக்குரிய வருமானம் மற்றைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் சாதகமான சமூக பொருளாதாரக் குறிகாட்டிகள் என்பனவற்றை இலங்கை கொண்டுள்ளமையினால் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் கடன்வழங்கல் அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து சலுகைரீதியான நிதியிடலைப்பெற வேறு தகைமைகள் எதுவும் வேண்டியதில்லை. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் உறுதியான மட்டத்தில் பேணப்படவேண்டுமாயின் உதவிப்பயன்பாட்டு நடைமுறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவது இன்றியமையாததாகும். வெளிநாட்டு நிதிகளை பயனுறுதிமிக்க முறையிலும் உற்பத்தியாற்றல் மிக்க முறையிலும் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்து வதற்குப் பின்னைய மதிப்பீட்டு செயல்முறைகளை நடைமுறைப்படுத்துவது பயன்மிக்கதாகும். அத்தகைய முறை எதிர்காலத்தில் செயற்றிட்டத்தினை அடையாளங் காண்பதற்கும் மூலவள ஒதுக்கத்திற்கும் வசதியளிக்கும்.

அரசினால் பெறப்பட்ட மூலவளங்களில் பெரும்பாலானவை வலு உருவாக்கம், தொலைத்தொடர்பூட்டல், கல்வி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, நீர்ப்பாசனம், சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் மற்றும் தனியார்துறை அபிவிருத்தி என்பனவற்றிற்கானவையாக இருந்தன. இவ்வாண்டில் பல்புடை முகவராண்மைகளினால் நிதியிடப்பட்ட முக்கிய செயற்றிட்டங்கள் தனியார்துறை அபிவிருத்தி செயற்றிட்டம் (25.9 மில்லியன்) மற்றும் தாழ்ந்த வருமான வீடமைப்புத்துறை (ஐ.அ.டொலர் 13.5 மில்லியன்) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டம் (ஐ.அ.டொலர் 8.3 மில்லியன்) பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் நிதியிடப்பட்ட இரண்டாவது பொதுக்கல்வி செயற்றிட்டம் (ஐ.அ.டொலர் 11.9 மில்லியன்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. யப்பானினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள் களனிதிஸ்ஸ இணைந்த சுற்றுவலுப் பொறி (ஐ.அ.டொலர் 58.6 மில்லியன்), பிராந்திய தொலைதொடர்பூட்டல் அபிவிருத்தி செயற்றிட்டம் (ஐ.அ.டொலர் 24 மில்லியன்),

குக்குளே கங்கை நீர்மின்னியல் வலுச்செயற்றிட்டம் (ஐ.அ.டொலர் 23.2 மில்லியன்) சிறிய நுண்பாக கைத்தொழில் வழிகாட்டல் கைத்தொழில் முயற்சி (ஐ.அ.டொலர் 22.7 மில்லியன்), பேஸ்லைன் வீதிச் செயற்றிட்டம் (ஐ.அ.டொலர் 22.4 மில்லியன்) மற்றும் கொழும்பிலுள்ள தொலைத்தொடர்பூட்டல் வலயமைப்பு விரிவாக்கச் செயற்றிட்டம் (ஐ.அ.டொலர் 12.9 மில்லியன்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கியும், பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பும் 2001ஆம் ஆண்டில் முக்கியமான பல்புடை உதவிவழங்கும் முகவர் நிலையங்களாகத் தொடர்ந்தும் விளங்கின. 2001இல் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினதும் மொத்தப் பகிர்ந்தளிப்புக்கள் முறையே ஐ.அ.டொலர் 93 மில்லியனாகவும் ஐ.அ.டொலர் 40 மில்லியனாகவும் காணப்பட்டன. 2001ஆம் ஆண்டில் யப்பான் செயற்றிட்ட உதவியாக ஐ.அ.டொலர் 223 மில்லியனை வழங்கி பாரிய இருபுடை வழங்குனர் என்ற அதன் நிலையைப் பேணிக்கொண்டது. இலங்கையின் வெளிநாட்டு நிதியிடலுக்கான யப்பானின் பங்களிப்பு மொத்த சலுகைரீதியான உதவியில் 53 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் இவ்வாண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியும், பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பும் முறையே 22 சதவீதத்திற்கும் , 9 சதவீதத்திற்கும் வகைகூறின.

### குறுங்கால மூலதனம்

2001இல் தேறிய குறுங்கால மூலதனத்தில் மிகக்கூடியளவு அதிகரிப்பு காணப்பட்டது. இது முக்கியமாக வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 183 மில்லியனால் வீழ்ச்சியடைந்தமையினதும் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் ஐ.அ.டொலர் 71 மில்லியனால் அதிகரித்தமையினதும், வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட ஐ.அ.டொலர் 254 மில்லியன் கொண்ட வீழ்ச்சியினதும் முக்கிய பிரதிபலிப்பாகும். வர்த்தக வங்கிகள் அவற்றின் சொந்த வெளிநாட்டுச் சொத்துக்களையும் வெளிநாட்டிலிருந்தான கடன்பாடுகளையும் மற்றும் அரசிற்கான வெ.நா.வங்கித்தொழில் பிரிவுகளின் வெளிநாட்டு நாணயக்கடன் வழங்கலையும் பயன்படுத்தி டொலரில் குறித்துரைக்கப்பட்ட ஐ.அ.டொலர் 155 மில்லியன் பெறுமதியான இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்தமையானது வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைய காரணமாயிற்று.


அதேவேளை, தனியார் குறுங்கால வர்த்தக கொடுகடன்கள் தேறிய வெளிப்பாய்ச்சலை எடுத்துக்காட்டி இவ்வாண்டில் இறக்குமதியில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. பொருளாதாரம் மற்றும் அரசியல் இரண்டினதும் நிச்சயமற்ற தன்மைகள் சேர்ந்து வலுப்பெற்றமை மற்றும் கம்பனி இலங்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக கொழும்பு பங்குச்சந்தையிலிருந்தான வெளிப்பாய்ச்சல் முன்னைய ஆண்டிலும் பார்க்க மெதுவான வேகத்தில் தொடர்ந்து காணப்பட்டது. வெளிநாட்டு முதலீட்டாளர்களும் குறிப்பாக, திசெம்பர் 5ஆம் நாள் நடைபெற்ற பொதுத்தேர்தலின் பின்னர் இலாபங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் சந்தையில் காணப்பட்ட தற்காலிக மேல்நோக்கிய அசைவுகளினைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

## 9.7 வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்திகள்


முக்கியமான பன்னாட்டு நாணயங்களில் மாறுபடும் தன்மையொன்று காணப்பட்டபோதும் உலகளாவிய பொருளாதார பின்னடைவின், காரணமாக குறைவடைந்த பணவீக்க அழுத்தங்களுடன் பன்னாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தைகள் பொதுவாக ஆண்டு முழுவதும் ஒப்பீட்டுரீதியில் உறுதியாகக் காணப்பட்டன. ஐக்கிய அமெரிக்காவில் பொருளாதாரத்தில் பின்னடைவு கடுமையாகக் காணப்பட்டபோதும், 2001இல் அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் டொலர் உறுதியடைந்தமைக்கு அது மிக வேண்டப்பட்ட ஒதுக்கு நாணயமாக காணப்பட்டமையே காரணமாகும். யப்பானிய யென் ஏற்கனவே மோசமடைந்த பொருளாதார நிலை தொடர்பான கலப்பான சமிக்ஞைகளுக்கும், வங்கித்தொழில் துறையின் சீரமைப்புக்களுக்கும் ஏற்ப நடந்து கொண்டிருக்கும் விதத்தில் ஆண்டு முழுவதும் சில அடிக்கடி மாறுபடும் தன்மைக்கு உட்பட்டிருந்ததுடன், ஐ.அ.டொலருக்கெதிராக 12.6 சதவீதத்தினால் தேய்வடைந்தது. 2000ஆம் ஆண்டில் விரைந்த வேகத்தில் தேய்வடைந்த யூரோ, 2001இல் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக 4.9 சதவீதம் கொண்ட ஆண்டு தேய்வுடன் ஓரளவு உறுதிப் பாட்டினைக் காட்டியது. இசுடேர்லின் பவுண் 2.8 சதவீதத்தினால் தேய்வடைந்த வேளையில் இந்திய ரூபா 3.2 சதவீதத்தினால் நலிவுற்றது. சிங்கப்பூரின் பொருளாதாரம் கடுமையாக மெதுவடைந்தமையின் காரணமாக சிங்கப்பூர் இவ்வாண்டில் ஒப்பீட்டு ரீதியில் 6.3 சதவீதம் கொண்ட விரைவான வேகத்தில் தேய்வடைந்தது. கொறியாவின் வொன்னும், தாய்லாந்தின் பாத்தும் மிக உறுதியாக விளங்கி ஐ.அ.டொலருக்கெதிராக முறையே 4.5 சதவீதத்தினாலும் 1.8 சதவீதத்தினாலும் தேய்வடைந்தன. 2000ஆம் ஆண்டில் உயர்ந்த மாறுபடும் தன்மைக்குட்பட்டிருந்த இந்தோனேசியா ரூப்பியாவும், பிலிப்பைன்சின் பீசோவும் 2001இல் முறையே 7.6 சதவீதம் 3.1 சதவீதம் கொண்ட ஆண்டுத் தேய்வுடன் உறுதியாகக் காணப்பட்டன. மலேசிய றிங்கித் இவ்வாண்டில் ஐ.அ.டொலரொன்றிற்கு

**வரைபடம் 9.6**
**பயன்தரு செலாவணி வீத சுட்டெண்கள்**

வரைபடம் 9.6.1
உண்மைப் பயன்தரு செலாவணி வீத சுட்டெண்கள்
(1995 = 100)




வரைபடம் 9.6.2
பெயரளவு பயன்தரு செலாவணி வீத சுட்டெண்கள்
(1995 = 100)




3.8 ஆக நிலையாகக் காணப்பட்டது.

## ரூபாவினை சுதந்திரமாக மிதக்கவிடல்

2001 சனவரி 23ஆம் நாளன்று வெளிநாட்டுச் செலாவணி வீத அமைப்பு கட்டுப்படுத்தப்பட்ட மிதக்கவிடலிலிருந்து, சுதந்திரமாக மிதக்கவிடலுக்கு நகர்ந்தது. உண்மையில், இலங்கை நிர்ணயிக்கப்பட்ட செலாவணிவீத முறையிலிருந்து 1977 நவெம்பரில் நெகிழ்ச்சியான செலாவணி வீதமுறையொன்றிற்கு மாறியது. சுதந்திரமாக மிதக்கவிடுகின்ற ஒரு அமைப்பினைக் கொண்டிருக்கும் இறுதி இலக்கினை அடையும் நோக்குடன் செலாவணிவீத அமைப்பு காலத்திற்குக் காலம் தாராளமயப்படுத்தப்பட்டது. குறிப்பாக 2000ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் காணப்பட்ட பாரிய சென்மதிநிலுவைப் பற்றாக்குறை மற்றும் அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்கில் ஏற்பட்ட பெருமளவு குறைப்பு என்பன, சந்தை அழுத்தங்களை விடுவிப்பதற்காக செலாவணிவீத பிரிவில் பல தொடர்ச்சியான சீராக்கங்களைச் செய்ததன் பின்னர் ரூபாவினை மத்திய வங்கி சுதந்திரமாக மிதக்கவிடுவதற்கு காரணங்களாக அமைந்தன. சுதந்திரமாக மிதக்கவிடுகின்ற அமைப்பிற்கு மாறியமையானது அலுவல்சார் ஒதுக்குகளின் குறைப்பினை நிறுத்தி, பெருமளவிற்கு தேய்வடையும் என்ற சந்தை எதிர்பார்ப்புக்கள் பெருமளவிற்குக் குறைந்ததுடன் செலாவணி வீதம் உறுதியடைய உதவியதன் மூலம் சந்தை நம்பிக்கையும் மேம்படுத்தியது. சுதந்திரமாக மிதக்கவிடுவதற்குப் பதிலாக, மத்திய வங்கி செலாவணிவீதப் பிரிவிற்கு காலத்திற்குக்காலம் சீராக்கங்களைச் செய்வதனைத் தொடர்ந்தும் மேற்கொண்டிருக்குமாயின் செலாவணி மற்றும் பணச்சந்தை இரண்டினதும் உறுதிப்பாட்டின் மீது மிக மோசமான சிக்கல்களைத் தோற்றுவித்திருக்கும் விதத்தில் நாடு அதன் அலுவல்சார் ஒதுக்கு முழுவதனையும் குறுகிய காலமொன்றில் இழந்திருக்கக்கூடும். மிதக்கவிடப்பட்ட பின்னர் ஒப்பீட்டுரீதியில் குறுகிய காலமொன்றிற்குள் ரூபாவினை உறுதிப்படுத்திய மையானது, பணவீக்க வீதத்தின் மீது மோசமான தாக்கங்கள் சாத்தியமாகலாம் என்ற பொதுமக்களின் கவலைகளை நீக்கிவிட்டது.

எதிர்பார்க்கப்பட்டவாறு, மிதக்கவிடப்பட்ட பின்னர் உடனடியாகச் செலாவணிவீதம் மிகையாக உயர்வடைந்தது. எனினும, தம் நாணயங்களை மிதக்கவிட்ட மற்றைய பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகையான உயர்வு அளவில் குறைவானதாகவும் காலஅளவில் மிகக் குறுகியதாகவும் காணப்பட்டது.

ஆரம்ப மிகை உயர்வுகளை எதிர்பார்த்து, மத்திய வங்கி செலாவணிச் சந்தையில் உறுதிப்பாட்டினைப் பேணும் நோக்குடன், வர்த்தக வங்கிகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களின் ஆலோசனையுடன் பல முன்னெச்சரிக்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது. வர்த்தக வங்கிகள் வெளிநாட்டுச் செலாவணியில் நாளாந்தம் தொழிற்படுகின்ற நிலுவையின் மீதான தேறிய வெளிப்படையான நிலையினை மட்டுப்படுத்துமாறும், ஏற்றுமதிப் பெறுகைகள் வழங்கப்பட்ட பகுதிக்குள் பயன்படுத்துவதன் மூலம் ஏற்றுமதியாளர்களினால் ஏற்றுமதிக் கொடுகடன் தீர்ப்பனவு செய்வதனை உறுதிப்படுத்துமாறும் அவற்றின் முன்நோக்கிய சந்தைத் தொழிற்பாடுகளை வர்த்தகத்ததுடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துமாறும், வெளிநாட்டு செலாவணியின் முன்னோக்கிய விற்பனைகளின் மீது வைப்பு இலாப தேவைப்பாட்டினை விதிக்குமாறும், இறக்குமதி உண்டியல்களின் முற்கொடுப்பனவுகளை

**சிறப்புக் குறிப்பு - 12**

## இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய சந்தை

முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணியானது ஒரு நாணயத்துக்கு எதிராக இன்னொரு நாணயத்தை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கு எதிர்கால விநியோகம் மற்றும் கொடுப்பனவுக்கான விலையை இன்றே நிருணயம் செய்வதற்கும் இரு தரப்பினருக்குமான விலையை இன்றே நிர்ணயம் செய்வதற்கு இரு தரப்பினரும் உடன்பட்டுக் கொள்ளும் ஒப்பந்தங்களாகும். முன்னோக்கிய விலைகள்,[1] வழமையாக அடிப்படையான சொத்தினை தொடர்ந்து பேணுவதற்கான செலவு, அதாவது அடிப்படையான சொத்தின் உடமையாளர்களால் கொடுக்கல் வாங்கல் ஆரம்பமான காலத்திலிருந்து முதிர்ச்சிக்காலம் வரையில் செய்யப்பட்ட செலவுகள் மற்றும் பரிமாறிக்கொள்ளப்படும் இரு நாணயங்களுக்கிடையிலான வட்டி வீத வேறுபாடு என்பவற்றால் நிர்ணயிக்கப்படுகின்றது. உடன் மற்றும் முன்னோக்கிய வீதங்களுக்கு இடையிலான வேறுபாடுகள் வட்டிவீத வேறுபாட்டுடன் இடர்நேர்வுக்கான கட்டண மொன்றையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இடர்நேர்வு கட்டணமானது பொருளாதாரத்தில் நிலவும் நிச்சயமற்ற தன்மை, வெளிநாட்டுச் செலாவணி சந்தையின் அடிக்கடி மாறுபாடடையும் தன்மை, பல்வேறு வீதங்களில் செலாவணிகளை பரிமாறிக் கொள்ளுவதிலுள்ள செலவு, நிருவாக மற்றும் பரிமாற்ற செலவுகள், வர்த்தக வங்கிகள் மிகையான வெளிநாட்டு செலாவணிகளை கொண்டுள்ளனவா அல்லது பற்றாக்குறையை கொண்டுள்ளனவா, ஒப்பந்தத் தொகை, வாடிக்கையாளரின் நம்பகத்தன்மை என்பவற்றால் நிர்ணயிக்கப்படுகின்றது.

1. முன்னோக்கிய செலாவணிவீதம் பின்வருமாறு கணிக்கப்பட முடியும்.
   $F_t = S_t + V_t$
   இங்கு $V_t = r_t + u_t$
   $F_t$ = முன்னோக்கிய செலாவணி வீதம்
   $S_t$ = உடன் செலாவணி வீதம்
   $r$ = வட்டி வேறுபாடு
   $U$ = இடர்நேர்வுக் கட்டணம்

முன்னோக்கிய சந்தையில் பொதுவாக இழப்பீட்டு கைகாப்பு ஏற்பாட்டாளர்கள், ஊக வணிகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், நிதியியல் இடையீட்டாளர் ஆகிய மூன்று வகையான பங்கேற்பாளர்கள் உள்ளனர். இழப்பீட்டு கைகாப்பு ஏற்பாட்டாளர்கள் செலாவணிவீத வேறுபாட்டு இடர்நேர்விலிருந்து கைகாப்புச் செய்வதற்காக செலாவணியின் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றனர். ஊக வணிகர்கள் எதிர்கால செலாவணிவீத எதிர்வுகூறலின் மூலம் இலாபங்களை பெறுவதற்கு முனைகின்றனர். நிதியியல், இடையீட்டாளர்கள், குறிப்பாக வர்த்தக வங்கிகள் கைகாப்பு ஏற்பாட்டு மற்றும் ஊக நடவடிக்கைகளில்

**அட்டவணை 1**
**மாதாந்த சராசரி வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள்**

ஐ.அ.டொலர் மில்லியன்

| | 1996 சனவரியில் இருந்து 2000 செத்தெம்பர் வரை | மிதக்கவிட முன்பு (2000 ஒத். - திசெ.) | மிதக்கவிட்ட பின்பு (2001 சன. - யூன் | முன்னெச்சரிக்கை வழிமுறைகள் நீக்கப்பட்டதன் / தளர்த்தப்பட்டதன் பின்பு (2001 யூலையின் பின்) |
|---|---|---|---|---|
| வங்கிகளுக்கிடையிலான மொத்த சராசரி மாதாந்தக் கொடுக்கல் வாங்கல்கள் | 269 | 171 | 138 | 134 |
| ஆகக் குறைந்தது | (பெப்.1996) 64 | (ஒத்.2000) 115 | (ஏப்.2001) 118 | (திசெ.2001) 105 |
| ஆகக் கூடியது | (செத்.1997) 729 | (திசெ.2000) 257 | (மாச்.2001) 169 | (யூலை2001) 179 |
| முன்கொடுக்கல் வாங்கல்கள் | 72 | 18 | 12 | 38 |
| ஆகக் குறைந்தது | (சன.1999) 18 | (ஒத்.2000) 13 | (பெப்.2001) 3 | (நவெ.2001) 17 |
| ஆகக் கூடியது | (திசெ.1997) 223 | (நவெ.2000) 24 | (மாச்.2001) 22 | (பெப்.2002) 56 |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல்களின் சதவீதமாக முன்கொடுக்கல் வாங்கல்கள் (%) | 25.9 | 11.8 | 8.8 | 28.9 |
| ஏற்றுமதிகளிலிருந்தான வர்த்தக வங்கிகளின் முன் கொள்வனவுகள் | | | 5.4 | 10.8 |
| இறக்குமதியாளர்களுக்கான வர்த்தக வங்கிகளின் முன் விற்பனைகள் | | | 13.7 | 18.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## சிறப்புக் குறிப்பு - 2 (தொடர்ச்சி)

ஈடுபடுவதுடன் அவற்றின் முக்கிய பங்கு முன்னோக்கிய ஒப்பந்தங்களை கொள்வனவு மற்றும் விற்பனை செய்வதாகக் காணப்பட்டது. அவற்றின் இலாபம் முன்னோக்கிய விலைக்கோரல் மற்றும் முன்னோக்கிய கேட்கப்பட்ட விலைகள் என்பவற்றுக்கிடையிலான மிகையாகும்.

இலங்கையின் உடன் செலாவணிச் சந்தையுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு செலாவணிக்கான முன்னோக்கிய சந்தை மிகச்சிறியதாகும். உதாரணமாக கடந்த ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களில் மாதாந்த சராசரி அளவு ஐ.அ.டொலர் 69 மில்லியனாக விளங்கி வங்கிகளுக்கு இடையேயான வெளிநாட்டு செலாவணிச் சந்தையின் மொத்த செலாவணி கொடுக்கல் வாங்கல்களின் 25 சதவீதத்திற்கு வகைகூறியது. செலாவணிச் சந்தை குறிப்பாக 2000இன் இறுதிக் காலாண்டிலும் 2001ஆம் ஆண்டில் முதலாம் காலாண்டிலும் செயலற்றுக் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டின் பிற்பாகத்தில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவிய நிச்சயமற்ற தன்மை முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களை பெருமளவுக்கு குறைவடையச் செய்தது. இதைப்போன்றே 2001ஆம் ஆண்டு சனவரியில் ரூபா மிதக்கவிடப்பட்டதைத் தொடர்ந்து அறிமுகப்படுத்தப்பட்ட முன்னெச்சரிக்கை வாய்ந்த நடவடிக்கைகள் வெளிநாட்டுச் செலாவணி சந்தைக்கு உறுதிப்பாட்டினை வழங்கியபோதும் முன்னோக்கிய செலாவணிச் செயற்பாட்டை ஊக்கமிழக்கச் செய்தன. முன்னெச்சரிக்கை வாய்ந்த இந் நடவடிக்கைகளில் பெரும்பாலானவை தளர்த்தப்பட்டதை உடனடுத்து தொழிற்பாடுகள் தீவிரமடைந்து முன்னோக்கிய சந்தை செயற்பாட்டினை விரிவடையச் செய்தன.


2001ஆம் ஆண்டு பெப்புருவரியில் மொத்த முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள் ஐ.அ.டொலர் 2.78 மில்லியனாக அமைந்து அதன் ஆகக்குறைந்த மட்டத்தினை வெளிக்காட்டின. இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளினூடாக உறுதிப்பாடு மீட்சிபெற்றதனைத் தொடர்ந்து முன்னோக்கிய சந்தை தற்போது பெருமளவு தீவிரமடைந்துள்ளதுடன் வங்கிகளுக்கிடையேயான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் அளவு 2002 பெப்புருவரியில் ஐ.அ.டொலர் 56 மில்லியனுக்கு அதிகரித்தது.

முன்னோக்கிய சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் 2000ஆம் ஆண்டின் பிற்பாகத்திலும், 2001ஆம் ஆண்டிலும் மிகைக் கேள்வியொன்றை எடுத்துக்காட்டின. இது வாடிக்கையாளரால் தோற்றுவிக்கப்பட்ட முன்னோக்கிய விற்பனைகளின் அளவு அதிகரித்து காணப்பட்டமை மூலம் தெளிவாக சான்றளிக்கப்பட்டது. ரூபா மேலும் பெறுமானத் தேய்வடையும் என்ற எதிர்பார்ப்பில் பெரும்பாலான இறக்குமதியாளர்கள் அவர்களது இருப்பினை காப்பு செய்வதற்கு முனைந்ததன் மூலமும் இது தெளிவாகப் புலப்பட்டது.

முதிர்ச்சிக்கால நீடிப்புக்கும் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களிலான நிச்சயமற்ற தன்மைக்கும் இடையில் எதிர்க்கணிய நேரடி தொடர்பொன்று காணப்படுகின்றது. சந்தைக் காரணிகளினால் செலாவணி வீதங்கள் நிருணயம் செய்யப்படும் முறையொன்றிலுள்ள பங்கேற்பாளர்கள் பேரண்டப் பொருளாதார மாறிலிகளை எதிர்வுகூற முடியாதிருக்கின்றபோது எதிர்கால உடன் செலாவணி வீதங்களை மதிப்பிடுவதில் இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். அத்தகைய நிலைமைகளில் குறுங்கால ஒப்பந்தங்களிலேயே அவர்கள் விருப்புக் கொண்டிருப்பர். ரூபா மிதக்கவிடப்பட்டதைத் உடனடுத்து "ஒரு மாதத்திற்கு குறைந்த" காலப்பகுதிக்கான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள் முன்னோக்கிய சந்தையில் அதிகரித்துக் காணப்பட்டவேளையில் "ஒரு மாத" முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள் வீழ்ச்சியடைந்தும் "மூன்று மாதத்திற்கு மேற்பட்ட" வகை வெகுவாகக் குறைவடைந்தும் காணப்பட்டன.

செயற்றிறன் மிக்க சந்தை கருதுகோள்களின்படி இன்றைய முன்னோக்கிய செலாவணி வீதம் முதிர்ச்சி நாளன்று உடன் செலாவணி வீதத்திற்கு சமனாக இருத்தல் வேண்டும். இன்றைய செலாவணி வீதம் அனைத்து தொடர்புபட்ட தகவல்களையும் ஏற்கனவே உள்ளடக்கியிருப்பதனால் இன்றைக்கும் நாளைக்கும் இடையில் செலாவணிவீதம் மாற்றமடைவதற்கான ஒரு காரணமாக புதிய செய்திகள்/தகவல்கள்

வரைபடம் 1
முன்னோக்கிய இடைநேர்வு கட்டணம் மற்றும் அளவின் மாறிலி
(வங்கிகளுக்கிடையிலான சந்தையில்)



## சிறப்புக் குறிப்பு - 12 (தொடர்ச்சி)

கிடைக்கப்பெற்றமை அல்லது எதிர்பார்க்கப்படாத நிகழ்வுகள் இடம்பெறுகின்றமையாக இருக்கும். இன்றைய முன்னோக்கிய வீதத்திற்கும் நாளைய உடன் வீதத்திற்கும் இடையிலான வேறுபாடு தெரிந்திருந்தால் முன்னோக்கிய மிகையிலுள்ள முன்னெதிர்வு கூறப்பட முடியாத கூறு மறைந்துவிடும். கணிசமாக மாறுபாடடையும் தன்மையை தவிர்ப்பதற்கு மத்திய வங்கிகளினால் உடன் வீதங்கள் சீராக்கம் செய்யப்படுமாதலினால் முகாமை செய்யப்படும் செலாவணிவீத மிதக்கவிடல் முறையில் இவ் வேறுபாடு சுருங்கியதாக அமைந்து சந்தையினால் எதிர்கால உடன் வீதங்களை மிகவும் துல்லியமாக முன்னெதிர்வு செய்யக்கூடியதாக இருக்கும். ரூபா மிதக்கவிடப்பட்டதனை உடனடுத்து முன்னோக்கிய வீதத்தின் முன்னெதிர்வு செய்யப்பட முடியாத கூறு பெருமளவில் அதிகரித்து ஒருமாத முன்னோக்கிய வீதத்திற்கும் உடன் வீதத்திற்கும் இடையிலான வேறுபாடு ஒருமாத முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் முதிர்ச்சி நாளன்று நேர்க் கணியமானதாக அமைந்து முன்னோக்கிய ஒப்பந்தம் செய்யப்பட்ட வேளையில் எதிர்பார்க்கப்பட்டதை காட்டிலும் செலாவணிவீதம் அதிகரித்தளவில் பெறுமானத் தேய்வடைந்ததை எடுத்துக்காட்டியது.

கோட்பாட்டு ரீதியில் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் நிச்சயமற்ற தன்மை முன்னோக்கிய ஒப்பந்தங்களுக்கான கேள்வியுடன் நேர்க்கணியமாகவும், வழங்கலுடன் எதிர்க்கணியமாகவும் தொடர்பு பட்டுள்ளது. இதன்படி, நிச்சயமற்ற தன்மை மற்றும் முன்னோக்கிய ஒப்பந்தங்களின் அளவு ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு எந்தக் காரணிகள் (வழங்கல் அல்லது கேள்வி) சந்தையில் ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதைப் பொறுத்தே அமையும். இலங்கையின் கடந்த ஒன்றரை ஆண்டுக்கால அனுபவங்கள் இக் கோட்பாட்டிற்கு இசைந்து செல்வதாகவே காணப்படுகின்றன. நிச்சயமற்ற தன்மை எழுகின்றபோது முன்னோக்கிய மிகைக்கும் வட்டி வேறுபாடுகளுக்கும் இடையிலான வேறுபாடு அதிகரித்து முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் அளவு வெகுவாக குறைவடைகின்றது. முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வழங்குனர்கள் ஆதிக்கம் செலுத்துவதுடன் இலங்கையில், சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு வழங்கல் பக்கம் முக்கிய காரணியாக அமைந்துள்ளதென்பது தெளிவாகப் புலனாகின்றது. மாறாக, நிச்சயமற்ற தன்மையானது வட்டி வேறுபாடுகள் மற்றும் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் அளவுகளிலான அதிகரிப்பு என்பவற்றிலேயே தங்கியிருக்கும்.

அண்மைக் காலங்களில் இதன் நேர்மாற்றம் உண்மையாக விளங்கியபோதிலும் உண்மையான பெறுமானத்தேய்வானது முன்னோக்கிய வீதத்தில் மறைமுகமாக குறிப்பிடப்பட்டிருந்த பெறுமானத் தேய்வைக் காட்டிலும் குறைவானதாகவே காணப்பட்டது. இந் நிலைமையின் கீழ் முன்னோக்கிய சந்தையினூடாக ஏற்றுமதியாளர்கள் அவர்களின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை முற்காப்பு செய்ய முயற்சிக்கும் வேளையில் இறக்குமதியாளர்கள் அவர்களது இறக்குமதி கொடுப்பனவுகளுக்கு காப்பினை பெறுவதிலிருந்து விலகிக்கொள்வர்.

இடர்காப்பின்மையின் மட்டுப்படுத்தல்கள் குறுகியதாக அமைந்து காப்பளிக்கப்படாத ஏதேனும் இருப்பு, நொஸ்ரோ கணக்குகளை பேணுதல் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கான வெளிநாட்டுச் செலாவணியை வைத்திருப்பதற்கான வங்கியின் ஆற்றலை குறைவடையச் செய்வதனால் வங்கிகளினால் காப்பளிக்கப்படாத அத்தியாவசியமற்ற இருப்புக்களை வைத்திருக்க முடியாது. இதனால் வங்கிகள் காப்பளிக்கப்பட்ட உடன் அல்லது முன்னோக்கிய இருப்புக்களை கொண்டிருந்தாலன்றி சந்தையில் முன்னோக்கிய விலைகளை குறிப்பீடு செய்வதில்லை. தேறிய திறந்த இருப்பு ஆரம்பத்தில் 2001ஆம் ஆண்டு மாச்சில் மூலதனத்தினதும், ஒதுக்குகளினதும் 10 சதவீதத்திற்கும், அதனையடுத்து 2002ஆம் ஆண்டு மாச்சில் 15 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டமை முன்னோக்கிய சந்தை அபிவிருத்திக்கு உதவி அளித்திருக்கக்கூடும். முன்னோக்கிய சந்தைச் செயற்பாடுகளை கட்டுப்படுத்திய மற்றுமொரு முன்மதியுடைய நடவடிக்கையாக வர்த்தக வங்கிகளால் அவற்றினது வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யப்படும் முன்னோக்கிய வெளிநாட்டு செலாவணிகளுக்கு எதிராக ஐம்பது சதவீத ரூபா வைப்புக்களை கொண்டிருக்க வேண்டுமென்ற தேவைப்பாடு காணப்பட்டது. இக் கட்டுப்பாடானது ஊக அடிப்படையிலான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களை அகற்றுவதற்கு உதவியபோதிலும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலுள்ள பங்கேற்பாளர்களிடையேயான முன்னோக்கிய ஒப்பந்தங்களையும் ஊக்கமிழக்கச் செய்தது. இத் தேவைப்பாடு நீக்கப்பட்டதைத் தொடர்ந்து முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களிலேற்பட்ட அதிகரிப்பில் அதன் தாக்கம் தெளிவாகக் காணப்பட்டது.

முன்னோக்கிய சந்தையிலான தகவல்களின் சமச்சீரற்ற பரம்பலும் முன்னோக்கிய வீதங்களை இரு

## சிறப்புக் குறிப்பு - 12 (தொடர்ச்சி)

வழிகளில் பாதிக்கலாம். முன்னோக்கிய சந்தை பொறிமுறை மற்றும் முன்னோக்கிய விலைகளில் செல்வாக்குச் செலுத்தும் தகவல்கள் என்பனவற்றை வாடிக்கையாளர்கள் அறிந்திராவிடில் வர்த்தக உண்டியல்கள் மீதான அவர்களது செலாவணிவீத இடரினை முன்னோக்கிய சந்தையினூடாக காப்புச்செய்து கொள்வதற்கு அவர்கள் ஊக்குவிக்கப்பட மாட்டார்கள். பாரிய கம்பனித்துறை வாடிக்கை யாளர்கள் முன்னோக்கிய சந்தையின் விலைப் பொறிமுறையை நன்கு அறிந்து கொண்டுள்ள வேளையில் நடுத்தர மற்றும் சிறிதளவு இறக்குமதியாளர்களும், ஏற்றுமதியாளர்களும் அத்தகவல்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்களை கொண்டிருக்கவில்லை. மறுபுறத்தில், வணிகர்கள் கிடைக்கத்தக்கதாகவுள்ள அனைத்து தகவல்களையும் ஒன்று திரட்டாவிட்டால் முன்னோக்கிய மிகையை துல்லியமாக கணக்கிடத் தவறுவதன் மூலம் இழப்புக்களை விளைவிக்கலாம். இடர்நேர்வு மிகை அதிகரித்தளவில் மாறுபடுமாயிருந்தால் முன்னோக்கிய மிகையானது உடன் வீதத்தில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களினது வலுவற்ற குறிகாட்டியாகவே அமையும். எனவே சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு சந்தைப் பங்கேற்பாளர்களிடையே விழிப்புணர்வை அதிகரிப்பது முக்கியமான விடயமொன்றாகும்.

சந்தைப் பங்கேற்பாளர்கள் பணவீக்கத்தின் எதிர்கால போக்கு, எதிர்வுகூறப்பட்ட வட்டிவீதம், பொருளாதார வளர்ச்சி, சென்மதி நிலுவைகள், வெளிநாட்டு ஒதுக்குகள் ஆகிய கிடைக்கத்தக்கதாகவுள்ள அனைத்து உரிய தகவல்களையும் ஒன்று திரட்டினால் அவர்களினால் எதிர்கால செலாவணி வீதங்களை மிகத்துல்லியமாக முன்னெதிர்வு செய்யக்கூடியதாக இருக்கும். வர்த்தக வங்கிகளினால் வாடிக்கை யாளர்களுக்கு குறிப்பீடு செய்யப்படும் முன்னோக்கிய கொள்வனவு மற்றும் விற்பனவு வீதங்கள் மீதான தகவல்கள் உள்ளடங்கலான பெருமளவு தகவல்களை நாளாந்தம் சந்தைக்கு வழங்குவதன் மூலம் முன்னோக்கிய சந்தையிலான சமச்சீரற்ற தகவல் பரம்பலினை குறைவடையச் செய்யமுடியும். வங்கியிலுள்ள வெளிநாட்டு செலாவணி வைப்புக்களுக்கெதிராக உள்ளூர் நாணயத்தில் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் வர்த்தக வங்கிகளுடன் ஏற்றுமதியாளர்கள் வேறுபட்ட வீதங்களில் ஒரு நாணயத்துக்கெதிராக இன்னொரு நாணயத்தை பரிமாறிக் கொள்வதற்கான ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்கு தற்போது அனுமதியளிக்கப்படுவதில்லை. அத்தகைய பரிமாற்றங்களை அனுமதிப்பதால் ஏற்றுமதி வருவாய்கள் இலங்கைக்கு கொண்டுவரப்படுவதனை ஊக்கப்படுத்தி மறுபுறத்தில் முன்னோக்கிய சந்தையை ஊக்குவிக்கும். இது வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலான குறுங்கால திரவத்தன்மை பிரச்சனையை கட்டுப்படுத்தி ஏற்றுமதியாளர்களினது ஐந்தொகையில் முன்மதிகரமான சொத்து முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கும் உதவமுடியும். மேலும் முன்னோக்கிய ஒப்பந்தங்களை செய்துகொள்வதன் மூலம் ஊக வணிகர்களும் இடர்நேர்வை துணிந்து ஏற்கும் முக்கிய பங்கினை ஆற்றுகின்றனர். எனவே, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளை அபிவிருத்திசய்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஊக அடிப்படையிலான செயற்பாடுகளும் அவசியமாகும்.

இயக்க விசை கொண்ட முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையொன்றின் அபிவிருத்தியானது இறக்குமதிகளுக்கான பாரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் போது சந்தையில் செலாவணிவீதம் அடிக்கடி மாறுபாடடையும் தன்மையை குறைவடையச் செய்வதில் கணிசமான தாக்கத்தினைக் கொண்டிருக்கும். இலங்கையின் செலாவணிச் சந்தை குறுகியதாக காணப்படுவதனால் பாரிய இறக்குமதிக் கொடுப்பனவுகள் உடன் செலாவணி அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்பட்டால் அது செலாவணி வீதத்தில் அதிகரித்த தளம்பல்களை விளைவித்து சந்தையில் உறுதிப்பாடற்ற தன்மையை தோற்றுவிக்கலாம். ஆனால் அபிவிருத்தியடைந்த முன்னோக்கிய சந்தையொன்றில் இத் தேவைப்பாட்டினை நீண்டகாலப் பகுதியில் திரட்டிக் கொள்வதன் மூலம் சந்தை உறுதிப்பாடு குழம்பாது தவிர்த்துக்கொள்ளலாம்.

முன்னோக்கிய சந்தையின் செயன்முறைகளும், நுட்பங்களும் உடன் சந்தையின் செயன்முறைகளையும், நுட்பங்களையும் காட்டிலும் சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி வணிகர்கள் உள்ளிட்ட சந்தைப் பங்கேற்பாளர்கள் செயன்முறைகள் மற்றும் நுட்பங்கள் குறித்து சிறந்த அறிவினை கொண்டிருப்பார்களே யானால் முன்னோக்கிய சந்தை செயற்பாடுகளை அவர்களினால் ஊக்குவிக்க முடியும். இப் பின்னணியில் தொடர்புடைய நிறுவனங்கள் அவற்றின் ஊழியர்களுக்கும் அத்துடன் பொதுமக்களுக்கும் பயிற்சியளிப்பதற்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும், கருத்தரங்குகளையும் நடாத்தி முன்னோக்கிய சந்தைகளின் முக்கியத்துவம் மற்றும் அவை எவ்வாறு தொழிற்படுகின்றன என்பன தொடர்பான அவர்களது விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டும்.

## சிறப்புக் குறிப்பு - 12 (தொடர்ச்சி)

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு செழிப்பையும் உறுதிப்பாட்டையும் வழங்குவதில் இன்றியமையாததான மூலமொன்றாக முன்னோக்கிய சந்தை காணப்படுகிறது. இதனால் சுயாதீனமாக மிதக்கவிடப்பட்டுள்ள செலாவணிவீத முறையொன்றைக் கொண்ட தற்கால சூழ்நிலையில் உறுதியான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையொன்றை உருவாக்குவதற்கு முன்னோக்கிய சந்தையை அபிவிருத்தி செய்வது இன்றியமையாததாகும்.

**அட்டவணை 2**
**வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள்**

*ஐ.அ.டொலர் மில்லியன்*

| மாதம் | | உடன் | நாளை | காசு | உப மொத்தம் | முன் | மொத்தம் | சதவீதமாக மு.கொ.வா |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2000 | சனவரி | 164.0 | 17.2 | 15.3 | 196.5 | 81.2 | 277.7 | 29.2 |
| | பெப்புருவரி | 100.0 | 20.6 | 11.4 | 132.0 | 73.0 | 205.0 | 35.6 |
| | மாச்சு | 178.5 | 14.2 | 13.2 | 205.9 | 62.3 | 268.2 | 23.2 |
| | ஏப்பிறல் | 116.5 | 22.9 | 21.5 | 160.8 | 43.8 | 204.5 | 21.4 |
| | மே | 79.0 | 14.6 | 13.5 | 107.1 | 59.5 | 166.6 | 35.7 |
| | யூன் | 111.7 | 6.4 | 5.2 | 123.3 | 54.4 | 177.7 | 30.6 |
| | யூலை | 213.1 | 11.4 | 4.6 | 229.1 | 64.8 | 293.9 | 22.0 |
| | ஓகத்து | 286.8 | 12.7 | 14.4 | 313.9 | 82.2 | 396.0 | 20.7 |
| | செத்தெம்பர் | 228.6 | 26.6 | 7.1 | 262.3 | 43.6 | 305.9 | 14.3 |
| | ஒத்தோபர் | 148.1 | 9.7 | 5.2 | 162.9 | 13.0 | 175.8 | 7.4 |
| | நவெம்பர் | 163.6 | 28.4 | 9.6 | 201.6 | 24.6 | 226.2 | 10.9 |
| | திசெம்பர் | 125.1 | 124.5 | 14.8 | 264.4 | 16.5 | 280.9 | 5.9 |
| 2001 | சனவரி | 128.8 | 18.0 | 6.5 | 153.3 | 15.6 | 168.9 | 9.2 |
| | பெப்புருவரி | 118.0 | 11.9 | 4.0 | 133.8 | 2.8 | 136.5 | 2.0 |
| | மாச்சு | 146.0 | 12.6 | 9.8 | 168.4 | 21.8 | 190.3 | 11.5 |
| | ஏப்பிறல் | 91.3 | 14.2 | 8.9 | 114.4 | 5.2 | 119.5 | 4.3 |
| | மே | 93.4 | 16.2 | 11.7 | 121.3 | 11.5 | 132.7 | 8.6 |
| | யூன் | 75.5 | 25.2 | 18.2 | 118.9 | 17.2 | 136.1 | 12.6 |
| | யூலை | 120.1 | 17.1 | 17.6 | 154.7 | 34.3 | 189.0 | 18.2 |
| | ஓகத்து | 137.8 | 13.4 | 5.8 | 157.0 | 46.2 | 203.1 | 22.7 |
| | செத்தெம்பர் | 102.0 | 10.0 | 9.2 | 121.2 | 44.6 | 165.8 | 26.9 |
| | ஒத்தோபர் | 100.2 | 6.6 | 8.9 | 115.6 | 39.9 | 155.5 | 25.7 |
| | நவெம்பர் | 76.7 | 11.1 | 20.1 | 107.9 | 16.9 | 124.8 | 13.5 |
| | திசெம்பர் | 74.0 | 8.9 | 13.8 | 96.7 | 28.3 | 125.0 | 22.6 |
| 2002 | சனவரி | 83.4 | 14.0 | 14.5 | 111.8 | 40.5 | 152.3 | 26.6 |
| | பெப்புருவரி | 73.2 | 16.1 | 11.9 | 101.2 | 56.3 | 157.4 | 35.7 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி.*

கட்டுப்படுத்துமாறும் தேவைப்படுத்தப்பட்டன. இவ்வழி முறைகளும், மத்திய வங்கி இரண்டொருமுறை சந்தையில் தலையீடு செய்தமையும் செலாவணிச் சந்தையில் உறுதிப்பாட்டினை தோற்றுவித்த வேளையில் வெளிநாட்டுப் போட்டித் தன்மையும் உறுதிப்படுத்தப்பட்டது. இவ்வழி முறைகள் குறுங்காலத்தினைக் கொண்டனவாக இருந்ததுடன் இவற்றில் பெரும்பாலானவை புதிய அமைப்பின் கீழ் சந்தைத் தொழிற்பாட்டாளர்கள் நன்மைகளைப் பெறத்தொடங்கியதுடனும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மேம்பாடடையத் தொடங்கியதுடனும் அகற்றப்பட்டன அல்லது தளர்த்தப்பட்டன.

இப்பின்னணியில், 2001இல் இலங்கை ரூபா யென் தவிர்ந்த அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் தேய்வடைந்தது. இது இடையீட்டு நாணயமான ஐ.அ.டொலருக்கெதிராக 11.3 சதவீதத்தினாலும், இசுடோலிங் பவுண் மற்றும் யூரோ நாணயத்திற்கு எதிராக முறையே 8.8 சதவீதத்தினாலும், 6.7 சதவீதத்தினலும் தேய்வடைந்த வேளையில் யென்னுக்கெதிராக 1.5 சதவீதத்தினால் உயர்வடைந்தது. சி.எ.உ கணக்கின் கூட்டு அலகிற்கெதிரான இவ்வாண்டில் 7.9 சதவீதத்தினாலும் 2001 சனவரி 23இன் பின்னர் 5.5 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது.

ஐந்து கூடை நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் பெயரளவு தாக்கமுற்ற செலாவணி வீதம் 7.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியவேளையில், வர்த்தகப் பங்காளர்களையும், போட்டி நாடுகளையும் உள்ளடக்கிய இருபத்துநான்கு கூடை நாணயங்களுக்கு எதிராக 7.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் 1.4 சதவீதத்தினால் உயர்வடைந்த வேளையில், இருபத்துநான்கு நாணயங்களுக்கெதிரான வீதம் 2001ஆம் ஆண்டு 2.0 சதவீதத்தினால் உயர்வடைந்தது. 2001இன் சந்தையினால் நிர்ணயிக்கப்பட்ட செலாவணி வீதத்தினைப் பொறுத்தவரை போட்டித்தன்மை மட்டத்தில் சிறிதளவு மாற்றம் காணப்பட்டது.

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மையும், 2001 சனவரியில் ரூபா மிதக்கவிடப்பட்டமையைத் தொடர்ந்து, செலாவணிச் சந்தையின் அடிக்கடி மாறும் தன்மையினைக் கட்டுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகளும் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களை ஊக்கமிழக்கச் செய்தன. 1999இன் ஐ.அ.டொலர் 38 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 52 மில்லியனிற்கு அதிகரித்த முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் மாதாந்த சராசரி 2001இல் ஐ.அ.டொலர் 24 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது. முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் மாதாந்தச் சராசரி 2001ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 12 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. 2001 யூலையில் வைப்பு இலாபம் அகற்றப்பட்டதன் பின்னர் முன்னோக்கிய சந்தை நடவடிக்கை ஓரளவிற்கு மீட்சியடைந்தது. 2001இல் ஆண்டின் முதலரைப்பகுதியில் ஒருமாத முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களுக்கான கட்டணம் உயர்வாக இருந்தமைக்கு உள்நாட்டு குறுங்கால வட்டி வீதங்களுக்கும் டொலருக்கான பன்னாட்டு வீதங்களுக்குமிடையில் உயர்ந்த வட்டி வீத வேறுபாடு காணப்பட்டமையும் (ஆறுமாத இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்தினால் பிரதிபலிக்கப்பட்டவாறு) இடர்நேர் கட்டணங்களுமே காரணங்களாக இருந்தன. யூலையின் பின்னர் முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் தளர்த்தப்பட்டமை அதேபோன்று 2001இன் பின்னரைப்பகுதியில் காணப்பட்ட குறைந்த வட்டி வீதங்கள் என்பனவற்றின் காரணமாக முன்னோக்கிய கட்டணம் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. மேம்பட்ட உறுதிப்பாட்டினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வங்கிகளுக்கிடையிலும் முன்னோக்கிய சந்தைகளிலும் வெளிநாட்டுச் செலாவணியின் வாங்கும் மற்றும் விற்கும் வீதங்களுக்கிடையிலான வேறுபாடு ஆண்டின் இறுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது.

## 9.8 வெளிநாட்டுச் சொத்துக்கள்

இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் 2000ஆம் ஆண்டில் ஒதுக்குகளில் ஏற்பட்ட கடுமையான குறைப்புக்களுக்கு மாறாக கணிசமாக அதிகரித்தது. இவ்வதிகரிப்பிற்கு குறைவடைந்த இறக்குமதித் கேள்வி, மசகெண்ணெய் மற்றும் ஏனைய பெற்றோலிய உற்பத்திகளின் பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, துணைநில் ஒழுங்குகளின் கீழ் ப.நா.நிதிய மூலவளங்களின் பயன்பாடு, ரூபா சுதந்திரமாக மிதிக்கவிடப்பட்டமை என்பன காரணங்களாக அமைந்தன. உள்நாட்டின் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி மேற்கொண்ட கணிசமான கொள்வனவுகள் மற்றும் டொலரில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல் என்பனவும் அலுவல்சார் ஒதுக்குகள் அதிகரிப்பதற்கு கருவிகளாக அமைந்தன.

மசகெண்ணெய்யின் பன்னாட்டு விலைகள் 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமை 2001இன் எண்ணெய் இறக்குமதியின் மீது ஐ.அ.டொலர் 170 மில்லியனை சேமிக்க வைத்தது. ரூபா சுதந்திரமாக மிதக்கவிடப்பட்டமை, இறை வழிமுறைகள் (40 சதவீத மேலதிகக் கட்டணம் மற்றும் ஊர்தி இறக்குமதிகளுக்கான தீர்வைச் சலுகைகள் இடைநிறுத்தப்பட்டமை) அறிமுகப்படுத்தப்பட்டமை மற்றும் முன்மதியுடைய வழிமுறைகள் என்பன முக்கியமான குறைந்த இறக்குமதிகளின் மூலம் வர்த்தகக் கணக்கின் மீது சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. ஏப்பிறலில் துணைநில் ஒழுங்குகளின்கீழ் ப.நா.நிதியத்தில் எடுப்பனவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 131 மில்லியன் அலுவல்சார் ஒதுக்குகளுடன் சேர்க்கப்பட்டன. இவ்வாண்டில் சுதந்திரமாக மிதக்கவிடப்பட்ட செலாவணி வீத அமைப்பு மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவுகளுக்கு வசதியளித்த வேளையில் (தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 126 மில்லியன்) டொலரில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் ஐ.அ.டொலர் 158 மில்லியனைத் திரட்டிக் கொண்டன. இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல் (வெளிநாட்டவர்களினால் முதலீடு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 3 மில்லியன் தவிர) நாட்டின் மொத்த ஒதுக்குகளில் தாக்கமெதனையும் கொண்டிராமைக்கு இக் கொடுக்கல் வாங்கல்கள், வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் வர்த்தக வங்கிகளிலிருந்து மத்திய வங்கிக்கு பெயர்ந்தமையை மட்டும் பிரதிபலித்தமையே காரணமாகும். வங்கிகள் இலங்கை அபிவிருத்தி முறிகளை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சுமத்தும்போது தான் நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மேம்பாடடையும்.

**அட்டவணை 9.7**
**செலாவணி வீத அசைவுகள்**


| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கு ரூபா | | | | | | முன்னைய ஆண்டினைவிட சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டு இறுதி வீதங்கள் | | | ஆண்டுச் சராசரி | | | புள்ளிக்குப் புள்ளி | | ஆண்டுச் சராசரி | |
| | 1999 | 2000 | 2001 | 1999 | 2000 | 2001 | 2000 | 2001 | 2000 | 2001 |
| டியுச் மார்க் | 37.09 | 39.23 | 42.07 | 38.39 | 35.76 | 40.90 | -5.5 | -6.7 | 7.4 | -12.6 |
| பிரான்சு பிராங்கு | 11.06 | 11.70 | 12.54 | 11.45 | 10.66 | 12.19 | -5.5 | -6.7 | 7.4 | -12.5 |
| இந்திய ரூபாய் | 1.66 | 1.77 | 1.93 | 1.64 | 1.68 | 1.89 | -6.4 | -8.2 | -2.6 | -11.2 |
| யப்பானிய யென் | 0.71 | 0.72 | 0.71 | 0.62 | 0.70 | 0.74 | -2.0 | 1.5 | -11.7 | -5.4 |
| பவுண் இசுடேர்லிங் | 116.72 | 123.23 | 135.06 | 113.91 | 114.78 | 128.66 | -5.3 | -8.8 | -0.8 | -10.8 |
| ஐ.அ.டொலர் | 72.12 | 82.65 | 93.16 | 70.39 | 75.78 | 89.36 | -12.7 | -11.3 | -7.1 | -15.2 |
| சிஎஉ | 98.87 | 107.69 | 116.97 | 96.25 | 99.90 | 113.75 | -8.2 | -7.9 | -3.7 | -12.2 |

(அ) இலங்கை ரூபாவுக்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.


மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**வரைபடம் 9.7**
**செலாவணி வீத அசைவுகள் - 2001**

**வரைபடம் 9.7.1**
**செலாவணி வீதம் 2001 - ரூபா / ஐ.அ.டொ.**





**வரைபடம் 9.7.2**
**வங்கிகளுக்கிடையிலான முன் கொடுக்கல் வாங்கல்கள் - 2001**




இதன் விளைவாக, ஆண்டின் இறுதியில் நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 2238 மில்லியனுக்கு 5 சதவீதத்தினால் உயர்வடைந்தன. இது, மத்திய வங்கி மற்றும் அரச வசமிருந்த வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஐ.அ.டொலர் 1338 மில்லியனுக்கு 28 சதவீதத்தினால் அதிகரித்தமையினதும் வர்த்தக வங்கிகளின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 900 மில்லியனுக்கு 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையினதும் இணைந்த விளைவாகும். மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு வெளிநாட்டில் வைத்திருக்கப்பட்ட திரவ நிலுவைகளிலும் வெளிநாட்டு பிணையங்களின் உடைமைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களில் பிரதிபலித்தது. வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளினால் வைத்திருக்கப்பட்ட வைப்புக்களில் பிரதிபலிக்கப்பட்டது.

வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் ஐ.அ.டொலர் 1009 மில்லியனுக்கு 8 சதவீதத்தினால் அதிகரித்தன. இதன் விளைவாக, வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 254 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, மொத்த அலுவல்சார் பொறுப்புக்கள் ஐ.அ.டொலர் 70 மில்லியனால் அதிகரித்து ப.நா.நிதியத்திற்கான ஐ.அ.டொலர் 48 மில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்பினையும் யுத்த இடர்நேர்வு காப்புறுதிக் கோரல்களின் காரணமாக அரசிற்கு ஏற்பட்ட ஐ.அ.டொலர் 50 மில்லியன் கொண்ட அவசரகாலப் பொறுப்பையும் பிரதிபலித்தன. இதன் விளைவாக, சென்மதிநிலுவையின் திரண்ட நிலுவையில் மிகையாகப் பிரதிபலிக்கப்பட்டுள்ள தேறிய அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 220 மில்லியனால் அதிகரித்தன. நாட்டின் மொத்த ஒதுக்குகள் ஆண்டின் இறுதியில் ஐ.அ.டொலர் 2,238 மில்லியனாக விளங்கி இறக்குமதிக்கான நிதியிடல் 3.5 மாதங்களிலிருந்து 4.5

வரைபடம் 9.8
காலாண்டு வெளிநாட்டுச் சொத்துக்கள் (அ)




(அ) 1994ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்த வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறைமையின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது.

மாதங்களுக்கு மேம்பட்டமையை எடுத்துக்காட்டியது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2000ஆம் ஆண்டு இறுதியின் 1.7 மாதங்களிலிருந்து 2001இல் 2.7 மாத இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தன.


## 9.9 வெளிநாட்டுப் படுகடன்

2001 இறுதியில் இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் பொறுப்புக்கள் 2000ஆம் ஆண்டு இறுதியில் இருந்த அளவிலும் பார்க்க 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இவ்வீழ்ச்சிக்கு முக்கியமாக, வானூர்தி நிலையத்தில் எல்.ரீ.ரீ.ஈ.யின் தாக்குதலினால் அழிக்கப்பட்ட இரண்டு வானூர்திகளின் எஞ்சிய மூலதனப் பெறுமதி தீர்ப்பனவு செய்யப்பட்டமையின் மூலம் தனியார் துறையின் படுகடன் 24 சதவீதத்தினால் குறைவடைந்தமையும் முக்கிய பன்னாட்டு நாணயங்களுக்கிடையேயான மொத்த வீத மாற்றங்கள் குறிப்பாக ஐ.அ.டொலருக் கெதிராக யப்பானிய யென் 12.6 சதவீதத்தினால் தேய்வடைந்தமையும் காரணங்களாக அமைந்தன. வெளிநாட்டு மொத்தப்படுகடன் இருப்பில் ஏறத்தாழ 30 சதவீதம் யென்னில் குறித்துரைக்கப் பட்டமையினால் யென்னில் ஏற்பட்ட தேய்வு மட்டும் வெளிநாட்டுப் படுகடனாக ஐ.அ.டொலர் 100 மில்லியன் கொண்ட குறைப்பினைக் தோற்றுவித்தது.

நடுத்தர நீண்டகால படுகடன் 81 சதவீதமான சலுகைரீதியான படுகடனையும் 19 சதவீதமான வர்த்தக கொடுகடன் உள்ளிட்ட சலுகை ரீதியல்லாக் கடன்களையும் உள்ளடக்கியிருந்தது. மொத்த நடுத்தர நீண்டகாலப் படுகடன் இருப்பில் 85 சதவீதத்திற்கு வகைகூறும் மத்திய அரசின் படுகடன் 2000ஆம் ஆண்டினை விட 3 சதவீதத்தினால் குறைவடைந்தது. இது மத்திய அரசின் சலுகைரீதியான படுகடன்கள் 3 சதவீதத்தினால் குறைக்கப்பட்டமையினதும் பாதுகாப்பு தொடர்பான வர்த்தகக் கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக வர்த்தப்படுகடன் 10 சதவீதத்தினால் அதிகரித்தமையினதும் வெளிப்பாடாகும். அதேவேளை, அரச கூட்டுத்தாபனங்களினதும் தனியார்துறையினதும் அரசு உத்தரவாதமளிக்கப்பட்ட படுகடன் 28 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு 2001 யூலையில் அழிக்கப்பட்ட இரண்டு வானூர்திகளின் எஞ்சிய மூலதனப் பெறுமதிகளின் பேரில் சிறீலங்கன் எயார்லைன்சினால் செய்யப்பட்ட (ஐ.அ.டொலர் 148 மில்லியன்) தொழில்நுட்ப தீர்ப்பனவே காரணமாகும். அரசினால் உத்தரவாதப்படுத்தப்படாத அரச கூட்டுத்தாபனங்களினதும் தனியார்துறையினதும் வெளிநாட்டுப் படுகடன் 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, ப.நா.நிதியத்திற்கான பொறுப்புக்கள் ஐ.அ.டொலர் 48 மில்லியனால் அதிகரித்து, ஏப்பிறலில் துணைநில் ஒழுங்குகளின்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சி.எ.உ. 103 மில்லியன் (ஐ.அ.டொலர் 131 மில்லியன்) அமைப்பு சீராக்க வசதி மற்றும் அதிகரிக்கப்பட்ட அமைப்புச் சீராக்க வசதி என்பனவற்றின் கீழான கடன்பாடுகளின் பேரிலான மீள் கொடுப்பனவுகளையும் பிரதிபலித்தன.

நாட்டின் குறுங்கால படுகடன் இருப்பு 2001 இறுதியில் ஐ.அ.டொலர் 557 மில்லியனாக விளங்கி 3 சதவீதம் குறைவானதாகக் காணப்பட்டது. இதற்கு, இவ்வாண்டில் இறக்குமதி கடுமையாக வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக தனியார்துறையினால் பயன்படுத்தப்பட்ட வர்த்தகக் கொடுகடன் வீழ்ச்சியடைந்தமை காரணமாகும். மொத்தப்படுகடன் இருப்பில் குறுங்காலப் படுகடனின் பங்கு ஏறத்தாழ 6 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. அலுவல்சார் ஒதுக்கின் சதவீதமாக குறுங்காலப் படுகடன் 54.8 சதவீதத்திலிருந்து ஆண்டின் இறுதியில் 41.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து பாதிக்கப்படக் கூடிய தன்மையின் குறிகாட்டியாகவுள்ள

வரைபடம் 9.9
வெளிநாட்டுப் படுகடன் (அ)




(அ) 1994ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்த வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறைமையின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது.

### அட்டவணை 9.8
### இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள்

| உடைமையாளர் | ஐ.அ.டொலர் மில்லியன் (அ) | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 |
| 1. அரசு (ஆ) | 19 | 20 | 20 | 22 | 78 | 1,192 | 1,372 | 1,441 | 1,767 | 7,302 |
| 2. அரச முகவர்கள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| 3. மத்திய வங்கி (இ) | 2,009 | 1,964 | 1,619 | 1,026 | 1,260 | 123,093 | 132,900 | 116,571 | 81,819 | 117,365 |
| 4. மொத்த அலுவல்சார் சொத்துக்கள் | 2,029 | 1,984 | 1,639 | 1,049 | 1,338 | 124,286 | 134,272 | 118,013 | 83,585 | 124,668 |
| 5. வர்த்தக வங்கிகள் (ஈ) | 1,103 | 923 | 942 | 1,083 | 900 | 67,596 | 62,561 | 67,946 | 86,682 | 83,815 |
| 6. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | 3,132 | 2,907 | 2,582 | 2,131 | 2,238 | 191,881 | 196,833 | 185,958 | 170,268 | 208,482 |
| 7. மொத்த அலுவல்சார்சொத்துக்கள்-மாதத்தில் | | | | | | | | | | |
| 7.1 வணிக இறக்குமதிகள் | 4.2 | 4.0 | 3.3 | 1.7 | 2.7 | | | | | |
| 7.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி | 3.7 | 3.6 | 2.9 | 1.5 | 2.3 | | | | | |
| 8. மொத்தச் சொத்துக்கள் -மாதத்தில் | | | | | | | | | | |
| 8.1 வணிக இறக்குமதிகள் | 6.4 | 5.9 | 5.2 | 3.5 | 4.5 | | | | | |
| 8.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி | 5.7 | 5.2 | 4.6 | 3.1 | 3.8 | | | | | |

(அ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநிதித்துவ வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ள ஆண்டு இறுதி வீதங்களில் மாற்றப்பட்டன.

| ஆண்டு | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 |
|---|---|---|---|---|---|
| ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூபா | 54.05 | 56.71 | 61.29 | 67.78 | 72.12 |

(ஆ) திறைசேரி துணைச் செயலாளரின் சிறப்புக் கொடுகடன் நிலுவைகளை உள்ளடக்குவதற்காக 1985இலிருந்தான என் தொகைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(இ) வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான ஒதுக்குத் தேவையாக மத்திய வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ள அவ் வங்கிகளின் வெளிநாட்டு நாணயங்களையும் உள்ளடக்குவதற்காக 1993இலிருந்தான என் தொகைகள் திருத்தப்பட்டுள்ளன.

(ஈ) 1994 இலிருந்து சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களை திரட்டும்போது வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் பகுதியொன்றாகக் கருதப்படுகின்றது. இதன்படி சென்மதி நிலுவை புள்ளி விபரங்களை திரட்டும்போது வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளும் இலங்கையில் வதிவுள்ளவர்களும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும் வேளையில் வெ.நா.வ.தொ பிரிவுகளும் இலங்கையில் வதிவுள்ளோரும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் நீக்கப்படுகின்றன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

முக்கிய வெளிநாட்டுத் துறையில் காணப்பட்ட மேம்பாட்டினைப் பிரதிபலித்தது. மொ.உ.உற்பத்திக்கான மொத்தப்படுகடன் விகிதம் 2000இன் 54.5 சதவீதத்திலிருந்து 2001இல் 54.7 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு ஐ.அ.டொலர் நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திகள் வீழ்ச்சியுற்றமையே காரணமாகும்.

## 9.10 படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

நீண்டகால மற்றும் நடுத்தரகாலப் படுகடன் தீர்ப்பனவுகள் மற்றும் அனைத்து வெளிநாட்டுப் படுகடன்களின் மீதுமான வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றை உள்ளடக்கிய மொத்தப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள் இவ்வாண்டுக் காலத்தில் 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு நடுத்தர நீண்டகாலப் படுகடன் தீர்ப்பனவுகள் 10 சதவீதத்தினாலும் வட்டிக் கொடுப்பனவுகளில் 24 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும்.

கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் பெரும் தொகை (58 சதவீதம்) அரசின் படுகடன் பேரிலானதாக இருந்ததுடன் இதில் பெரும்பங்கு (64 சதவீதம்) சலுகைரீதியான நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் மீது வழங்கப்பட்டவையாகும். அரசின் மொத்த படுகடன் பணிக்கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 449 மில்லியனாக விளங்கி மொத்தப்படுகடன் பணிக் கொடுப்பனவுகளில் 55 சதவீதத்திற்கு வகைகூறின. வட்டிக் கொடுப்பனவுகள் மொத்தப்படுகடன் பணிக்கொடுப்பனவில் 31 சதவீதத்திற்கு மாத்திரம் வகைகூறி, தற்போதுள்ள படுகடன் இருப்பில் முக்கியமான பங்கு உயர் சலுகைரீதியானவையாக உள்ளதைப் பிரதிபலித்தன.

வணிக ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலிருந்தான பெறுகைகளின் சதவீதமொன்றாகப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 14.7 சதவீதத்திலிருந்து இவ்வாண்டில் 13.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. பொருட்கள் மற்றும் பணிகள் வருவாய் மற்றும் தனியார் மாற்றல்கள் என்பனவற்றிலிருந்தான பெறுகைகளின் சதவீதமாகப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 12.2 சதவீதத்திலிருந்து 11.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. படுகடன்களில் பெரும்பான்மையானவை சலுகை ரீதியான நியதிகள் மற்றும் நிபந்தனைகளைக் கொண்டிருப்பதன் காரணமாக தற்பொழுது படுகடன் பணிக்கொடுப்பனவுகள் விமர்சனத்திற்கு உள்ளாகாதபோதும், சலுகையற்ற படுகடன்களின் அதிகரித்துச்செல்லும் போக்குகள் கூடியளவிற்கு முன்மதியுடைய படுகடன் முகாமைத்துவக் கொள்கைகளின் அவசியத்தை தெளிவாகக் காட்டுகின்றன.

## அட்டவணை 9.9
## வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனும் வங்கித் தொழில்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும் (அ)

| விடயம் | ஐ.அ. டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1997 | 1998 | 1999 | 2000 | 2001(ஆ) | 1997 | 1998 | 1999 | 2000 | 2001(ஆ) |
| 1. நடுத்தர நீண்டகாலப் படுகடன் | 7,719 | 8,264 | 8,613 | 8,456 | 8,009 | 473,.043 | 557,530 | 620,274 | 676,045 | 746,122 |
| 1.1 அரசு (இ) | 6,346 | 6,902 | 7,125 | 6,989 | 6,808 | 388,925 | 467,798 | 513,785 | 559,544 | 634,255 |
| 1.2 அரச உத்தரவாதத்துடனான அரச கூட்டுத்தாபனங்களும் தனியார் துறையும் (இ) | 670 | 718 | 944 | 1028 | 744 | 41,061 | 48,673 | 68,105 | 82,302 | 69,310 |
| 1.3 அரச உத்தரவாதமற்ற அரச கூட்டுத்தாபனங்களும் தனியார் துறையும் (இ) | 270 | 277 | 286 | 278 | 248 | 16,521 | 18,789 | 20,618 | 22,257 | 23,094 |
| 1.4 பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள் | 433 | 367 | 258 | 161 | 209 | 26,536 | 22,271 | 17,766 | 11,943 | 19,463 |
| 2. குறுங்காலக் கடன் | 478 | 484 | 475 | 575 | 557 | 29,323 | 32,833 | 34,240 | 46,034 | 51,876 |
| 2.1 அரசு | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2.2 ஏனையவை (இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஏனைய வர்த்தககொடுகடன்களும்(இ) (ஈ) | 478 | 484 | 475 | 575 | 557 | 29,323 | 32,833 | 34,240 | 46,034 | 51,876 |
| 3. வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் (உ) | 1,202 | 958 | 885 | 1,076 | 1,119 | 73,638 | 64,926 | 63,838 | 86,132 | 104,201 |
| 3.1 மத்திய வங்கி | 1 | 0 | 0 | 0 | 2 | 65 | 24 | 7 | 33 | 172 |
| 3.2 வர்த்தக வங்கிகள் | 1,094 | 865 | 765 | 938 | 1,009 | 67,030 | 58,656 | 55,142 | 75,101 | 94,030 |
| 3.3 ஆ.தீ.ஒ. பொறுப்புக்கள் | 107 | 92 | 121 | 137 | 107 | 6,543 | 6,247 | 8,689 | 10,998 | 9,999 |
| 4. மொத்த வெளிநாட்டுப்படுகடன்(1+2) | 8,197 | 8,749 | 9,088 | 9,031 | 8,566 | 502,366 | 590,363 | 654,514 | 722,079 | 797,998 |
| 5. மொத்த வெளிநாட்டுப்படுகடனும் பொறுப்புக்களும் (1+2+3) | 9,399 | 9,707 | 9,973 | 10,106 | 9,684 | 576,004 | 655,289 | 718,352 | 808,211 | 902,288 |
| ஒப்பந்தக் குறிப்பு விடயங்கள் | | | | | | | | | | |
| நடுத்தர நீண்டகாலப்படுகடன் | | | | | | | | | | |
| (1) செயற்றிட்டக் கடன்கள் | 4,530 | 5,150 | 5,517 | 5,346 | 5,385 | 277,637 | 349,043 | 397,882 | 427,965 | 481,186 |
| (2) செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 1,612 | 1,656 | 1,612 | 1,426 | 1,144 | 98,788 | 112,237 | 116,247 | 114,174 | 102,214 |
| (3) நிரம்பலர் கொடுகடன் | 343 | 251 | 182 | 338 | 316 | 21,015 | 17,020 | 13,146 | 27,074 | 10,873 |
| (4) ப.நா.நி. எடுப்பனவுகள் | 433 | 367 | 258 | 161 | 209 | 26,536 | 22,271 | 17,766 | 11,943 | 19,463 |
| (5) ஏனைய கடன்கள் (ஊ) | 801 | 840 | 1043 | 1185 | 956 | 49,067 | 56,960 | 75,233 | 94,890 | 113,849 |
| குறுகியகாலப் படுகடனும் வங்கித் துறைப் பொறுப்புக்களும் | 1,680 | 1,442 | 1,360 | 1,651 | 1,675 | 102,961 | 97,759 | 98,078 | 132,166 | 156,077 |
| மொ.உ. உ. வின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப்படுகடன் | 54.3 | 55.5 | 57.8 | 54.5 | 54.7 | 56.4 | 58.0 | 59.2 | 57.5 | 57.0 |
| மொத்த. உ .உ. இன் சதவீதமாக மொத்த வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 8.0 | 6.1 | 5.6 | 6.5 | 7.1 | 8.3 | 6.4 | 5.8 | 6.9 | 7.4 |
| மொத்த. உ .உ. இன் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப்படுகடனும் பொறுப்புக்களும் | 62.3 | 61.6 | 63.5 | 61.0 | 61.8 | 64.7 | 64.4 | 65.0 | 64.4 | 64.4 |
| மொ.உ.உ.வின் சதவீதமாக குறுங்காலப் படுகடன | 3.2 | 3.1 | 3.0 | 3.5 | 3.6 | 3.3 | 3.2 | 3.1 | 3.7 | 3.7 |
| மொ.உ.உ.வின் சதவீதமாக குறுங்காலப் படுகடனும் வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்களும் | 11.1 | 9.2 | 8.7 | 10.0 | 10.7 | 11.6 | 9.6 | 8.9 | 10.5 | 11.1 |
| மொத்தப்படுகடனின் சதவீதமாக குறுங்காலப்படுகடன் | 5.1 | 5.0 | 4.8 | 5.7 | 5.7 | 5.1 | 5.0 | 4.8 | 5.7 | 5.7 |
| மொத்தப்படுகடனின் சதவீதமாக குறுங்காலப் பொறுப்புக்கள் | 12.8 | 9.9 | 8.9 | 10.6 | 11.5 | 12.8 | 9.9 | 8.9 | 10.7 | 11.5 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி,வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்.

(அ) 1994இலிருந்து, சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களை திரட்டும்போது வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித்தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்படுகின்றது. சென்மதி நிலுவைப் புள்ளி விபரங்களைத் திரட்டும்போது வெ.நா.வ.பிரிவுகளும் இலங்கையில் வதிவற்றோரும சமபந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்கில் சேர்க்கப்படும் வேளையில் வெ.நா.வ.தொ.பிரிவுகளும் இலங்கையில் வதிவுள்ளோரும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கள்களில் தவிர்க்கப்படுகின்றன.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) மேலதிக தகவல்களை உள்ளடக்குவதற்காக 1994இன் பின்னருள்ள தரவுத் தொடர்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(ஈ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்டகொடுகடன்களையும் ஏனைய வர்த்தகக் கொடுகடன்களையும் உள்ளடக்குகின்றது.

(உ) வெ.நா.வ.தொ. பிரிவுகள் உள்ளிட்ட வர்த்தக வங்கிகளின் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் வரவுகளும் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்.

(ஊ) அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறை நிறுவனங்களின் நீண்ட காலக் கடன்களையும் உள்ளடக்கும்.

அட்டவணை 9.10
வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (அ)

| விடயம் | ஐ.அ. டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1997 | 1998 | 1999 | 2000 | 2001(ஆ) | 1997 | 1998 | 1999 | 2000 | 2001(ஆ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 733 | 806 | 879 | 953 | 811 | 42,645 | 51,867 | 61,625 | 74,554 | 89,267 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் | 430 | 517 | 583 | 621 | 558 | 24,764 | 33,170 | 40,775 | 49,410 | 46,665 |
| (i) ப.நா. நிதியததிற்கு | 66 | 83 | 100 | 97 | 78 | 3,290 | 5,100 | 6,813 | 9,700 | 3,770 |
| (ii) ஏனையவற்றிற்கு (இ) | 364 | 435 | 484 | 524 | 480 | 21,475 | 28,069 | 33,962 | 39,711 | 42,894 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் | 303 | 289 | 296 | 332 | 253 | 17,881 | 18,697 | 20,850 | 25,144 | 22,603 |
| (i) ப.நா. நிதியத்திற்கு | 6 | 6.7 | 5.5 | 5 | 4 | 361 | 443 | 376 | 410 | 348 |
| (ii) ஏனையவற்றிற்கு (இ) | 297 | 282 | 291 | 326 | 2419 | 17,520 | 18,254 | 20,474 | 24,734 | 22,255 |
| 2. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்கள் | 5,514 | 5,712 | 5,578 | 6,476 | 6,084 | 325,885 | 369,484 | 393,303 | 492,301 | 543,442 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகள் தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகள் | 6,670 | 6,925 | 6,801 | 7,787 | 7,302 | 394,122 | 447,951 | 479,469 | 591,567 | 652,198 |
| 4. படுகடன் பணி விகிதங்கள் (ஈ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 13.3 | 14.1 | 15.8 | 14.7 | 13.3 | 13.1 | 14.0 | 15.7 | 15.1 | 12.7 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் நீங்கலாக | 12.0 | 12.6 | 13.9 | 13.1 | 2.0 | 12.0 | 12.5 | 13.8 | 13.1 | 12.0 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 11.0 | 11.6 | 12.9 | 12.2 | 11.1 | 10.8 | 11.6 | 12.9 | 12.6 | 10.6 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல வாங்கல் நீங்கலாக | 9.9 | 10.4 | 11.4 | 10.9 | 10.0 | 9.9 | 10.3 | 11.4 | 10.9 | 10.0 |
| 5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவு | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவு (உ) | 393.4 | 419.5 | 449.0 | 437.0 | 448.6 | 24,060 | 27,126 | 31,613 | 33,100 | 40,121 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 53.7 | 52.0 | 51.1 | 45.7 | 55.3 | 56.4 | 52.3 | 51.3 | 44.4 | 57.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 1994இலிருந்து சென்மதி நிலுவைப் புள்ளிவிபரங்களை திரட்டும்போது வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித்தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்படுகின்றது. சென்மதி நிலுவைப் புள்ளி விபரங்களைத் திரட்டும்போது வெ.நா.வ.பிரிவுகளும் இலங்கையில் வதிவற்றோரும் சமபந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்கில் சேர்க்கப்படும் வேளையில் வெ.நா.வ.தொ.பிரிவுகளும் இலங்கையில் வதிவுள்ளோரும் சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் தவிர்க்கப்படுகின்றன.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) மேலதிக தகவல்களை உள்ளடக்குவதற்காக 1994 இன் பின்னருள்ள தரவுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

(ஈ) ரூபாய் பெறுமதியிலும் ஐ.அ.டொலர் பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்.

(உ) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்த்து.

## 9.11 வெளிநாட்டு வர்த்தக சூழலும் கொள்கையும்

### இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள்

தீர்வையில் செய்யப்பட்ட சில மாற்றங்கள் தாராளமயமாக்கல் செயற்பாட்டினை தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்றவேளையில், சில மிகக் கட்டுப்பாடானவைகளாக மாறின. 2001இல் ஏற்றுமதித் துறையியில் போட்டித்தன்மையை உயர்த்துவதற்கான புறத்தூண்டுதலை உருவாக்குவதன் மூலமாக ஏற்றுமதியினால் வழிநடாத்தப்படும் பொருளாதார வளர்ச்சிக்கு வசதியளிக்கும் விதத்தில் வர்த்தக மற்றும் தீர்வைக் கொள்கை தொடர்ந்தும் பின்பற்றப்பட்டது. தீர்வைகள் 2000ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இரட்டைப் பிரிவு தீர்வை அமைப்பின் கட்டமைப்பிற்குள் குறைக்கப்பட்டது. எனினும் தற்போதுள்ள இலகுபடுத்தப்பட்ட, தாராள மற்றும் குறைந்த பாதுகாப்பினைக் கொண்ட தீர்வைக் கொள்கை அமைப்பானது 2001இல் உள்நாட்டு வேளாண்மை உற்பத்திகளையும் ஒருசில கைத்தொழில்களையும் பாதுகாப்பதற்காக அவ்வப்போது எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்களினால் இடையூறுக்குள்ளானது.

புதிய மற்றும் பயன்படுத்தப்பட்ட மற்றும் சிகை அலங்கார நிலையக் கதிரைகள் போன்ற

ஒரு சில உற்பத்திகள் மீதான உரிமத் தேவைப்பாடுகள் அகற்றப்பட்டமையின் மூலம் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட வேளையில், உந்து ஊர்திகளின் உடற்கோப்பு மற்றும் உதிரிப்பாகங்கள் போன்ற பல உற்பத்திகள் 2001 மார்சு 9ஆம் நாளன்று உரிமத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. உள்ளூர் சிகரட் கைத்தொழில் கள்ளச் சிகரட்டுக்களிலிருந்து பாதுகாப்பது கள்ளச் சிகரட் உற்பத்தியாளர்களைக் கண்டுபிடிப்பது மற்றும் அவர்களது கைத்தொழில் சட்டபூர்வமாக்குவது என்னும் நோக்கங்களுக்காக 2001 செத்தெம்பர் 28ஆம் நாளன்று சிகரட் தாள்களின் இறக்குமதியானது இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களின் கீழ் கொண்டு வரப்பட்டது.

கோதுடன் கூடிய முந்திரிப்பருப்பும் 2001 திசெம்பர் 12ஆம் நாளன்று இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இத் திருத்தங்களுடன் 2001 இறுதியில் இணங்குவிக்கப்பட்ட முறைக் குறியீட்டின் 6 இலக்க மட்டத்தில் மொத்தமாக 300 விடயங்கள் இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் கீழ் எஞ்சியிருந்தன.

நான்கு வகை ஏற்றுமதிகள் மட்டும் அதாவது முருகைக் கற்பாறையும் ஓடுகளும், மரம் மற்றும் மரத்திலான பொருட்கள் (கருங்காலி) யானைத்தந்தம் மற்றும் அதனாலான உற்பத்திகள் பழைய பயணிகள் உந்து ஊர்திகள் (1945 இற்கு முன்னர் இலங்கையில் முதலில் பதிவு செய்யப்பட்ட) என்பன தொடர்ந்தும் உரிமத்தின்கீழ் இருந்தன. பாலைக் குளிரவைக்கும் தாங்கி மற்றும் குளிரூட்டல் அறை என்பனவற்றை உள்ளூரில் தயாரிப்பிற்காக இறக்குமதி செய்யப்பட்ட மேலதிக கூறுகள் விலக்கப்பட்டியலுடன் சேர்க்கப்பட்டதுடன் பட்டியலிலுள்ள விடயங்களின் எண்ணிக்கை 2001 மாச்சு 9ஆம் நாளிலிருந்து 41 இற்கு அதிகரித்தது.

## வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான தீர்வைகளும் வரிகளும்

2000ஆம் ஆண்டு பெப்புருவரி தொடக்கம் நடைமுறையிலிருக்கும் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட 10 மற்றும் 25 சதவீதங்களைக் கொண்ட இரு பிரிவு தீர்வை அமைப்பு 2001இலும் தொடர்ந்தது. எனினும், தீர்வை அமைப்பின் இலகுதன்மை மேலதிக கட்டணம் 2001இல் அறிமுகப்படுத்தப்பட்ட மேலதிகக் கட்டணம் மற்றும் குறிப்பிட்ட உற்பத்தியின் மீதான தீர்வைத் தளர்த்தல்கள் என்பனவற்றின் மூலம் இடையூறுகளுக்குற்பட்டது. 2001 பெப்புருவரி 21ஆம் நாளன்று சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 10 (அ) இன் கீழ் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட 40 சதவீதமான மேலதிககட்டணம் 2001 திசெம்பர் 31 வரை நடைமுறையிலிருந்தது. பூஜ்ய தீர்வையினைக் கொண்ட இறக்குமதிகள் (மருந்தாக்கற் பொருட்கள், வளமாக்கி, உழுபொறிகள், சரக்கு வண்டிகள் போன்றவை) இயல்பாகவே இம் மேலதிக கட்டணத்திலிருந்து விலக்குப் பெறுகின்றவேளையில் உருளைக்கிழங்கு, சமயல் எண்ணெய், சீனி குழந்தைகளுக்கான பாலுணவு மற்றும் பால் மற்றும் கிறீம் உற்பத்திகளில் தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள் தேங்காய் எண்ணெய் மற்றும் உலர்த்திய தேங்காய் போன்ற இன்றியமையாத உற்பத்திகள் பல வாழ்க்கைச் செலவினைக் கருத்திற்கொண்டு

**அட்டவணை 9.11**

இறக்குமதித் தீர்வை சேகரிப்பு வீதம் (அ)

| விடயம் | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 (ஆ)(இ) |
|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | 11.8 | 12.7 | 12.8 | 11.5 | 13.3 |
| **உணவும் குடிபானமும்** | 11.5 | 12.6 | 13.6 | 11.7 | 15.3 |
| அரிசி | 6.3 | 2.4 | 16.4 | 30.0 | 21.2 |
| மா | ... | ... | - | 6.2 | 13.3 |
| சீனி | 17.8 | 20.8 | 21.3 | 15.9 | 16.2 |
| கோதுமையும் இறுங்கும் | ... | ... | 0.3 | ... | 0.0 |
| பாலும் பால் உற்பத்திகளும் | 11.8 | 11.5 | 11.6 | 10.6 | 15.3 |
| கருவாடு | 1.6 | 1.1 | 1.2 | 1.3 | 2.0 |
| ஏனைய மீன் உற்பத்திகள் | 4.9 | 4.8 | 4.8 | 5.1 | 6.3 |
| ஏனைய உணவு விடயங்கள் | 17.9 | 20.5 | 19.9 | 18.7 | 25.4 |
| **உணவல்லாத நுகர்வுப் பொருட்கள்** | 12.2 | 12.8 | 12.0 | 11.3 | 10.9 |
| உந்து ஊர்திகளும் ஈருருளிகளும் | 24.5 | 23.6 | 20.1 | 16.6 | 21.1 |
| வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் | 11.5 | 12.4 | 11.9 | 6.8 | 8.3 |
| இறப்பர் டயர்களும் ரியூப்புக்களும் | 33.5 | 32.0 | 28.4 | 23.5 | 29.6 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 1.3 | 0.9 | 0.6 | 0.5 | 0.6 |
| ஏனைய உணவல்லாத விடயங்கள் | 9.4 | 10.1 | 9.1 | 11.1 | 9.7 |
| **இடைநிலைப் பொருட்கள்** | 5.9 | 4.7 | 4.1 | 2.9 | 1.7 |
| வளமாக்கி | 0.1 | - | - | - | |
| மசகெண்ணெய் | 21.7 | 25.8 | 15.8 | 7.4 | - |
| ஏனைய பெற்றோலியப் பொருட்கள் | 18.7 | 16.7 | 16.1 | 5.3 | 0.9 |
| இரசாயன மூலங்களும் கலவைகளும் | 7.6 | 5.8 | 3.6 | 3.2 | 3.3 |
| சாயமூட்டல் பதனிடல் நிறமூட்டல் | 7.1 | 7.5 | 5.3 | 5.2 | 6.3 |
| தாள் தாள் அட்டைகள் | 6.0 | 6.0 | 5.7 | 5.0 | 6.7 |
| புடவையும் ஆடைகளும் | 0.8 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 5.2 | 4.8 | 4.1 | 3.5 | 4.2 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | 7.0 | 6.0 | 4.4 | 4.0 | 5.3 |
| கட்டடப் பொருட்கள் | 9.1 | 9.3 | 7.8 | 7.5 | 9.3 |
| போக்குவரத்துக் கருவிகள் | 17.3 | 11.8 | 7.4 | 7.4 | 10.3 |
| பொறியும் கருவியும் | 3.4 | 3.0 | 2.2 | 1.8 | 2.7 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 6.3 | 4.4 | 3.4 | 3.2 | 4.2 |
| **மொத்தம்** | 7.7 | 7.4 | 7.0 | 4.5 | 4.9 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
கூ.மொ.வி.நிலையம்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மத்திய வங்கி

(அ) சீராக்கப்பட்ட மொத்த இறக்குமதிப் பெறுமதிகளின் சதவீதமாக உண்மையான தீர்வைச் சேகரிப்பு (கு.எ.பெ.)

(ஆ) 2001 பெப்புருவரி 21ஆம் நாளன்று தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகள்மீது விதிக்கப்பட்ட 40 சதவீத மேலதிக கட்டணத்தின் தாக்கத்தினையும் உள்ளடக்கும்.

(இ) தற்காலிகமானவை.

மேலதிகக் கட்டணத்திலிருந்தும் விலக்கப்பட்டிருந்தன. புடவைகள் மற்றும் ஆடை வகைகள் அனைத்தும் (அத்தியாயம் 50-63) இம் மேலதிக கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தன.

2000 யூலை 17ஆம் நாளன்று விதிக்கப்பட்ட சமயல் எண்ணெய் மீதான 25 சதவீதமான மேலதிகக் கட்டணம் 2001 சனவரி 11ஆம் நாள் வரை தொடர்ந்தது. இது சனவரி 12ஆம் நாளிலிருந்து 2001 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் கி.கிறாமொன்றிற்கு ரூ.20 கொண்ட குறித்துரைக்கப்பட்ட மேலதிக கட்டணத்திற்கு மாற்றப்பட்டது. உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான 35 சதவீதம் கொண்ட தீர்வை வீதமும் 35 சதவீதம் கொண்ட மேலதிக கட்டணமும் 2000 திசெம்பர் 8ஆம் நாளிலிருந்து கி.கிறாமிற்கு ரூ.20 கொண்ட குறித்துரைக்கப்பட்ட தீர்வை வீதத்தின் மூலம் அகற்றப்பட்டது.

இறக்குமதிகள் மீது வழங்கப்பட்ட தீர்வைத் தளர்த்தல்கள் இன்றியமையாத மிகச்சில விடயங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 2001 யூன் 30 வரை தளர்த்தப்பட்டிருந்த மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் (பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல், உலைஎண்ணெய் மற்றும் வான் எரிபொருள்) என்பனவற்றின் இறக்குமதி மீது செலுத்தத்தக்க தீர்வை பெற்றோலிய உற்பத்திகளின் உயர்ந்த செலவினைக் கருத்திற்கொண்டு 2001 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டது. 1999 பெப்புருவரி 22ஆம் நாளிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான ஓரளவு தீர்வைத் தளர்த்தல்கள், அரசிறை இழப்புக்களைக் கட்டுப்படுத்தும் வகையில் 2001 மாச்சு 8ஆம் நாளிலிருந்து புறக்கீடு செய்யப்பட்டன. மோசமான உள்நாட்டு அறுவடையின் காரணமாக 2001 நவெம்பர் 22ஆம் நாள் தொடக்கம் 2001 திசெம்பர் 10ஆம் நாள் வரையான காலப்பகுதியில் அரிசி இறக்குமதி மீதான 35 சதவீத தீர்வை முழுமையாகத் தளர்த்தப்பட்டது. இவ்வசதி 50 சதவீதத்தினால் 17.5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதுடன் 2001 திசெம்பர் 31ஆம் நாள்வரை நீடிக்கப்பட்டது. அரிசி அறுவடை உள்நாட்டுக் கேள்வியை ஈடுசெய்ய போதுமானதல்ல என்பதை உணர்ந்தவேளையில் அரிசியை இறக்குமதி செய்வதற்கு சரியான நேரத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்குமாயின் தீர்வைத் தளர்த்தலொன்றிற்கான தேவை ஏற்பட்டிருக்காது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு அனுமதிப்பங்கு கட்டுப்பாடுகள் இல்லாமல் புடவைகளையும், ஆடைகளையும் ஏற்றுமதி செய்வதற்கு ஐ.ஒன்றிய நாடுகளினால் வழங்கப்பட்ட வசதிகளுக்குப் பதிலாக கம்பளங்கள் மற்றும் தரைவிரிப்பிற்கான புடவைகள் மீதான இறக்குமதித்தீர்வை 2001 சனவரி 11ஆம் நாள் தொடக்கம் 25 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. சில வீதங்கள் இணங்குவிக்கப்பட்ட முறைக் குறியீடுகளின் தேசிய துணை தலைப்புக்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அல்லது அகற்றுவதன் மூலம் திருத்தப்பட்டன. இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்ட சலுகைகள் உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளைக் கௌரவிக்கும் விதத்தில் ஒருதலைப் பட்சமாக விரிவாக்கப்பட்டன.

2001ஆம் ஆண்டில் பொருளாதாரத்தை மிக மோசமாகப் பாதித்த பல்வேறு காரணிகளை கருத்திற் கொண்டு 2001 ஒத்தோபர் 5ஆம் நாளன்று அரசாங்கம் நிவாரணத் தொகுதியொன்றினை அறிவித்தது. இதன் விளைவாக பைகளிலடைக்கப்பட்ட சீமெந்தினதும் தொகை வடிவான சீமெந்தினதும் மீதான 25 சதவீத இறக்குமதித் தீர்வையை 2001 ஒத்தோபர் 12ஆம் நாளிலிருந்து முறையே 15 சதவீதத்திற்கும், 10 சதவீதத்திற்கும் குறைத்தது. மூலப்பொருட்களின் செலவினைக் குறைப்பதற்காக பொலித்தீன், இரும்பு, காரீயம், நல்நார்த்தகடு, புடவைத் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் நிறமூட்டி, அலங்காரத் தாள்கள் மற்றும் தாள் அட்டைகள் ஈஸ்ற், இரசாயன உற்பத்திகள் போன்ற இன்றியமையாத மூலப்பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வை 2001 ஒத்தோபர் 20ஆம் நீக்கப்பட்டது. திருத்தத்திற்கு முன்னர் இப் பொருள்களில் பெரும்பாலானவை 5 சதவீதமான தீர்வை வீதத்திற்கு உட்பட்டிருந்தன. இது 2000ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு கைத்தொழில் மூலப்பொருட்கள் மற்றும் பொறிகள் மீது பிரயோகிக்கத்தக்க 5 சதவீத வீதத்தினை ஒழித்து விடுவதன் மூலம் தீர்வை அமைப்பினை இரட்டைப் பிரிவு அமைப்பிற்குள் ஒருங்கிணைக்கின்ற குறிக்கோளுடன் ஒத்துச் செல்லும்.

இத் தீர்வைக் குறைப்புக்கள் காணப்பட்டபோதும் இறக்குமதித் தீர்வையின் நிறைவேற்றப்பட்ட சராசரி அதாவது மொத்த சீராக்கப்பட்ட இறக்குமதிகளுக்கு இறக்குமதித் தீர்வைச் சேகரிப்புக்களின் விகிதம் 2000ஆம்

ஆண்டின் 4.5 சதவீதத்திலிருந்து 2001இல் 4.9 சதவீதத்திற்கு அதிகரித்து, தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகள் மீதான 4 சதவீத மேலதிகக் கட்டணத்தின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது. 40 சதவீத மேலதிக கட்டணத்தின் தாக்கமில்லாமல் இறக்குமதித் திர்வைகளின் நிறையேற்றப்பட்ட சராசரி 3.9 சதவீதமாக இருந்தது. மொத்த இறக்குமதிகளில் தீர்வை விதிக்கத்தக்க இறக்குமதிகளின் பங்கு 2000இன் 29 சதவீதத்திலிருந்து 2001இல் 25 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, மேலதிகக் கட்டணத்தின் பின்னர் உயர்ந்த தீர்வையைச் செலுத்த வேண்டியிருந்தமையின் காரணமாக தீர்வை செலுத்த வேண்டிய விடயங்களின் இறக்குமி வீழ்ச்சியடைந்தமையைப் பிரதிபலித்தது.

நுகர்வுப் பொருள் வகைக்குள் தீர்வை செலுத்த வேண்டியிருந்த இறக்குமதிகள் 2000ஆம் ஆண்டின் 56 சதவீதத்திலிருந்து 2001இல் 56.5 சதவீதத்திற்கு சிறிதளவு அதிகரித்தது. உணவும், குடிபானமும், உணவல்லா நுகர்வுப் பொருள்கள் வகை ஆகிய இரண்டின் மீதுமான சராசரி இறக்குமதித் தீர்வை 2001இல் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்களுக்கு தெரிந்தெடுக்கப்பட்ட நுகர்வுப் பொருட்களின் மீதான மேலதிகக் கட்டண விதிப்பும் உந்து ஊர்திகளின் மீது வழங்கப்பட்ட தீர்வைச் சலுகைகள் அகற்றப்பட்டமையின் தாக்கமுமே காரணங்களாகும். 40 சதவீத மேலதிக கட்டணத்திற்காக சீராக்கம் செய்யப்பட்ட வேளையில் நுகர்வுப்பொருட்கள் மீதான சராசரி தீர்வை வீதம் ஏறத்தாழ 11 சதவீதமாக இருந்தது.

இடைநிலைப் பொருள் வகையில், தீர்வைக்குரிய இறக்குமதிகள் 19 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில், முதலீட்டுப் பொருள் வகையில் தீர்வைக்குரிய இறக்குமதிகள் முன்னைய ஆண்டினைப் போன்றே ஏறத்தாழ 39 சதவீதமாக இருந்தன. 40 சதவீத மேலதிக கட்டணத்தின் தாக்கம் காணப்பட்ட போதும் இடைநிலைப் பொருட்களின் மீதான சராசரி தீர்வை வீதம் 1.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பெற்றோலிய உற்பத்திகளின் மீது வழங்கப்பட்ட தீர்வைத் தளர்த்தல்களினதும் 2001 ஒத்தோபரிலிருந்து சில மூலப்பொருட்களின் மீது வழங்கப்பட்ட தீர்வைச் சலுகைகளினதும் தாக்கமே காரணமாகும். இறக்குமதி மீதான மேலதிகக் கட்டணம் காரணமாக முதலீட்டுப் பொருட்கள் மீதான சராசரி தீர்வை வீதம் அதிகரித்தது. எனினும், மேலதிகக் கட்டணத்திற்காக சீராக்கம் செய்கையில், சராசரி தீர்வை வீதம் 2001இல் 4.0 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டது.

## புடவைகள் மற்றும் ஆடைகள் அனுமதிப்பங்கு ஒதுக்கீடு

அனுமதிப்பங்கு முறையின் கீழான புடவைகள் மற்றும் ஆடைகள் அனுமதிப் பங்கின் ஒதுக்கு 1978இல் புடவைக் கைத்தொழில் அமைச்சில் தொடங்கப்பட்டது. 1992 யூலை 1ஆம் நாளிலிருந்து அனுமதிப்பங்கு முறையின் நிருவாகம் சூழல் அபிவிருத்தி, கைத்தொழில் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழுள்ள புடவை அனுமதிப் பங்குச் சபையின் பொறுப்பாக மாறியது. எனினும் 1994இன் புடவைகள் மற்றும் ஆடைகள் தொடர்பான உருகுவே சுற்றுவட்ட உடன்படிக்கை (பல்நூலிழை உடன்படிக்கை) பத்தாண்டு கால மாறிச்செல்லும் காலப்பகுதியில் புடவை அனுமதிப்பங்கு கட்டம் கட்டமாக ஒழிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச் செயல்முறை 1995 சனவரியில் தொடங்கப்பட்டு நான்கு கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அனுமதிப் பங்கு வகைகளை ஒருங்கிணைக்கின்ற முதலிரண்டு கட்டங்களும் 1996லும், 1998இலும் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஒருங்கிணைப்பின் மூன்றாவது சட்டம் 2002 சனவரி 1ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது.

2001 சனவரி 1ஆம் நாள் தொடக்கம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகள் மீதான அனைத்து அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகளையும் ஐரோப்பிய ஒன்றியம் அகற்றியது. எனினும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதியாளர்கள், ஏற்றுமதிகளைக் கண்காணிக்கும் வேளையில் ஏற்றுமதி விடயங்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டன என்பதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் முதலீட்டுச் சபையிடமிருந்து அல்லது கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் புடவைப் பிரிவிலிருந்து ஏற்றுமதி விசாவினைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

ஏற்றுமதி விசாவினையும் மூலச் சான்றிதழையும் மோசடி செய்வதனைக் தடுக்கும் குறிக்கோளுடன் புடவை அனுமதிப்பங்குச்சபை ஐரோப்பிய ஆணைக்குழுவின் இணைப்புடன் 2001 செத்தெம்பர் 1ஆம் நாளன்று மின்னியல் தரவு செலாவணி முறையொன்றை அறிமுகப்படுத்தியது. ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதி விசா வழங்கப்படும் நேரத்திலேயே புடவை அனுமதிப்பங்குச்சபை, மின்னியல் தரவு பரிமாற்ற முறையினூடாக பிரசெல்சிலுள்ள ஐரோப்பிய

ஆணைக்குழுவிற்கு தொடர்பான அனைத்து தகவல்களையும் அனுப்பி வைக்கிறது. இம்முறையானது ஐரோப்பிய ஆணைக்குழு மூலநோக்கு, உற்பத்திவகை மற்றும் அதனுடன் தொடர்பாக தகவல்களை உடனடியாகக் கண்காணிக்கக்கூடியதாக இருப்பதுடன், தவறாக வகைப்படுத்தப்பட்ட அல்லது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்காக இலங்கையில் தயாரிக்கப்படாத உற்பத்திகளின் இறக்குமதிகளையும் தடுக்கிறது. அனுமதிப்பங்குக் கட்டுப்பாடுகள் இல்லாமல் இலங்கை ஐரோப்பிய ஒன்றியச் சந்தையை அடையக் கூடியதாக இருப்பதனால் இத்தகைய நிலைமையில் மோசடிகளுக்கு போதுமான வாய்ப்புகளுண்டு.

2001இல் ஏறத்தாழ 33 அனுமதிப்பங்கு வகைகள் ஐக்கிய அமெரிக்காவின் ஏற்றுமதிக்கும் 15 வகைகள் கனடாவிற்கான ஏற்றுமதிக்கும் கட்டுப்பாடின்றியிருந்தன. ஐக்கிய அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் கிடைக்கத் தக்கதாகவுள்ள அடிப்படை அனுமதிப்பங்கு முறையே 7 சதவீதத்தினாலும், 10 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. இதன்படி, அவ்விரு நாடுகளுக்கும் கிடைக்கத்தக்கதாக இருந்த மொத்த அனுமதிப்பங்கு 2001இல் 68 சதவீதத்தினால் அதிகரித்தது. 2001இல் மொத்த அனுமதிப்பங்கு ஒதுக்கு 8 சதவீத வீழ்ச்சியைக் காட்டியமைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுமதிப்பங்கு இல்லாமல் இருந்தமை காரணமாக இருந்தது. பல்நூலிழை உடன்படிக்கையின் கீழ் அனுமதிப்பங்கினைப் படிப்படியாக ஒழிக்கும் கருத்தில் நோக்குகையில் இது சாதகமானதொரு அபிவிருத்தியாகக் கருதப்படுகிறது. இது 2005இல் கட்டம் கட்டமாக செய்முறையின் இறுதிக்கட்டத்தில் பெருமளவு எண்ணிக்கையான அனுமதிப்பங்குகளை அகற்றுவதனால் உருவாகக்கூடிய இடர் நேர்வுகளைத் தவிர்க்கும்.

நலிவுள்ள ஏற்றுமதிக் கேள்வியின் விளைவாக 2001இல் மொத்த அனுமதிப்பங்கு பயன்பாட்டு வீதம் 2000ஆம் ஆண்டின் 79 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 72 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அனுமதிப்பங்கின் பயன்பாடு வேறுபட்ட உற்பத்தி வகைகளுக்கும் நாடுகளுக்குமேற்ப பரந்தளவில் வேறுபடுகிறது. ஐக்கிய அமெரிக்காவின் அனுமதிப்பங்குப் பயன்பாடு 2000ஆம் ஆண்டின் 84 சதவீதத்திலிருந்து 2001இல் 73 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து ஐக்கிய அமெரிக்காவின் மெதுவான பொருளாதார வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட குறைவான கேள்வியைப் பிரதிபலித்தது. குறைப் பயன்பாட்டிற்கு குறிப்பிட்ட பொருட்களுக்கு போதுமான கேள்வி காணப்படாமை ஓரளவிற்கும் ஏனைய அனுமதிப்பங்கு வகைகளின் கீழ் பெருமளவிற்கு பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அல்லது அனுமதிப் பங்கல்லா ஆடைகளைத் தயாரிப்பதற்கு உள்நாட்டுத் தயாரிப்பாளர்கள் முன்னுரிமை வழங்கியமை ஓரளவிற்கும் காரணமாக இருந்தன. இது, அனுமதிப் பங்கல்லா ஆடை வகைகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டமையினைக் காட்டுகின்றது. ஐக்கிய அமெரிக்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பெண்களுக்கான உடைகள், ஆண்களுக்கான மேற்சட்டைகள், பெண்களுக்கான சட்டைகள், பாவாடைகள், நீளக்காற்சட்டைகள், பெண்களுக்கான தளர்ந்த ஆடைகள், இரவு ஆடைகள், உள்ளங்கிகள், குளிராடைகள் மற்றும் ஆண்கள், சிறுவர்களுக்கான மேற்சட்டைகள் போன்ற பிரபல்யம் பெற்றவைகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன.

முன்னைய ஆண்டுகளைப் போன்றே, கனடாவின் ஏற்றுமதி மீதான அனுமதிப்பங்கின் பயன்பாட்டு வீதம் ஐக்கிய அமெரிக்காவிலும் பார்க்க குறைவாக இருந்தது. கனடா அனுமதிப்பங்கின் மொத்த பயன்பாட்டு வீதம் 2000ஆம் ஆண்டின் 43 சதவீதத்திலிருந்து 2001இல் 42 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஆண்கள் மற்றும் பெண்களின் நீளக்காற்சட்டைகள், நீண்ட தளர்ந்த மற்றும் ஆண்களுக்கான குறுங்காற் சட்டைகள், அரைக்காற் சட்டைகள், குளிருக்கான ஆடைகள், பெண்களுக்கான மேற்சட்டைகள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள் என்பன கனடாவிற்கான ஆடைவகைகளுள் காணப்பட்டதுடன் அதன் பயன்பாட்டு வீதங்களும் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாக இருந்தன. புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளின் பேரில் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து கிடைத்த மொத்த ஏற்றுமதி வருவாய்கள் 2001இல் 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. எனினும் அனுமதிப் பங்கு பயன்பாடு குறைந்த வீதத்தில் பயன்படுத்தப்பட்டபோதும் கனடாவிற்கான புடவைகள் மற்றும் ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1 சதவீதத்தினால் அதிகரித்தமையானது அனுமதிப்பங்கற்ற சந்தைகளை நோக்கி நகர்வொன்று காணப்படுவதனை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது. அனுமதிப்பங்கல்லா நாடுகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2001இல் 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

மின்னியல் ஊடகங்களூடாக புடவைகள் மற்றும் ஆடைகள் ஏற்றுமதி தொடர்பான மிக

முக்கியமான புள்ளி விபரங்களை ஐக்கிய அமெரிக்காவின் சுங்கத்திற்கு நேரடியாக அனுப்பி வைப்பதற்காக 1999 திசெம்பரில் தொடங்கப்பட்ட மின்னியல் விசா தகவல்முறை 2001ஆம் ஆண்டிலும் வெற்றிகரமாகத் தொழிற்பட்டது.

## ஏற்றுமதியாளருக்கான ஊக்குவிப்புக்கள்

ஏற்றுமதித் துறையின் போட்டித் தன்மையினையும் இலாபத் தன்மையினையும் உறுதிப்படுத்தும் நோக்குடன், ஏற்றுமதியாளர்களையும் அதேபோன்று கைத்தொழிலதிபர்களையும் இலக்காகக் கொண்டு 2001 வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட பல்வேறு ஊக்குவிப்புக்களையும் அரசாங்கம் நடைமுறைப் படுத்தியது. கைத்தறி, மின்தறி, மற்றும் கைவினைக் கைத்தொழில்களுக்கு கைவினைப் பொருட்களின் ஏற்றுமதிக்காக மூன்றாண்டு வரிவிடுப்பு, மூலதனத் தேவைப்பாடுகளுக்கு உதவுவதற்கான சிறப்புக் கொடுகடன் திட்டம், தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதற்கான நிதியியல் உதவி, சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்தி அபிவிருத்திக்கான ஊக்குவிப்புக்கள் போன்ற தொடர்ச்சியான ஊக்குவிப்புககள் வழங்கப்பட்டன.

தகவல் தொழில் நுட்பத்துடன் தொடர்பான பணிகளின் ஏற்றுமதிக்காக தேசிய பாதுகாப்புத் தீர்வை மற்றும் பொருட்கள் பணிகள் வரிகளிலிருந்தான விலக்கல்கள் போன்ற வரிச்சலுகைகள் அதேபோன்று ஏற்றுமதிகளின் இலாபங்களின்மீது 5ஆண்டு வரி விடுப்பு என்பன 2001ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்டன. ஏற்றுமதிசார்ந்த மென்பொருள் அபிவிருத்தி நிறுவனங்களினால் தற்பொழுது அனுபவிக்கப்பட்டுவரும் 5ஆண்டு வரிவிடுப்பு இம் மென்பொருட்களுடன் தொடர்புபட்ட பணிகளுக்கும் விரிவாக்கப்பட்டது. இலங்கையிலுள்ள எந்த ஒரு துறைமுகத்திலும் துறைமுக கொள்கலன் முனைக்கோடித் தொழிற்பாட்டாளர் உட்பட, துறைமுகத் தொழிற்பாட்டு வியாபாரத்தினை மேற் கொள்ளுவதன் மூலமும் ஏற்றுமதிகளுடன் தொடர்பாக வான்சேவை முகவர்களினால் வழங்கப்பட்ட பணிகள் மூலமும் பொருட்கள் மற்றும் பயணிகளின் பன்னாட்டுப் போக்குவரத்திற்குப் பயன்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்படுகின்ற வானூர்திகள் மற்றும் கப்பல்கள் மூலமும் வான் எரிபொருளின் இறக்குமதி மூலமும் பெறப்படுகின்ற புரள்விற்கு தேசிய பாதுகாப்புத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

இறால் பண்ணை, உள்நாட்டு மீன்பிடி மற்றும் மீன்பிடியுடன் தொடர்பான நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக மீன்பிடி மூலவள அபிவிருத்தி நிதியமொன்றினை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்நிதியம் இறால் ஏற்றுமதிகள் மீதான தீர்வையிலிருந்து உருவாக்கப்பட இருந்தது. இது இக்கைத்தொழில் தொற்று நோய்களிலிருந்து தானாகவே பாதுகாப்பினைத் தேடிக் கொள்ளவும் ஏற்றுமதிக்குத் தொடர்ச்சியான வழங்கலை உறுதிப்படுத்துவதற்கும் உதவும்.

## ஏற்றுமதியாளர்களுக்கான நிறுவன ரீதியான உதவி

தொழில் முயற்சி அபிவிருத்தி, கைத்தொழில் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் போன்ற ஏற்றுமதி அபிவிருத்தி அமைப்புக்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பான அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்கள் என்பன ஆண்டு முழுவதும் ஏற்றுமதியாளர்களுக்கு தொடர்ந்தும் உதவி வழங்கின. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு மரபுரீதியான ஏற்றுமதிகளின் அபிவிருத்திக்கு உதவி வழங்கியதுடன் ஏற்றுமதி அபிவிருத்திச்சபை மரபுவழியல்லா ஏற்றுமதிகளின் அபிவிருத்திக்கும் மேம்பாட்டிற்கும் முக்கிய பங்கினையாற்றியது. இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கொடுகடன் காப்புறுதியினையும் உத்தரவாதப் பணிகளையும் வழங்கியது. மற்றைய தொடர்பான நிறுவனங்களின் குறிப்பாக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சும் இருபுடை பிராந்திய மற்றும் பல்புடை அமைப்புக்களினூடாக கிடைக்கத்தக்க வசதிகள் பற்றி ஏற்றுமதியாளர்களுக்கு அறிவூட்டுவதில் தொடர்ந்தும் ஈடுபட்டதுடன் இலங்கைத் தொழில் முயற்சியாளர்களுக்கும் அவர்களது வெளிநாட்டு இணையாளர்களுக்குமிடையில் தொடர்புகளை ஏற்படுத்துகின்ற கருவிகளாகவும் விளங்கினர். வர்த்தக சம்மேளனம் போன்ற தனியார்துறை நிறுவனங்களும் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதில் முக்கிய பங்கினை ஆற்றின.

இலங்கையின் ஏற்றுமதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஏற்றுமதியாளர்களுக்கான காப்புறுதிக் கொள்கைகளையும் வங்கிகளுக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் உத்தரவாதங் களையும் வழங்குவதனையே இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

அதன் முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தது. 2001இல் நடைமுறையிலிருந்த காப்புறுதிக் கொள்கைகளும் உத்தரவாதங்களும் 2000 திசெம்பர் இறுதியில் நடைமுறையிலிருந்த 296 உடன் ஒப்பிடுகையில் 205ஆகக் காணப்பட்டன. இவை முழுமையான மொத்த ஏற்றுமதிக் கொடுப்பனவுகள், காப்புறுதிக் கொள்கைகள் குறித்துரைக்கப்பட்ட கொள்கைகள், சிறியளவு காப்புறுதிக் கொள்கைகள், களஞ்சியசாலை வர்த்தகத்தினை உள்ளடக்கிய கொள்கைகள், கணனி மென்கலம் மற்றும் ஈராக்கிற்கான ஏற்றுமதிகளுக்கான சிறப்புத் திட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. 2000ஆம் ஆண்டின் 35 காப்புறுதிக் கொள்கைக்கெதிராக 2001இல் ரூ.500 மில்லியன் கொண்ட 49 புதிய காப்புறுதிக் கொள்கைகள் வழங்கப்பட்டன. 2001 இறுதியில் ரூ.2,485 மில்லியன் பெறுமதி கொண்ட 1,672 புதிய உத்தரவாதங்கள் நடைமுறையில் இருந்தன. புதிய மற்றும் சிறிய அளவு ஏற்றுமதியாளர்கள் பன்னாட்டுச் சந்தையில் தன்னம்பிக்கையுடன் போட்டியிடச் செய்வதற்காக ஒருசில காப்புறுதிக் கொள்கைகள் வழங்கப்பட்டன. 2000ஆம் ஆண்டில் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஈராக்கிற்கான தேயிலை ஏற்றுமதியை உள்ளடக்குகின்ற சிறப்புக் காப்புறுதியொன்று 2001இல் ரூ.150 மில்லியன் பெறுமதி கொண்ட நான்கு காப்புறுதிக் கொள்கைகளை வழங்கின.

பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சிகளில் ஏற்றுமதியாளர்கள் பங்கு பற்றுவதற்கு அல்லது ஐரோப்பிய, ஐக்கிய அமெரிக்கா, கனடா, மற்றும் யப்பான் போன்ற மரபுரீதியான சந்தைகளில் சந்தைப் பங்குகளை விரிவாக்குவதற்கு ஏற்றுமதி அபிவிருத்திச்சபை உதவியது. ஏற்றுமதி அபிவிருத்திச்சபை தென்னாபிரிக்கா, போலந்து, சுதந்திர அரசுகளின் பொதுநலவாய நாடுகள், நோர்வே பிராந்தியம், சார்க் பிராந்தியம், ஆசிய நாடுகள் மற்றும் கொரியா என்பனவற்றை அபிவிருத்தி செய்யக்கூடிய புதிய சந்தைகளாக அடையாளங்கண்டுள்ளது. இச் சந்தைகள் தொடர்பான அறிவினைப் பெற்றுக் கொள்ளுவதற்கான உள்ளார்ந்த வளம்மிக்க ஏற்றுமதியாளர்களுக்கு ஆய்வரங்குகள் நடத்தப்பட்டதுடன் வர்த்தக மேம்பாட்டு பேராளர்குழு இந்நாடுகளுக்கு அனுப்பப்பட்டதுடன் வர்த்தக பேராளர் குழுக்கள் சீனாவிலிருந்தும் மலேசியாவிலிருந்தும் இலங்கைக்கு வருகை தந்தன. மாலேயிலுள்ள ஏற்றுமதி அபிவிருத்திச்சபையின் வர்த்தக ஊக்குவிப்பு அலுவலகம், மாலைதீவில் இலங்கை உற்பத்திகளுக்கான கேள்வியை உருவாக்கும் நோக்குடன் முன்னோடிச் செயற்றிட்டமொன்றினைத் தொடங்கியது. சார்க் பிராந்தியத்தில் இலங்கை உற்பத்திகளுக்கான இரண்டாவது பாரிய ஏற்றுமதி நாடாக மாலைதீவு விளங்குகின்றது. சிறிய நடுத்தர அளவு ஏற்றுமதியாளர்கள் வியாபார பங்காளர்களைக் கண்டறிந்து தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும், இணையத்தளத்தினூடாக ஒப்பந்தங்களை இறுதியாக்கி அவர்களின் உற்பத்திகளைப் பன்னாட்டு வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வதற்கும் உதவும் விதத்தில் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கண்டி மற்றும் குருநாகல் ஆகிய இடங்களில் பிராந்திய மின் – வானிலை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஏற்றுமதி அபிவிருத்திச்சபை கடல் மற்றும் வான் கட்டணங்கள் மற்றும் களஞ்சிய வர்த்தகம் என்பனவற்றுடன் தொடர்பான பல்வேறுபட்ட தொழிற்பாட்டு பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஏற்றுமதியாளர்களுக்கு மதியுரைகளையும் உதவிகளையும் தொடர்ந்தும் வழங்கியது. மின் – வர்த்தகம், இறக்குமதி ஏற்றுமதி நடைமுறைகள், ஏற்றுமதிப் பொதியிடல், தர நிர்ணயம் என்பனவற்றின்மீது அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களும் ஆய்வரங்குகளும்- நடத்தப்பட்டன. ஏற்றுமதி அபிவிருத்திச்சபை ஏற்றுமதித்துறைக்கு கணனிமயப்படுத்தப்பட்ட தரவுத்தள வசதிகள், செய்தித் திரட்டுப்பணிகள், மதியுரைப்பணிகள் மற்றும் நூலக வசதிகள் போன்ற பல்வேறுபட்ட பணிகளை வழங்குவதற்காக அதன் மூலவளங்களை வழிப்படுத்தியிருக்கிறது.

ஏற்றுமதி அபிவிருத்திச்சபை கைத்தறி மற்றும் கைவினைக் கைத்தொழில்களை அபிவிருத்திக்கான முன்னுரிமைத்துறைகளாகத் தெரிவு செய்துள்ளது. ஏற்றுமதி அபிவிருத்திச்சபை உற்பத்தி அபிவிருத்தி, தரத்தினை உயர்த்துதல் மற்றும் தரத்தினைக் கவனித்தல் என்பன வற்றிற்காக உதவியினை வழங்கிய வேளையில் சந்தை நுண்ணறிவினையும் மதியுரையையும் வழங்கியது. கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கு க.ஏ.பெ பெறுமதியல் 20 சதவீதங்கொண்ட ஊக்குவிப்பு செலுத்தப்பட்டது. ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, தொழில் முயற்சி அபிவிருத்தி, கைத்தொழில் கொள்கை, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் அதன் முகவராண்மையுடன் சேர்ந்து பல சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதுடன் ஆடைச் சங்கங்களுடன்

நெருங்கிய உறவுகளையும் கொண்டிருந்தது. இது சந்தை உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஏற்பாடு, வெளிநாட்டுத் தூதரங்களிலுள்ள வர்த்தகத் திணைக்களங்களுடன் வடிவமைப்பு அபிவிருத்தி/ பெருமளவு உறவுகளுக்கான தொடர்புகளை நிறுவுதல், மற்றும் அங்கீகாரம் பெற்ற பன்னாட்டு கண்காட்சிகளில் எமது நாட்டிற்கான பார்ப்போர் கூடங்களை ஒழுங்கு செய்தல், தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற சந்தை அபிவிருத்தி, மற்றும் வழங்கல் அபிவிருத்தி உதவிகளை வழங்கியது.

2001ஆம் ஆண்டில் வர்த்தக சம்மேளனம் விளங்கிக் கொள்ளும் தன்மையினையும் மாற்றுத் தீர்வுகளை அடையாளங்கண்டு கொள்வதனையும் மேம்படுத்தும் பொருட்டும் முக்கியமான விடயங்களின் மீது ஆய்வரங்குகளையும் கலந்துரையாடல்களையும் நடத்தியவேளையில் வேறுபட்ட ஈடுபாடுகளைக் கொண்ட சாராரிடையே உடன்பாடுகளைக் கட்டியெழுப்பியது. சம்மேளனம் அரச அலுவலர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டங்களில் கலந்துகொண்டு கலந்துரையாடலில் அவர்களின் பங்களிப்பினை உயர்த்தியதுடன் கைத்தொழில் அதிபர்களினால் எதிர்நோக்கப்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் வசதியளித்தது.

### கப்பற் கட்டண வீதங்கள்

2001இல் மொத்த சராசரி கப்பற்கட்டண வீதங்கள், குறிப்பாக ஆண்டின் பின்னரைப் பகுதியில் அதிகரித்தன. அடிப்படைக் கப்பற் கட்டண வீதங்களை குறைக்கும் உலகளாவிய போக்கு காணப்பட்டபோதும், கப்பல் சொந்தக்காரர் இலங்கைத் துறைமுகங்களுக்குச் செலுத்த வேண்டியிருக்கும் சராசரி கப்பற் கட்டண வீதங்கள், தற்போதய கட்டணங்கள் மேல்நோக்கி திருத்தப்பட்டமை, கப்பல் நிறுவனங்களினால் புதிய கட்டணங்கள் விதிக்கப்பட்டமை என்பனவற்றின் காரணமாக அதிகரித்தன. தற்போதுள்ள கட்டணங்களில் முனைக்கோடியைக் கையாளுகின்ற கட்டணம், அதிகரித்துக்செல்லும் தொழிற்பாட்டு செலவுகளை ஈடுசெய்யும் விகிதம் 2001 மே 1ஆம் நாளிலிருந்து 33 சதவீதத்தினால் (20அடி கொள்கலன்களுக்கு ஐ.அ.டொலர் 86 இலிருந்து ஐ.அ.டொலர் 115இற்கும் 40 அடிக் கொள்கலன்களுக்கு ஐ.அ.டொலர் 138 இலிருந்து ஐ.அ.டொலர் 184 இற்கும்) அதிகரிக்கப்பட்டது. நீர்க்கல எரிபொருள் சீராக்கல் கட்டணம் இவ்வாண்டில் 50 சதவீதத்தினால் (ஐக்கிய அமெரிக்காவிற்கு 20அடி- கொள்கலனுக்கு ஐ.அ.டொலர் 70 இலிருந்து ஐ.அ.டொலர் 105 இற்கும் ஐ.இராச்சியத்திற்கு 20அடிக் கொள்கலனுக்கு ஐ.அ.டொலர் 50 இலிருந்து ஐ.அ.டொலர் 75 இற்கும்) அதிகரிக்கப்பட்டது. மேலதிக சுமையினை மேலும் கூட்டும் விதத்தில் கட்டுநாயக்கா வானூர்தி நிலையம் தாக்கப்பட்டதன் பின்னர் யுத்த இடர்நேர் விளைவு மேலதிகக் கட்டணம் நடைமுறைக்கு வந்தது. 2001 ஒகத்து 1ஆம் கிழமையிலிருந்து ஐ.அ.டொலர் 350 மற்றும் ஐ.அ.டொலர் 700 கொண்ட யுத்த இடர்நேர்வு மேலதிகக கட்டணங்கள் முறையே 20 அடி மற்றும் 40 அடி கொள்கலன்களின் மீது விதிக்கப்பட்டன. ஐ.அமெரிக்காவின் செத்தெம்பர் தாக்குதலைத் தொடர்ந்து மேற்கிற்கு செல்லும் அனைத்து சரக்குகளின் மீதும் 20 அடி கொள்கலனொன்றிற்கு ஐ.அ.டொலர் 150உம், 20அடி கொள்கலனொன்றிக்கு ஐ.அ.டொலர் 300உம் யுத்த இடர்நேர்வு மேலதிகக் கட்டணமாக விதிக்கப்பட்டது மேலும் சுயெசின் ஊடாகச் செல்லும் கப்பல்களின் மீது சுயெஸ் அவசர காலக்கட்டணமாக கொள்கலனொன்றிக்கு தீர்வையாக ஐ.அ.டொலர் 10 2001 ஒத்தோபர் 01 இலிருந்து விதிக்கப்பட்டது. எனினும், பன்னாட்டு மற்றும் உள்நாட்டு அரசியல் சூழலில் சாதகமான அபிவிருத்திகள் தோன்றியதன் காரணமாக யுத்த இடர்நேர்வு மேலதிகக் கட்டணம் முறையே ஐ.அ.டொலர் 100 இற்கும் ஐ.அ.டொலர் 200 இற்கும் குறைக்கப்பட்டது. இவ்யுத்த இடர்நேர்வு மேலதிகக் கட்டணங்கள் 2002இன் தொடக்கப்பகுதியில் மேலும் குறைக்கப்பட்டதுடன் பாதுகாப்பு நிலைமை முன்னேற்றமடைவதுடன் 2002இன் முதலரைப்பகுதியில் முழுமையாக அகற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2001இல் அடிப்படை கப்பல் கட்டண வீதத்தில் காணப்பட்ட மாற்றம் ஐ.இராச்சியம் / கண்டப்பகுதியில் மட்டுமே காணப்பட்டது.

அனைத்துக் காரணிகளினதும் இணைந்த தாக்கம் காரணமாக, அனைத்து முக்கிய சேரிடங்களுக்குமான சுற்றுலா கப்பற் கட்டண வீதங்கள் 2001இல் ஏறத்தாழ 5 சதவீதத்திற்கு மிதமாக அதிகரித்தன. பண்ட அடிப்படையிலான பகுப்பாய்வொன்று 2001இல் அனைத்து முக்கிய பண்டங்களுக்குமான கப்பற் கட்டணங்கள் அதிகரித்தமையைக் காட்டின.

கடந்த அண்மைக் காலத்தில் உலக கப்பற்படுத்தல் கைத்தொழில் காணப்பட்ட முக்கியமானதொரு பண்பு யாதெனில் கப்பற் கூட்டமைப்பினை விரிவாக்கப்பட்டமையாகும். இது விற்பனையில் சிக்கனத்தினை ஏற்படுத்தி அவற்றின் கப்பற் கட்டண வீதத்தினைக் குறைப்பை ஏற்படுத்துகிறது. கூட்டமைப்பிலுள்ள பலமான கப்பல் நிறுவனங்கள் குறைந்த கப்பற் கட்டண வீதங்களுடன் தாக்குப்பிடிக்கக் கூடியவாக இருந்தபோதும் தூரகிழக்கிலுள்ள குறிப்பிட்ட நிறுவனங்களினால் இப்போட்டிச் சூழலில் தாக்குப்பிடிக்க முடியவில்லை. கப்பல்களின் அளவும் 6000 தொடக்கம் 8000 வரையான இருபது அடிக் கொள்கலன்களுக்கு படிப்படியாக அதிகரித்தமையினால்

**சிறப்புக் குறிப்பு 13**

## இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

## வர்த்தகம் மற்றும் முதலீட்டு செயலாற்றம் பற்றிய ஒரு மதிப்பீடு

இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (இ.இ.சு.வ.உ) இலங்கை சனாதிபதியினாலும் இந்திய பிரதமரினாலும் 1998ஆம் ஆண்டு திசெம்பர் 28இல் கைச்சாத்திடப்பட்டு 2000இல் செயற்பாட்டிற்கு வந்தது. இலங்கை 2000ஆம் ஆண்டு பெப்புருவரியிலும், இந்தியா 2000ஆம் ஆண்டு மாச்சிலும் தீர்வைச் சலுகைகளை நடைமுறைப் படுத்தின. இவ் உடன்படிக்கையின் கீழ் அனுமதிப்பங்கு மட்டுப்படுத்தல்களுக்கு உட்பட்டுள்ள தேயிலை மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகள் தீர்வைச் சலுகைகளின் கீழ் 2000ஆம் ஆண்டு ஏப்பிறலில் தொடங்கின.

இரு நாடுகளும் சில பொருட்கள் மீதான தீர்வைகள் முழுவதையும் உடனடியாக நீக்கிய வேளையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களுக்கு பகுதியளவு சலுகைகள் வழங்கப்பட்டன.[1] பின்னைய வகை உற்பத்திப் பொருட்கள் மீதான அனைத்து தீர்வைகளினதும் நீக்கல் குறிப்பிட்ட காலப்பகுதியில் படிப்படியாக இடம்பெறும். எனினும், முக்கிய உள்நாட்டுக் கைத்தொழில்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு என்பவற்றுக்கு அச்சுறுத்தலாக அமையலாமென்ற அக்கறைகளின் காரணமாக இவ்வுடன்படிக்கை சில பொருட்களை ஏதேனும் சலுகைகளைப் பெறுவதிலிருந்து விலக்கி வைக்கின்றது.

இந்தியா, இலங்கையின் முக்கியவொரு வர்த்தகப் பங்காளராகும். 20001ஆம் ஆண்டு இலங்கையின் இறக்குமதிகளில் இந்தியா முதலாவது இடத்தையும் அதன் ஏற்றுமதிகளில் பதினோராவது இடத்தையும் வகித்து இந்நாட்டிற்கான ஏற்றுமதியில் இலங்கை கொண்டுள்ள மிகப்பெரும் வாய்ப்பினை எடுத்துக்காட்டியது. இந்தியாவிற்கான இலங்கையின் மொத்த ஏற்றுமதிகள் 24 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இந்தியாவிலிருந்தான மொத்த இறக்குமதிகள் சிறிதளவால் (0.3 சதவீதம்) அதிகரித்தன. இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான இந்தியாவிற்கான ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 16.2 மில்லியனாக விளங்கி 2001ஆம் ஆண்டில் இந்தியாவுக்கான மொத்த ஏற்றுமதிகளில் 23 சதவீதமாகக் காணப்பட்டது. இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகள் 2001ஆம் ஆண்டில் 88 சதவீதத்தினால் அதிகரித்தன. ஏற்றுமதிகளுள் கழிவுத்தாள்கள், கணனிப்பாகங்கள் ஐஸ்கிறீம் இயந்திரங்கள், பல மடிப்புக்களைக் கொண்ட தாள் சாக்குகள், இறைச்சி உற்பத்திகள் என்பன தீர்வை இன்றி அனுமதிக்கப்பட்டன. தேயிலை, பட்டை தீட்டப்பட்ட பளிங்குக்கல் பாளங்கள், மட்பாண்ட பொருட்கள், செப்பு கழிவுகள், ஊசியிலை மரப்பிசின், பார உருக்கு கழிவுகள் என்பன 50 சதவீத தீர்வை சலுகைகளைப் பெற்றன.

உண்மை நியதிகளில் இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகள் 2001ஆம் ஆண்டில் சிறிதளவால் மட்டுமே அதிகரித்ததுடன் இறுதிக் காலாண்டில் மேம்பாட்டுக்கான சமிக்ஞைகளை வெளிக்காட்டின. மேம்பாடானது சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் இறப்பர் செருப்புக்கள், கணனி உதிரிப்பாகங்கள், பளிங்குக்கற்கள், ஐஸ்கிறீம் இயந்திரங்கள், மீள் உருக்கப்பட்ட செப்பு, மீள் உருக்கப்பட்ட கட்டிட துணைப்பொருட்கள், வளையும் பொருத்தப்பட்ட கோவைகள், மருந்துப் பொருட்கள் போன்ற புதிய மேலதிக ஏற்றுமதிகளினால் சான்றளிக்கப்படுகின்றது.

அனுமதிப்பங்கின் கீழான ஏற்றுமதிப் பொருட்கள் தாழ்வடைந்து காணப்பட்டன.[2] இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 2000ஆம் ஆண்டில் 11,250 மெற்றிக் தொன்கள் கொண்ட அனுமதிப்பங்கில் 457 மெற்றிக் தொன்கள்

அட்டவணை 1

இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிச் செயலாற்றம்

ஐ.அ.டொலர் மில்லியன்

| உற்பத்தி | 2001 | 2001 |
|---|---|---|
| இலங்கையிலிருந்தான மொத்த ஏற்றுமதிகள் | 58.04 | 71.99 |
| இ.இ.வ.உ.இன்கீழான இலங்கையின் ஏற்றுமதிகள் | 9.21 | 16.23 |
| தாள் மற்றும் கழிவுத்தாள் | 4.28 | 4.23 |
| கழிவு (உருக்கு/அலுமினியம்/ஈயம் | 1.65 | 0.27 |
| செப்புக் கழிவு | 0.08 | 1.03 |
| தேயிலை | 1.13 | 0.66 |
| கணனிப் பாகங்கள் | 0.62 | 0.88 |
| பாரிய உருக்குக் கழிவு | 0.00 | 0.60 |
| தளபாடம் | 0.00 | 0.57 |
| ஐஸ்கிறீம் எந்திரங்கள் | 0.26 | 0.90 |
| பளிங்குக் கற்களும் மட்பாண்டப் பொருட்களும் | 0.16 | 1.30 |
| மருந்தாக்கல் பொருட்கள் | 0.11 | 0.17 |
| ஊசியிலைமரப் பிசின் | 0.01 | 0.67 |
| பல்மடிப்பு தாள் சாக்குகள் | 0.05 | 0.32 |
| மீள் உருக்கப்பட்ட உருளைக் கம்பிகள் | 0.00 | 0.21 |
| மீள் உருக்கப்பட்ட ஈயப்பாளங்கள் | 0.00 | 0.39 |

மூலம்: வர்த்தகத் திணைக்களம்.

## சிறப்புக் குறிப்பு - 13 (தொடர்ச்சி)

தேயிலையையும், 2001ஆம் ஆண்டில் 15,000 மெற்றிக் தொன்களில் 480 மெற்றிக் தொன்கள் தேயிலையையும் இலங்கை ஏற்றுமதி செய்தது. இவ் ஏற்றுமதிகள் இலங்கையின் ஒவ்வொரு ஆண்டு மொத்த தேயிலை ஏற்றுமதிகளின் 0.16 சதவீதமாகக் காணப்பட்டன. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான தேயிலை ஏற்றுமதிகளில் 90 சதவீதத்திற்கும் மேலானவை தொகை வடிவிலானதாகக் காணப்பட்டன. எஞ்சியவை பச்சை தேயிலை, பொதி செய்யப்பட்ட கருந்தேயிலை, உடன் தேயிலை, மற்றும் வாசனையூட்டப்பட்ட தேயிலை பைகளின் மாதிரிகள் சில என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு புறம்பாக எதுவித தீர்வைச் சலுகைகளுமின்றி இலங்கை 2001ஆம் ஆண்டில் 467 மெற்றிக் தொன்கள் தேயிலையை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்தது.

இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஆடை ஏற்றுமதிகளும் 2000ஆம் ஆண்டில் ஊக்கமளிப்பதாக இருக்கவில்லை. ஆடை ஏற்றுமதிகள் 2000ஆம் ஆண்டில் ஒரு சில மாதிரிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. எனினும் 2001ஆம் ஆண்டில் 69,265 சட்டைகளும் 312,296 சோடிக் கையுறைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ் ஏற்றுமதிகளின் பெறுமானம் ஐ.அ.டொலர் 0.2 மில்லியனாகக் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2001ஆம் ஆண்டில் மேம்பாடொன்றைக் காணப்பட்ட போதிலும் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவுகள் 8 மில்லியன் ஆடைத் துண்டுகளுக்கான அனுமதிப் பங்கைக் காட்டிலும் வெகுவாக குறைவடைந்து காணப்பட்டன.

குறைந்த மட்டத்திலான ஆடை மற்றும் தேயிலை ஏற்றுமதிகளுக்கு பல காரணிகள் பங்களிப்புச் செய்தன. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான தேயிலை மற்றும் ஆடை ஏற்றுமதிகளுக்கான நுழைவு மையங்கள் இரு துறைமுகங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மூல உற்பத்தி விதிகள் தொடர்பான தகைமையானது கலவை செய்யப்பட்ட தேயிலை மற்றும் பெரும்பாலான ஆடைகளின் ஏற்றுமதியைத் தடுத்து நிறுத்தியது. அனுமதிப்பங்கின் கீழான 8 மில்லியன் ஆடைத்துண்டுகளில் 6 மில்லியன் துண்டுகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட புடவைகளைப் பயன்படுத்தி இருத்தல் அவசியம். பாதிப்புக்களை விளைவிக்கலாம் எனக் கருதப்படும் ஆடை வகைகளின் மீது சிறப்புத் தீர்வை விதிக்கப்பட்டது. இலங்கை ஏற்றுமதியாளர்களது மேம்பாட்டு பிரச்சார நடவடிக்கை போதுமானதாக இருக்கவில்லை.

இந்தியாவிலிருந்தான மொத்த இறக்குமதிகள் 2001ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 602 மில்லியனாக விளங்கி 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 600 மில்லியனை விட சிறிதளவு அதிகரித்துக் காணப்பட்டன. எதிர்மறைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள அத்தியாவசிய உணவுப் பொருட்களான பருப்பு, பெரிய வெங்காயம், சீனி, மிளகாய் என்பன 2001ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதிகரித்த பெறுமானம் கொண்ட முதல் பத்து விடயங்களிடையே காணப்பட்டன. எதிர்மறைப் பட்டியலிலுள்ள பொருட்களின் இறக்குமதிகள் 2001ஆம் ஆண்டில் 13.7 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 210 மில்லியனிற்கு அதிகரித்தது. இலங்கையின் எதிர்மறைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிராத பொருட்களின் இறக்குமதிகள் (தீர்வை சலுகைகள் அளிக்கப்பட்ட அல்லது படிப்படியாக கட்டம் கட்டமாக அகற்றப்படவுள்ள) 2001ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 392 மில்லியனாக விளங்கி 5.6 சதவீத வீழ்ச்சியைக் காட்டின. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான தீர்வை சலுகைகளின் கீழ் இந்தியாவினாலும் ஏற்றுமதிகளை அதிகரித்துக் கொள்ள முடியவில்லை.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் முதலீட்டுச்சபை 2000ஆம் ஆண்டில் 5 வெளிநாட்டு முதலீட்டு செயற்றிட்டங்களுக்கும், 2001ஆம் ஆண்டில் மேலும் 6 செயற்றிட்டங்களுக்கும் ஒப்புதலளித்தது. இச் செயற்றிட்டங்களிலிருந்து பெறப்பட்ட மொத்த முதலீடுகள் ஐ.அ.டொலர் 31.5 மில்லியனாகக் காணப்பட்டது. இவற்றுள் நான்கு செயற்றிட்டங்கள் 2001ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 4.4 மில்லியன் மொத்த முதலீட்டுடன் தொடங்கப்பட்ட வேளையில் ஐ.அ.டொலர் 25.3 மில்லியன் முதலீட்டுடனான ஏனைய ஐந்து செயற்றிட்டங்களுக்கு முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

தற்போது வழங்கப்பட்டுள்ள சலுகைகளிலிருந்து இலங்கை அதி உச்சப் பயனை பெற்றுக்கொள்வதனை கட்டுப்படுத்தும் விடயமாக இந்தியாவில் நடைமுறையிலுள்ள தீர்வைகள் அல்லாத தடைகள் காணப்படுகின்றன. இந்தியாவிலுள்ள சிறு உற்பத்தியாளர்களுக்கு பல்வேறு வகைப்பட்ட மறைமுக உதவிக் கொடுப்பனவுகளை இந்திய அரசு வழங்குவது தெளிவாகத் தெரிகின்றது. உதாரணமாக, இந்தியாவிலுள்ள பல்வேறு உள்ளூர் உற்பத்தியாளர் பிரிவுகளுக்கு தாழ்ந்த உற்பத்தி வரி வீதங்களை விதிப்பதனை குறிப்பிடலாம். இந்திய சுங்க

## சிறப்புக் குறிப்பு - 13 (தொடர்ச்சி)

அதிகாரசபையின் இடைஞ்சல் மிக்கதும் ஒளிவுமறைவானதுமான பரிசோதனை நடைமுறைகள் குறித்து முறைப்பாடுகள் இருக்கின்றன. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் உள்ளடக்கம் மற்றும் நடைமுறைகள் குறித்த தெளிவான அறிவை இந்திய சுங்க அலுவலர்கள் கொண்டிராமை, மூல உற்பத்தி தேவைப்பாடு விதியை நிறைவேற்றும் பொருட்டு இலங்கை அதிகாரிகளினால் வழங்கப்படும் மூல உற்பத்திச் சான்றிதழ்களை ஏற்காமை, சுங்க பெறுமதியிடலிலான முறைகேடுகள் என்பன இந்தியாவுடனான வர்த்தகத்திற்கான தடைக்கற்களாக அமைந்துள்ளதென இலங்கை ஏற்றுமதியாளர்கள் முறையிடுகின்றனர். எனினும், சு.வ.உடன்படிக்கையில் தேவை சாராத தடைகள் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை. அத் தடைகள் அகற்றுவதே எதிர்வரும் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டுக்குழுவின் சந்திப்பில் முக்கிய கவனத்தினைப் பெறவேண்டும்.

இந்திய அரசு 2001ஆம் ஆண்டுக்கான அதன் வரவுசெலவுத்திட்டத்தினூடாக வர்த்தகக் கொள்கையில் பல மாற்றங்களை மேற்கொண்டது. சிறப்பு உற்பத்தி தீர்வையை கணக்கிடுவதற்கான அடிப்படைத்தளம் இறக்குமதி பெறுமானத்திலிருந்து அதிகக்கூடிய சில்லறை விலைக்கு மாற்றியமைக்கப்பட்டது. சிறப்பு உற்பத்தித் தீர்வையின் மூன்று பிரிவு வீதங்களான 8 சதவீதம், 16 சதவீதம் மற்றும் 24 சதவீதம் என்பன 16 சதவீதத்தால் ஒன்றிணைக்கப்பட்டு அனைத்து இறக்குமதிகளுக்கும் 4 சதவீத மேலதிக வரியொன்று அறிமுகபபடுத்தப்பட்டது. மேலும் இந்தியா தேயிலை (15 சதவீதத்திலிருந்து 70 சதவீதத்திற்கு), தோல் உற்பத்திகள் (35 சதவீதத்திலிருந்து 90 சதவீதத்திற்கு), நூடில்ஸ் (35 சதவீதத்திலிருந்து 100 சதவீதத்திற்கு) ஆகிய பெரும்பாலான பொருட்களுக்கான தீர்வையை அதிகரித்தது. இந்த கொள்கை மாற்றங்கள் இந்திய உற்பத்தியாளர்களுக்கான பாதுகாப்பினை உயர்வடையச்செய்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கை ஏற்றுமதியாளர்கள் எதிர்பார்த்த அனுகூலமான நிலையினையும் குறைவடையச் செய்துள்ளது.[3]

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தலை வசதிப்படுத்துவதற்கு இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பினை அதிகரிப்பதற்கு பல நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். இவ் உடன்படிக்கையில் தீர்வையில்லாத ஏனைய கட்டணங்கள் அல்லது தீர்வை அல்லாத தடைகள் என்பன பற்றி எதுவும் குறிப்பிடப்படாத போதிலும் இது அத்தகைய ஏதேனும் தடைகளை நீக்குவது அல்லது தீர்வையை அறிமுகப்படுத்துவதனூடாக அவற்றுக்கு தீர்வு காண்பதற்கு கூட்டுக்குழு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு இவ்வுடன்படிக்கை வசதியளிக்கின்றது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் நிறுவப்பட்ட கூட்டுக்குழுவின் முதல் சந்திப்பு பிராந்தியத்தின் அரசியல் நிகழ்வுகள் மற்றும் இரு பகுதியினருக்கும் வசதியான திகதியொன்றினை நிருணயிப்பதிலான இடர்ப்பாடுகள் என்பன உள்ளிட்ட பல்வேறுபட்ட காரணங்களினால் இடம்பெறவில்லை. அமைச்சர் மட்டத்திலான கூட்டுக்குழுவின் கூட்டத்தை நடத்துவதிலான காலதாமதம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான மேம்பாட்டுக்கு தடையாக விளங்குகின்றது. இலங்கை 2001ஆம் ஆண்டு மாச்சில் தீர்வை வீதங்களை குறைவடையச் செய்து இரண்டாம் கட்டத்தினை ஒருதலைப்பட்சமாக நடைமுறைப் படுத்தியது. இந்தியா இரண்டாம் கட்டத்தினை நடைமுறைப்படுத்தாது தீர்மானமொன்றை எடுப்பதற்காக அமைச்சர்கள் மட்டத்திற்கான கூட்டுக்குழுவின் முதலாவது கூட்டம் நடைபெறும் வரையில் காத்திருக்கின்றது.[4]

கூட்டுக்குழு அதனது அடுத்த கூட்டத்தில் (அ) இரண்டாவது கட்ட நடைமுறைப்படுத்தலின் கீழ் இந்தியா உடனடியாக தீர்வைகளை குறைத்தல், (ஆ) அடிப்படை தீர்வை வீதங்களானது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட காலத்தில் நடைமுறையிலிருந்த வீதங்களென தீர்மானித்தல். (தேயிலைக்கான வீதத்தைப் போன்று) மற்றும் இந்தியாவிற்கான இறக்குமதிகள் மீதான சிறப்புத் தீர்வைகளை நீக்குதல் போன்ற பல விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தல் வேண்டும். வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் ஆபிரிக்க வளர்ச்சி மற்றும் வாய்ப்புக்கள் சட்டம் என்பவற்றின் கீழ் முறையே மெக்சிகோ மற்றும் சில துணை சகாரா நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு தீர்வையின்றி இறக்குமதி செய்வது போல் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கான ஆடை இறக்குமதிகளை படிப்படியாக தீர்வையின்றி இறக்குமதி செய்வதற்கான சாத்தியங்களை ஆராய்ந்தறிவது முக்கியமாகும். இதைப்போன்ற புடவை மூல உற்பத்தி விதி தொடர்பான வரையறை மற்றும் நுழைவு மையங்கள் மீதான கட்டுப்படுத்தல்கள் என்பன உடன்படிக்கையிலிருந்து அகற்றப்படல் வேண்டும்.[5] இரு நாடுகளின் மைய சம்மேளனங்கள் இரண்டினதும் தீவிரமான பங்கேற்பினை குறிப்பாக, கூட்டு மேம்படுத்தல் பிரச்சார செயற்பாடுகளை முன்னெடுத்தல், தரவுத் தளமொன்றினை பேணி தகவல்களை பரப்புதல் மற்றும் அனைத்துப்

**சிறப்புக் குறிப்பு – 13 (தொடர்ச்சி)**

பங்கேற்பாளர்களுக்கும் கிரமமான அடிப்படையில் சந்தைத் தகவல்களை வழங்கல் என்பவற்றை ஊக்குவித்தல் வேண்டும். வாணிபத் தொடர்புகளை ஊக்குவித்து நடைமுறைகளை இலகுபடுத்துவதற்கென இரு பகுதியினரும் வாணிப விசா அனுமதி வழங்கலை துரிதப்படுத்துவதற்கு எளிமையானதும் செயற்றிறன் மிக்கதுமான முறையொன்றை அறிமுகப்படுத்த முடியும்.

இப் பிரச்சனைகளுக்கான காலதாமதமற்ற தீர்வு இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தின் விரிவாக்கத்திற்கு பெருமளவு வழிவகுக்கும். அத்தகைய விரிவாக்கம் 2002ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார மீட்சியை துரிதப்படுத்துவது மட்டுமன்றி குறிப்பாக கைத்தொழில் நாடுகளின் எறிவுசெய்யப்பட்ட மந்தமான மீட்சி மற்றும் ஏனைய நாடுகளுக்கிடையே தோற்றம் பெற்றுவரும் வர்த்தகக் கூட்டணி அமைப்புக்களினால் விளைவிக்கப்படக்கூடிய மோசமான தாக்கம் என்பவற்றுக்கு மத்தியிலும் எதிர்கால பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களை மேம்படுத்தும்.

1. கட்டம் Iஇல் வழங்கப்பட்ட சலுகைகள் மற்றும் எஞ்சியுள்ள தீர்வைகளின், உத்தேச கட்டம் கட்டமான தளர்த்தல் நடைமுறைகள் என்பவற்றின் விபரங்களுக்கு இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 1999 இலுள்ள இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை குறித்த சிறப்புக்குறிப்பு 6 இனைப் பார்க்கவும்.
2. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான தேயிலை அனுமதிப்பங்கு ஒதுக்கீடு முறையே 2000ஆம் ஆண்டில் 11.25 மில்லியன் கிலோகிறாம்களாகவும், 2001ஆம் ஆண்டில் 15 மில்லியன் கிலோகிறாம்களாகவும் காணப்பட்டது.
3. நேயிலையைப் பொறுத்தமட்டில் மாத்திரமே இலங்கை இன்னும் 7.5 சதவீத தீர்வையை செலுத்துவதுடன் இலங்கையும், இந்தியாவும் உடன்படிக்கையை கைச்சாத்திட்ட வேளையில் நடைமுறையிலிருந்த வீதத்தில் இது 50 சதவீதமாகும்.
4. எனினும் இந்திய அரசாங்கம் 2002ஆம் ஆண்டு மார்ச் 1இலிருந்து செயற்படும் வகையில் அதன் 2002/2003 வரவுசெலவுத்திட்டத்தில் இலங்கையின் எஞ்சியுள்ள இறக்குமதிகளின் பட்டியலிலுள்ள 2,799 தீர்வை விடயங்கள் மீதான தீர்வை வீதங்கள் 90 சதவீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளன. இவ்விடயங்கள் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் முதலாவது கட்டத்தில் 50 சதவீதத் தீர்வைக் குறைப்பை பெற்றுக்கொண்டன.
5. தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஏற்பாட்டு உடன்படிக்கையின் கீழ் இந்தியாவுடன் வர்த்தகம் செய்வதற்கு வங்காளதேசத்திற்கு பெரும் எண்ணிக்கையான நுழைவு மையங்கள் (ஏறத்தாழ 215) கிடைக்கத்தக்கதாக இருக்கின்றன.

---

வெகுவாக உயர்வடைந்தது. இக் கப்பல் நிறுவனங்கள் முழுமையான இயலளவில் தொழிற்படுவதற்கு போதுமான சரக்குகளைப் பெறுவதற்கு போட்டியிட வேண்டிய நிலையிலிருந்தமையினால் கப்பற் கட்டண வீதங்கள் குறைவடைவதற்கான சாத்தியம் காணப்பட்டது. குறைந்த கட்டணங்களின் விளைவாக கிடைக்காமல் போன வருவாய்களை ஈடுசெய்வதற்காக கப்பல் நிறுவனங்களினால் விதிக்கப்பட்ட பல்வேறு வகையான சிறு கட்டணங்களின் காரணமாக பன்னாட்டு கப்பற் கட்டண வீதங்கள் ஸ்திரப்படுத்தப் படவில்லை. எனினும் மிகப்பாரிய கூட்டமைப்பில் இணைந்துகொள்ளும் வேளையில் கப்பற் கட்டண வீதங்கள் குறைந்த மட்டத்தில் ஸ்திரப்படுத்தப்படும் என எதிர்பார்க்கலாம்.

## 9.12 வர்த்தக உறவுகள், வர்த்தகப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு ஒழுங்குகள்

2001இல் இலங்கை பிராந்திய, இருபுடை மற்றும் பல்புடை உறவுகளைப் பலப்படுத்துவதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்திய- இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கட்டம் இரண்டின்கீழான கடப்பாடுகளை இலங்கை 2001 மார்ச்சில் ஒருதலைப்பட்சமாக நடைமுறைப்படுத்தியது. ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையிலிருந்து புடவைகளையும் ஆடைகளையும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கு இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பங்கற்ற வழியினை 2001 சனவரி 1ஆம் நாளன்று வழங்கியது. இதற்குப் பதிலாக இலங்கை கம்பளம் மற்றும் தரைவிரிப்புக்கள் மீதான தீர்வையை ஐரோப்பிய ஒன்றியத்துடனான உடன்படிக்கைக்கு இசைவாக 2001 சனவரி 12ஆம் நாளிலிருந்து 25 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைத்தது.

பாக்கித்தானுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்வதற்கான முன்மொழிவொன்றினை பாக்கித்தானிடமிருந்து இலங்கை பெற்றுக் கொண்டது. பாக்கித்தான் அதிகாரிகளினால் தயாரிக்கப்பட்ட முன்மொழிவின் வரைவு தீர்வைச் சலுகைகளுக்கான சட்ட நடைமுறைகள், மூலவிதிகள் மற்றும் தீர்வையல்லா தடைகளின் ஒழிப்பு போன்றவற்றில் காணப்பட்ட சிலவேறுபாடுகள் தவிர இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஏற்பாடுகளை ஒத்ததாகவே காணப்பட்டது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக பாக்கித்தானுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான ஆரம்ப வேலைகளைத் தயாரிப்பதற்காக தொழில்நுட்பக் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டது. தீர்வைச் சலுகைகளுக்காக

மூலதன முதலீடும் கேட்டுக் கொள்ளப்பட்ட பட்டியல், வழங்கும் பட்டியல் மற்றும் எதிர்க்கணிய பட்டியல் என்பனமீதான தொடக்க வேலைகள் நிறைவுபெற்றுள்ளன.

பிரேசிலிலும் மற்றைய இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் 2001இல் இலங்கைத் தூதரங்களை திறப்பதன்மூலம் இலங்கை அந்நாடுகளுடன் வர்த்தக உறவுகளை விரிவாக்க முயற்சித்தது. இலங்கை வியட்நாமில் இராசதந்திர தூதரகமொன்றினை நிறுவுவதற்கு ஒப்புதலளித்த துடன் வியட்நாமுடன் பொருளாதார, வியாபார உறவுகளை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கிறது. சீனப் பிரதமர் 2001 மேயில் இலங்கைக்கு வருகை தந்ததுடன் சீனாவிற்கும் இலங்கைக்குமிடையிலான பொருளாதார உறவுகள் மேலும் வலுவடைந்தன. சீனாவிற்கான ஏற்றுமதிகளை விரிவாக்கம் செய்து அதனை மேற்கொள்ளுவதற்கான வாய்ப்புக்களை அடையாளம் காணபதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் செயற்பாட்டுக்குழுவொன்று நிறுவப்பட்டது.

பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பு, பாங்கொக் ஒப்பந்தம், வங்காளதேசம், மியன்மார், இலங்கை, தாய்லாந்து பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பொருளாதார பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்து சமுத்திர வலைய அமைப்பு ஆகியவற்றுடனான தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலம் பிராந்திய ஒத்துழைப்பு 2001ஆம் ஆண்டில் மேலும் ஊக்குவிக்கப்பட்டது.

பொருளாதார ஒத்துழைப்பு மீதான கூர்ந்த அவதானிப்பினை கொண்ட பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பின் கூட்டம் 2001 ஒத்தோபர் 21- 22ஆம் நாட்களில் காத்மண்டுலில் இடம்பெற்றது. தென்னாசிய முன்னுரிமை வர்த்தக ஒழுங்குகளின் கீழான வர்த்தகப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. இக் கூட்டத்தில் ஆராயப்பட்ட மற்றைய விடயங்கள் முதலீட்டுப் பாதுகாப்பின் மீதான பிராந்திய உடன்படிக்கையின் வரைவு, இரட்டை வரி விதிப்பைத் தவிர்த்தல் சுங்க விடயங்கள் தொடர்பான ஆலோசனையாளரை நியமிப்பதற்கான தரக்கட்டுப்பாட்டு வழிமுறைகள் மற்றும் நடைமுறைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. தெற்காசிய முன்னுரிமை வர்த்தக ஒழுங்குகளின் கீழான நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் பொருட்டு உள்ளக அரச குழுவின் முதலாவது கூட்டம் 2002 சனவரியில் நடாத்தப்பட்டது. நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் பயன்படுத்துவதற்காக தேசிய அட்டவணைகளையும் ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய அட்டவணைகளையும் தயாரிப்பதற்கு இயலச் செய்யும் விதத்தில் பங்காளர் நாடுகளின் தேவையான பட்டியல்களையும் வர்த்தக மற்றும் வர்த்தகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளுடன் தொடர்பான தகவல்களையும் பரிமாறிக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய அமைப்பின் பொருளாதார ஒத்துழைப்பின் மீதான கூர்ந்த அவதானிப்புக்கள் தெற்காசிய சுதந்திர வர்த்தகத்துறைக்கான அனைத்தையும் உள்ளடக்கிய உடன்படிக்கை அமைப்பினை இறுதியாக்குவதற்கான அதன்வலுவான கடப்பாட்டினை வலியுறுத்தியது. தெற்காசிய சுதந்திர வர்த்தக பிரதேச உடன்படிக்கையின் முதலாவது தொழிற்பாட்டு வரைவு நிபுணர்களின் குழுவினால் ஆய்வு செய்து கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வங்காளதேசம், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து, ஆகிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பின் வர்த்தக அமைச்சர்களினால் உருவாக்கப்பட்ட அரச குழுக்களுக்கிடையிலான முதலாவது கூட்டம் 2001 பெப்புருவரி 5- 6 நாட்களில் நடாத்தப்பட்டது. இக்கூட்டத்தில், இப்பிராந்தியத்தில் சுதந்திர வர்த்தகப் பிரதேசமொன்றிற்கு இட்டுச் செல்கின்ற முன்னுரிமை வர்த்தக ஒழுங்குகளை அடையக்கூடிய சாத்தியமான அணுகுமுறைகள் பற்றி முக்கியமாக ஆலோசிக்கப்பட்டன. வங்காளதேசம், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பின் வர்த்தக மற்றும் பொருளாதார அமைச்சுக்களின் மூன்றாவது கூட்டம் 2001 பெப்புருவரி 15ஆம் நாளன்று ரங்கூனில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை எய்துவதற்கு வங்காளதேசம், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்வான், ஆகிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பை பின்பற்ற வேண்டிய அணுகுமுறையை விதந்துரைப்பதற்காக நேர்முறையான அல்லது எதிர்மறையான பட்டியலைப் பின்பற்றுவதிலுள்ள சாதகமான அல்லது பாதகமான தன்மைகளை ஆய்வு செய்து பகுப்பாய்வதற்காக நிபுணர்கள் குழு மூத்த வர்த்தகப் பொருளதார அலுவலர் கூட்டத்தில் அறிக்கையினைச் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வங்காளதேசம், இந்தியா,

மியன்மார், இலங்கை, தாய்வான் ஆகிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பின் வர்த்தக பொருளாதார அமைச்சர்களின் நான்காவது கூட்டம் யன்கூன்னில் 2001 திசெம்பர் 19– 21 ஆம் நாட்களில் நடத்தப்பட்டது. இக் கூட்டத்தில் இலங்கை தொழில்நுட்பத்துறையின் முன்னணி வகிக்கும் நாடு எனவும் அடுத்துவரும் மூன்றாண்டு காலப்பகுதியில் வர்த்தக மற்றும் முதலீட்டுத்துறையின் பாதுகாப்பின்கீழ் பதனிடப்பட்ட உணவு, இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களுக்கான துணைத்துறைகளில் இணைப்பு நாடெனவும் குறித்துரைக்கப்பட்டது. மேலும் 2002 திசெம்பரில் கொழும்பில் நடத்துவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ள வங்காளதேசம், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து, ஆகிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பின் பதில் அமைச்சர்கள் மட்டத்திலான அமைச்சர்கள் கூட்டத்தினை முழு அமைச்சர் மட்டத்திலான கூட்டமாக தரமுயர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்து சமுத்திர வலயஅமைப்பின் அமைச்சர்கள் குழுவினது மூன்றாவது அமைச்சுக் கூட்டம் 2001 ஏப்பிறலில் மஸ்கட், ஓமானில் நடத்தப்பட்டது. இலங்கை பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்து சமுத்திர வலய அமைப்பின் உயர்மட்ட செயலணிக் குழுவிற்கு செயலகத்திற்கு நிதியிடல் மற்றும் இப்பிராந்தியத்தில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றுக்கு இட்டுச் செல்லும் முன்னுரிமை வர்த்தக ஒழுங்கிற்கான முன்மொழிவின் மீதான ஆய்வைப்பற்றி அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தது. பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்துசமுத்திர வலய அமைப்பினது உயர்மட்ட செயலணிக்குழுவின் இரண்டாவது கூட்டம் தெகிரான் ஈரானில் நடத்தப்பட்டது. இலங்கைப் பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்து சமுத்திர வலய அமைப்பின் சுங்க நடைமுறைகளின் தொகுப்பினை அபிவிருத்தி செய்வதற்கான தொழிற்பாட்டுக் குழுவின் கூட்டத்தினை 2001 பெப்புருவரியில் நடத்தியது. தீர்ப்பனவு மற்றும் கொடுப்பனவு ஒழுங்குகளின் பொருத்தமான தன்மை மற்றும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்து சமுத்திர வலய அமைப்பின் பிராந்தியத்தில், பிராந்தியங்களுக்குள்ளேயான வர்த்தகத்தினை மேம்படுத்துவதற்காக சுற்றுலாவையும் நிறுவன ரீதியிலான பொறிமுறைகளையும் மேம்படுத்துதல் என்பதுபற்றி இலங்கை இந்தியாவுடன் சேர்ந்து கூட்டு ஆய்வொன்றை மேற்கொண்டது. இந்து சமுத்திர வலய வியாபாரம் தொடர்பான அமைப்பு மற்றும் இந்து சமுத்திர வலய கல்விசார் குழு ஆகியவற்றின் கீழ் இலங்கையும் இந்தியாவும் குழுவின் குறிக்கோளை எய்தும் பொருட்டு பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்து சமுத்திர வலய கல்விசார் குழு ஆகியவற்றின்கீழ், இலங்கையும் இந்தியாவும் குழுவின் குறிக்கோளை எய்தும் பொருட்டு பிராந்திய ஒத்துழைப்பிற்கான இந்து சமுத்திர வலய அமைப்பின் நடவடிக்கைகளில் தீவிரமான பங்கினை ஆற்றின.

வர்த்தக முன்னுரிமைகளின் பொது வாக்கப்பட்ட அமைப்பில் பங்கேற்கின்ற அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளிலிருந்தான தீர்வைச் சலுகைகளை இலங்கை தொடர்ச்சியாகப் பொறுப்பேற்றிருக்கிறது. அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளிடையே வர்த்தக முன்னுரிமை களின் பொதுவாக்கப்பட்ட முறையின் மீதான உடன்படிக்கைக்காக தென்பகுதி பொதுச் சந்தையை அடைவதற்கான நல்லெண்ணமொன்று 2001 ஒத்தோபர் 10ஆம் நாளன்று கையெழுத்தானது.

பாங்கொக் உடன்படிக்கையின் நிலையியற் குழுவின் பதினேழாவது கூட்டம் 2001 ஒத்தோபர் 25 –31 ஆம் நாட்களுக்கிடையில் பாங்கொக்கில் நடைபெற்றது. முதற்றடவையாக சீனா அலுவல்சார் உறுப்பினராக இக் கூட்டத்தில் கலந்து கொண்டது. சீனா உடன்படிக்கையில் சேர்ந்து கொண்டமையானது உறுப்பினர் நாடுகளிடையில் பிராந்தியத்திற்குள்ளேயான வர்த்தகத்தை வேகப்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகிறது. இக்கூட்டத்தில் உறுப்பினர் நாடுகள் பாங்கொக் உடன்படிக்கையை மீண்டும் வலிவுறச் செய்யவேண்டுமென்ற முன் மொழிவினை அங்கீகரித்தன. பாங்கொக் உடன்படிக்கை கடந்த 25ஆண்டு காலப்பகுதியில் அதன் உறுப்பு நாடுகளிடையே வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்கு அதிகளவிற்குப் பங்களிக்கவில்லை என்பதனால் இந்நடவடிக்கை பயன்மிக்கதாகக் கருதப்படுகிறது. பாங்கொக் உடன்படிக்கையின் கீழ் மூன்றாவது சுற்று வர்த்தகப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. உறுப்பினர் நாடுகள் வகை முறைகளுக்கும் வழிகாட்டல் களுக்கும் அதேபோன்று மூன்றாவது சுற்றை நடத்துவதற்கும் முடிப்பதற்குமான குறிப்பிட்டகால அட்டவணைக்கும் இணங்கிக் கொண்டன.

குழு 15இன் பதினோராவது கூட்டம் 2001 மேயில் ஜகார்த்தாவில் நடத்தப்பட்டது.

அபிவிருத்திக்கு இலக்கத் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதற்கான உள்ளார்ந்த வளத்தின்மீது கூட்டம் கவனம் செலுத்தியது. குழு 15இன் அடுத்த கூட்டம் கரகாஸ், வெனிசுலாவில் 2002 யூலையில் நடத்தப்படவுள்ளது. அக் கூட்டத்தில் வலுத் துறையில் ஒத்துழைப்பு என்பது கருப்பொருளாக இருக்கும்.

உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மாநாடு டோகா கட்டாரில் 2001 நவெம்பர் 9- 14 ஆம் நாள்வரை நடத்தப்பட்டது. 142 உறுப்பினர்கள் நாடுகளுடன் இலங்கையும் இம் மாநாட்டில் கலந்துகொண்டது. இக்கூட்டத்தில் உலக வர்த்தக அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி உணவும் பாதுகாப்பு விடயங்கள், வாழ்க்கைக்கான தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி என்பனமீது உள்நாட்டு உதவியும் பாதுகாப்பும் வழங்கும் விதத்தில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு நெகிழ்ச்சித்தன்மையும் வழங்கப்பட்டதுடன், இலங்கை அதன் உதவிக் கொடுப்பனவுகளை தொடரும் வகையில் உலக வர்த்தக அமைப்பு உடன்படிக்கையின் 27.4 உறுப்புரையின்கீழ் உதவிக் கொடுப்பனவுகளும் சமநிலைப்படுத்தும் வழிமுறைகளும் அதற்கு அனுமதிக்கப்பட்டன. வேளாண்மை உற்பத்திகளின்மீதும் குறிப்பிட்ட கைத்தொழில் உற்பத்திகளின்மீதும் அபிவிருத்தி அடைந்த நாடுகளினால் குறைப்புச் செய்யப்பட்ட தீர்வைகளிலிருந்தும் இலங்கையும் நன்மையைப் பெற்றுக் கொள்ளும். இது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அவற்றின் வேளாண்மை உற்பத்திகளுக்கும் ஆடை மற்றும் தோல் போன்ற கைத்தொழில் உற்பத்திகளுக்கும் பெருமளவு சந்தை வாய்ப்புக்களை உருவாக்கும். சிறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய பொருளாதாரங்களின் குறிப்பிட்ட பிரச்சனைகளைப் பரீட்பதற்கான உலகவர்த்தக அமைப்பின் பொதுக்குழுவின் அனுகூலங்களின்கீழான வேளாண்மை நிகழ்ச்சித் திட்ட நிறுவகத்திலிருந்து இலங்கை நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும். இக்குழு அடுத்த அமைச்சரவை மாநாட்டில் பிரச்சனைகளை குறிப்பாக சிறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய பொருளாதாரங்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான விதந்துரைப்புக்களை வழங்கும். இவ் விதந்துரைப்புக்கள் அத்தகைய பொருளாதாரங்கள் அபிவிருத்தி அடைந்த நாடுகளிலிருந்து தீர்வைச் சலுகைகளைப் பெறுவதற்கு உதவும். வர்த்தகம் தொடர்பான புலமைச் சொத்து உரிமைகள் மீதான உலக வர்த்தக அமைப்பு தொடர்பான டோகா பிரகடனம் புவியியல் ரீதியான குறியீடுகளின்கீழ் இலங்கையரின் மூலத் தயாரிப்பான சிலோன்டீ போன்ற இலங்கை உற்பத்திகளை இலங்கை பாதுகாத்துக்கொள்ள இயலச் செய்யும். இது பயங்கர நோயான எயிட்ஸ்/ எச்ஐவி உடன் கயரோகம், மலேரியா மற்றும் ஏனைய தொற்று நோய்களையும் சேர்க்கும் அதிகரித்த செயற்பரப்புடன் பொதுமக்கள் நல ஈடுபாடுகளைக் கருத்திற் கொண்டு மாற்று உரிமைகளை மேற்கொள்ள நாடுகள் அனுமதிக்கப்பட்டன. இதன்கீழ், உலக வர்த்தக அமைப்பிலுள்ள உறுப்பினர்களுக்கு மலிவான மருந்துகளைப் பொறுத்தவரை கட்டாய உரிமம் வழங்கப்பட்டு சமாந்தர இறக்குமதிகளுக்கு அனுமதிக்கப்பட்டது.

தேவையற்ற பொருட்களைக் குவித்து வைத்தலுக்கெதிரான முறை உதவிக் கொடுப்பனவுகள், எதிரிடையான தீர்வைகள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் என்பனவற்றை வழங்குவதற்கான சட்டம் வரையப்பட்டு வருகிறது.

### 9.13 உள்நாட்டு வர்த்தகமும் நிறுவன ரீதியான ஒழுங்குகளும்

இலங்கையின் உள்நாட்டு வர்த்தகம் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட மெதுவான போக்கினாலும், அதேபோன்று வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. அண்மைய ஆண்டுகளைப் போன்றே, உள்நாட்டு வர்த்தகம் ஆகக் குறைந்த அரச தலையீட்டுடன் ஒப்பீட்டு ரீதியில் சுதந்திரமான சந்தைச் சூழலொன்றில் நடத்தப்பட்டது. வர்த்தக ஒழுங்கு விதிகளுக்கேற்ப முக்கிய கட்டுப்பாடுகளும் தலையீடுகளும் மட்டுப்படுத்தப்பட்ட வேளையில் விலை நிர்ணயம் மீதான அரச தலையீடுகள் ஒருசில இன்றியமையாத பொருட்களின் கிடைப்பனவு என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்காக அரசு தலையிட்டது. இன்றியமையாத பொருட்களின் விலைகளில் அல்லது பற்றாக்குறையில் ஏற்படும் பாரிய தளம்பல்கள் நுகர்வோர், உற்பத்தியாளர் ஆகிய இருவர் மீதும் தீங்கினை விளைவிக்கும். இத்தலையீடுகள் உரிமம் வழங்கல் தீர்வை மாற்றங்கள் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், வரையறுக்கப்பட்ட லங்கா சலுசல, மற்றும் இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் போன்ற அரசதுறை வர்த்தக நிறுவனங்களினூடாக மேற்கொள்ளப்பட்டன. இரு ஒழுங்கு முறைப்படுத்தல் சபைகளான உள்நாட்டு வர்த்தகத் திணைக்களமும் நியாய வர்த்தக ஆணைக்குழுவும் மருந்தாக்கல்

உற்பத்திகள் மீதான விலைக் கட்டுப்பாடுகளைப் பேணியதுடன் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளையும் விசாரித்தன.

2001 திசெம்பரில் பெற்றோலிய உற்பத்திக்கான தன்னியக்க விலையிடல் சூத்திரத்தினை அறிமுகப்படுத்தும்வரை அதற்கான நிருவகிக்கப்பட்ட விலைகளை அரசு தொடர்ந்தும் மேற்கொண்டுவந்தது. உராய்வு நீக்கி, மற்றும் திரவப் பெற்றோலிய வாயு நீங்கலான பெற்றோலிய எரிபொருளின் இறக்குமதி, சுத்திகரிப்பு மற்றும் வழங்கலுக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமே முழு அதிகாரமும் பெற்றதாக விளங்கியது. வரையறுக்கப்பட்ட செல்காஸ் லங்காவினால் அனுபவிக்கப்பட்ட தனியுரிமை வாயுவிற்கான சந்தையில் மற்றைய போட்டியாளர்களை நுழைவதற்கு அனுமதித்தமையின் மூலம் 2000ஆம் ஆண்டு திசெம்பரில் முடிவிற்கு வந்தது. வரையறுக்கப்பட்ட லவுக்ஸ் லங்கா காஸ் (பிறைவேட்) 2001 ஒத்தோபரில் போட்டியாளராக சந்தைக்குள் நுழைந்தது. உள்நாட்டுச் சந்தையில் திரவப் பெற்றோலிய வாயுவின் விலைகள் போட்டியின் காரணமாகக் குறைவடைந்தன. வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கையினால் அரைக்கப்பட்ட கோதுமை மாவை கொள்வனவு செய்து பங்கீடு செய்வதில் உணவு ஆணையாளர் திணைக்களம் 2001 ஓகத்துவரை ஏகபோக உரிமையாளராகத் தொழிற்பட்டது. 2000 பெப்புருவரியிலிருந்து கோதுமை மற்றும் கோதுமை மாவின் இறக்குமதிக்கான உரிமத் தேவைப்பாடுகள் அகற்றப்பட்டு தனியார் துறையினர் எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி அவற்றை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டிருந்த போதிலுங்கூட கோதுமைத் தானியத்தின் இறக்குமதி முழுவதும் 2001 செத்தெம்பர்வரை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினாலேயே கையாளப்பட்டது. கோதுமையின் இறக்குமதியும் கோதுமைமாவினை தீவு முழுவதற்குமான பங்கீடும் 2001 செத்தெம்பரில் வரையறுக்கப்பட்ட பிறிமா சிலோன் நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டது.

விலை உறுதிப்பாட்டினையும் இன்றியமையாத நுகர்வுப் பொருட்களின் கிடைப்பனவினையும் உறுதிப்படுத்தும் பொருட்டு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் முக்கிய உணவுப் பொருட்களைத் தொடர்ந்தும் இறக்குமதி செய்ததுடன் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களையும் கொள்வனவு செய்தது. 2001 பெப்புருவரியில் நிதி திட்டமிடல் அமைச்சில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் சார்பில் அரிசி, பால்மா,கருவாடு, உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் மிளகாய் என்பனவற்றைக் கொள்வனவு செய்வது தொடர்பான தீர்மானத்தினை எடுப்பதற்காக நிலையியல் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விலைக் கோரல் சபையொன்று நியமிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து உள்ளூர் வர்த்தகர்களூடாக இறக்குமதி செய்யப்பட்ட உணவு விடயங்களை உள்ளூரில் கொள்வனவு செய்வது தொடர்பான தீர்மானங்களும் 2001 ஓகத்து 17ஆம் நாளிலிருந்து அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விலைக்கோரல் சபையினால் கையாளப்பட்டது. 2001 திசெம்பர் 31வரை இவ்வுற்பத்திகளின் கொள்வனவு மற்றும் விற்பனவு விலைகளும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் விலைக்கோரல் சபையினால் தீர்மானிக்கப்பட்டது.

கூ.மொ.விற்பனை நிலையம் உள்ளூர் உற்பத்திகளில் காணப்பட்ட பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக குறிப்பிட்ட உற்பத்திகளை இறக்குமதி செய்த வேளையில் தனியார் துறையினால் இறக்குமதி செய்யப்பட்ட அளவுகள் உள்நாட்டுக் கேள்வியினை ஈடுசெய்வதற்கு போதுமானதாகவுள்ளவிடத்து மற்றைய உற்பத்திகளின் இறக்குமதியைக் குறைத்துக் கொண்டது. மேலும் உள்ளூர் உற்பத்திகள் மிகையாகக் காணப்படும்போது அவற்றைக் கொள்வனவு செய்தவேளையில் பற்றாக்குறையாகவுள்ள நேரத்தில் அத்தகைய கொள்வனவுகளை மட்டுப்படுத்திக் கொண்டது. 2001இன் நெல் அறுவடைக் காலத்தில் 41,723 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்தமையின் மூலம் கூ.மொ.விற்பனை நிலையம் நெற் சந்தையில் தலையிட்டவேளையில் பற்றாக்குறையான காலத்தில் 15,750 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்தது. 2001இல் பெரிய வெங்காயத்தின் அறுவடை சிறிதளவு மட்டுமே அதிகரித்தமையின் காரணாக கூ.மொ.விற்பனை நிலையம் பெரிய வெங்காயத்தின் உள்நாட்டுக் கொள்வனவினை 1,551 மெற்றிக் தொன்களுக்கு (2000ஆம் ஆண்டில் 2,166 மெற்றிக் தொன்) மட்டுப்படுத்திய வேளையில், அதிகரித்த கேள்வியை ஈடுசெய்வதற்காக 4,184 மெற்றிக் தொன்னை (மொத்த இறக்குமதியில் 4 சதவீதம்) இறக்குமதி செய்தது. கூ.மொ.வி.நிலையம் 1,037 மெற்றிக் தொன் செத்தல் மிளகாயை உள்நாட்டில் ஏற்பட்ட தட்டுப்பாட்டைத் தணிப்பதற்காக இறக்குமதி செய்தது. (இது மொத்த

இறக்குமதிகளில் 4 சதவீதம்.) (உற்பத்தி 19,834 மெற்றிக் தொன்களிலிருந்து 17,410 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.) செத்தல் மிளகாய் தொடர்பான அதன் உள்ளூர் கொள்வனவு 16 மெற்றிக் தொன்களுக்கு (2000ஆம் ஆண்டில் 146 மெற்றிக் தொன்) மட்டுப்படுத்தப்பட்டமையானது விலை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தும் அதன் விருப்ப ஆர்வத்தினை பிரதிபலிக்கின்ற வேளையில் இன்றியமையாத உணவுப் பொருட்களின் தொடர்ச்சியான நிரம்பலையும் உறுதிப்படுத்தியது. இறக்குமதி செய்யப்பட்ட மற்றைய பொருட்களைப் பொறுத்தவரை மொத்த இறக்குமதிகளில் கூ.மொ.விற்பனை நிலையத்தின் இறக்குமதிப் பங்கு ஒப்பீட்டு ரீதியில் சிறிதாக இருந்தது. பருப்பும், சீனியும் (முறையே 12 சதவீதம்), கருவாட்டுப் பொருட்கள் (1 சதவீதம்).

கூ.மொ.விற்பனை நிலையம் அதன் 157 சில்லறைக் கடைகளினூடாகவும் 41 மொத்த விற்பனைக் கடைகளூடாகவும் இன்றியமையாத உணவுப் பொருட்களைத் தொடர்ந்தும் பங்கீடு செய்ததுடன் இதில் 5 புதிய சில்லறைக்கடைகள் 2001இல் திறக்கப்பட்டனவாக இருந்தன. எனினும் மொத்தப் புரள்வு 2000ஆம் ஆண்டின் ரூ.8,090 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.7,750 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. அங்கீகரிக்கப்பட்ட முகவர் கடைகளினூடன மொத்தப்புரள்வு 2000ஆம் ஆண்டின் ரூ.2.282 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2001இல் ரூ.357 மில்லியனாக (84 சதவீதம் கொண்ட வீழ்ச்சி) காணப்பட்டது. இதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட முகவர் கடைகள் வர்த்தக நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் பங்குபற்றாமை காரணமாகும். பதிவு செய்யப்பட்ட 8708 அங்கீகாரமளிக்கப்பட்ட முகவர் கடைகளில் 1230 கடைகள் மட்டுமே 2001ஆம் ஆண்டுப் பகுதியில் கூ.மொ.விற்பனை நிலையத்திலிருந்து பொருட்களை கொள்வனவு செய்தன. 2001இல் புதிய அங்கீகாரமளிக்கப்பட்ட முகவர்களாக புதிதாக எவரும் நியமிக்கப்படவில்லை.

வரையறுக்கப்பட்ட இலங்கைப் பொது வர்த்தகக் கம்பனி பரந்தளவு உற்பத்திகளை அதன் சொந்த வலையமைப்பிற்குப் பிறம்பாக அங்கீகரிக்கப்பட்ட வலையமைப்பிற்கூடாகவும் குடித்தொகையின் பல்வேறு பிரிவு மக்களையும் சென்றடையும் விதத்தில் பங்கீடு செய்தது. சில உற்பத்திகள் நாடுபூராவிலுமுள்ள கம்பனியின் விற்பனை மேம்பாட்டு உதவியாளர்களூடாக வழங்கப்பட்டன. இரண்டு நிறுவனங்களும் நியாயமான போட்டியை உறுதிப்படுத்துவதில் பங்காற்றின. கூட்டுறவுச் சங்கங்களும் 617 மொத்த விற்பனை மற்றும் 311 கூட்டுறவுச்சங்களினூடாகத் தொழிற்பட 7839 சில்லறைக் கடைகள் என்பனவற்றினூடாக நியாயமான விலைகளில் பொருட்களை வழங்குகின்ற வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. இச்சங்கங்கள் 2001இல் 1.61 மில்லியன் நன்மை பெறுநர்களுக்கு ரூ.4699 மில்லியன் தொகை கொண்ட உலர் உணவுப் பங்கீடுகளை வழங்குவது தொடர்பாக சிறப்புப் பங்களிப்பினை வழங்கியுள்ளன.

இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத் தாபனம் அரச நலக் கவனிப்பு நிறுவனங்களுக்கு மருந்தாக்கல் உற்பத்திகளின் ஏக வழங்குநராகவும் சந்தைக்கான முக்கிய வழங்குனராகவும் தொடர்ந்தும் விளங்கியது. இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் நியாய வர்த்தக ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் விலைகளில் மருந்தாக்கல் பொருட்களை வழங்கியது. தனியார்துறையின் அனைத்து மருந்தாக்கல் பொருட்களினதும் இறக்குமதி உரிமத்திற்கும் விலைக் கட்டுப்பாடுகளுக்கும் உள்பட்டதாகும். இலங்கை அரசமருந்தாக்கல் கூட்டுத்தாபனம் 36 விநியோகத்தர்கள், 35 அங்கீகாரமளிக்கப்பட்ட ஒசுசல விற்பனை நிலையங்கள் 12 அரச ஒசுசல விற்பனையாளர்கள் 10 அங்கீகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர் ஆகியோரூடாக நாடு பூராவுமான விற்பனை வலையமைப்பினை மேற்கொண்டது. 2001இல் மருந்தின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்காக நுண்பாக - பரிசோதனைக் கூடமொன்று நிறுவப்பட்டது. விற்பனையை மேம்படுத்தல் மற்றும் பொது மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மின்னியல் ஊடகங்கள், கல்விசார்ந்த, மருந்தக கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் என்பனவற்றினூடாக நடத்தப்பட்டன. இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் நாட்டின் மருந்தாக்கல் தேவையில் ஏறத்தாழ 40 சதவீதத்தினை இறக்குமதி செய்தன. சில்லறை விலைகளை நிர்ணயிப்பதற்காக சூத்திரம் மாற்றமின்றிக் காணப்பட்டது.

உள்நாட்டு வர்த்தகத் திணைக்களமும் நியாய வர்த்தக ஆணைக்குழுவும் ஒரு திறந்த சந்தைச் சூழலில் வர்த்தகத்தின் ஒழுங்கான நடத்தையை உறுதி செய்வதில் ஈடுபட்டிருந்தன. இவ்விரு நிறுவனங்களும் நுகர்வோர் உரிமைகள் பற்றி அவர்களது அறிவாற்றலை அதிகரித்தல், நுகர்வோர் குழுக்களின் உருவாக்கத்தினை

ஊக்குவித்தல், நுகர்வோரைப் பாதுகாக்கும் வழிமுறைகளை மேற்கொள்ளுதல் நியாய வர்த்தக நடைமுறைகளை நிறுவுதல் உள்நாட்டு வர்த்தகத்தினை ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் தேவையானவிடத்து விலைக்கட்டுப்பாடுகளைப் பேணுதல் என்பன தொடர்பாக குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டன. நியாய வர்த்தக ஆணைக்குழு 77 இறக்குமதியாளர்களினால் இறக்குமதி செய்யப்பட்ட ஏறத்தாழ 4,600 மருந்தாக்கல் பொருட்கள் மற்றும் 7 உள்ளூர் தயாரிப்பாளர்களினதும் உற்பத்திகளின் விலைகள் மீது தொடர்ந்தும் கட்டுப்பாடுகளைப் பேணியது. மருந்தாக்கல் உற்பத்திகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல்முறை உற்பத்திகளின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு போதுமான பாதுகாப்புக்களை வேண்டிநிற்கின்ற வேளையில் வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் போட்டித் தன்மையினூடாக மிகையான செலவுகளைக் குறைப்பதற்கும் அரச கட்டுப்பாடுகளைப் படிப்படியாக நீக்குவது அவசியமாக உள்ளது.

நியாய வர்த்தக ஆணைக்குழு போட்டித்தன்மை நடைமுறைகளுக்கு எதிரான ஐந்து வழக்குகளையும் 1987இன் 1ஆம் இலக்க நியாய வர்த்தக ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான பல நுகர்வோர் முறையீடுகளையும் புலனாய்வு செய்தது. 2001ஆம் ஆண்டில் உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் 1656 திடீர் பரிசோதனைகளை நடாத்தியதுடன் இதில் 1099 குற்றங்கள் தொடர்பாக வழக்குகள் தொடுக்கப்பட்டன. விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் 26 திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 10 குற்றங்களுக்கெதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டன. வளமாக்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ் தரமற்ற வளமாக்கி தரங்களைப் பேணாமை மற்றும் ஒழுங்குவிதிகளை மீறியமை போன்ற குற்றங்களுக்காக 32 வர்த்தகர்களுக்கு தண்டம் விதிக்கப்பட்டது.


## 9.14 சுற்றுலா

2001 யூலையில் சுற்றுலாத்துறை பெரும் பின்னடைவினைக் கொண்டிருந்தது.2001ஆம் ஆண்டின் முன்னரைப்பகுதியில் குறிப்பிடத் தக்களவிற்கு மீட்சியடைந்த சுற்றுலா வருகைகள் (10.5 சதவீத அதிகரிப்பு) 2001 யூலையில் கட்டுநாயக்க சர்வதேச வானூர்தி நிலையம் தாக்கப்பட்டதுடன் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. சுற்றுலாக் கைத்தொழிலில் செத்தெம்பர் 11ஆம் நாளன்று ஐக்கிய அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல், அதனைத் தொடர்ந்து நிலவிய நிச்சயமற்ற அரசியல் நிலைமைபோன்ற பல காரணிகளினால் மேலும் பாதிக்கப்பட்டது. 2001இன் பின்னரைப் பகுதியில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியின் (44 சதவீதம்) காரணமாக 2001ஆம் ஆண்டினை முழுமையாகப் பார்க்கையில் சுற்றுலா வருகைகள் 15.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 2001ஆம் ஆண்டில் மொத்தச் சுற்றுலா வருகைகள் 2000ஆம் ஆண்டின் 400,414உடன் ஒப்பிடுகையில் 336,794 ஆகக் காணப்பட்டது. சுற்றுலாவிலிருந்தான மொத்த வருவாய்கள் 2000ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 252 மில்லியனிலிருந்து 2001இல் ஐ.அ.டொலர் 213 மில்லியனிற்கு வீழ்ச்சியடைந்தது.

சிறிலங்கன் ஏயர்லைன்சின் பல வானூர்திகள் வானூர்தி நிலையத் தாக்குதலில் சேதமடைந்தமையின் பின்னர் அது உடனடியாக அதன் வழமையான அட்டவணைப்படி தொழிற்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது. வெளிநாட்டு சுற்றுலாத் தொழிற்பாட்டாளர்கள், வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் தூதுவராலயங்கள் வெளிநாட்டு ஊடகங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் ஆகியோரின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதே சுற்றுலாக் கைத்தொழிலில் எதிர்நோக்குகின்ற முக்கிய அறைகூவலாக மாறியது.

இலங்கை சுற்றுலாச்சபை 2001இல் நெருக்கடி முகாமைத்துவ திட்டமொன்றினை வடிவமைப்பதற்கு விரைவான நடவடிக்கைகளை எடுத்தது. வெளிநாடுகளின் பயண எச்சரிக்கையை புறக்கீடு செய்யவைப்பதும், வெளிநாட்டு வானூர்திக் கம்பனிகளினாலும் கப்பற் கம்பனிகளினாலும் விதிக்கப்பட்ட இடர்நேர் காப்புறுதிக் கட்டணங்களை குறைக்கச் செய்வதும் இத்திட்டத்தின் கீழான முக்கிய முயற்சிகளாக

வரைபடம் 9.10
சுற்றுலாப் புள்ளிவிபரங்கள்
(1997 = 100)



**அட்டவணை 9.12**
**சுற்றுலாப் புள்ளி விபரங்கள் 1999–2001**

| விடயம் | 1999 | 2000 (அ) | 2001 (ஆ) | சதவீத மாற்றம் 2000 | சதவீத மாற்றம் 2001 |
|---|---|---|---|---|---|
| 1. சுற்றுலா வருகைகள் | 436,440 | 400,414 | 336,794 | -8.3 | -15.9 |
| 2. சுற்றுலா இரவுகள் ('000) | 4,479 | 4,056 | 3,435 | -9.4 | -15.3 |
| 3. தங்கும் அறை விகிதம் (%) | 57.6 | 52.3 | 42.1 | -9.2 | -19.5 |
| 4. மொத்தச் சுற்றுலாப் பெறுகைகள் (ரூ.மில்.) | 19,288 | 19,095 | 19,034 | -1.0 | -0.3 |
| 5. தலைக்குரிய சுற்றுலாப் பயணச்செலவு (ரூபா) | 44,194 | 47,688 | 56,515 | 7.9 | 18.5 |
| 6. மொத்தத் தொழில் நிலை | 87,744 | 91,063 | 85,063 | 3.8 | -6.6 |
| நேரடி | 36,560 | 37,943 | 35,443 | 3.8 | -6.6 |
| மறைமுக | 51,184 | 53,120 | 49,620 | 3.8 | -6.6 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலங்கள்: சுற்றுலாச் சபை. இலங்கை மத்திய வங்கி.

இருந்தன. கைத்தொழில் அதிபர்களினால் எதிர்நோக்கப்படட தற்காலிக இடர்பாடுகளையும் கடன்களையும் வட்டிக் கொடுப்பனவுகளையும் மீள் அட்டவணைப்படுத்துவதன் வாயிலாக ஈடுசெய்யும் விதத்தில் 2001இல் அரசாங்கம் நிவாரணப் பொதியொன்றை அறிமுகப்படுத்தியது. 2001 ஒகத்தில் தொடங்கி 2002 மாச்சு 31 வரையான காலப்பகுதிக்கு செலுத்தப்பட வேண்டிய முதல் மற்றும் வட்டி மீள் கொடுப்பனவினை காலம்தாழ்த்திக் கொடுப்பதற்கான இசைவு, கடன்மீள் கொடுப்பனவுக் காலத்தினை நீடித்தல் அல்லது பிற்போடப்பட்ட வட்டியை மூலதனப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. கடன்கள் ஒவ்வொன்றாக மீள் அட்டவணையிடப்பட்டன. அரசாங்கத்தினாலும் தொழில் அதிபர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் விளைவாக, மோசமான பயண மதியுரைகளில் பெரும்பாலானவை புறக்கீடு செய்யப்பட்டு அல்லது திருத்தப்பட்டதுடன் 2001ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மாதாந்தச் சுற்றுலா வருகைகளில் காணப்பட்ட வீழ்ச்சி வீதத்தில் மெதுவான போக்கும் அவதானிக்கப்பட்டது.

2001இன் பின்னரைப் பகுதியில் பெரும்பாலும் அனைத்து முக்கிய பிராந்தியங்களிலுமிருந்தான சுற்றுலா வருகைகள் வீழ்ச்சியடைந்தன. மேற்கு ஐரோப்பி நாட்டிற்கான சுற்றுலாப் பயணிகளின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் இருந்ததுடன் மொத்த சுற்றுலா வருகைகளில் 61 சதவீதத்திற்கும் வகைகூறியதெனினும் 2000ஆம் ஆண்டின் மட்டத்திலிருந்தும் 22 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. மேற்கு ஐரோப்பாவிலிருந்தான வருகைகளில் பாரிய தனிப்பெரும் மூலமாகக் காணப்பட்ட ஐக்கிய இராச்சியத்திலிருந்தான வருகைகள் 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் மற்றைய முக்கிய மூலங்களான சேர்மனி (-14 சதவிதம்), இத்தாலி (-28 சதவிதம்), பிரான்சு (-19 சதவீதம்), சுவிற்சலாந்து (-27 சதவீதம்) மற்றும் நெதர்லாந்து (-4.4 சதவீதம்) போன்றவற்றிலிருந்தான வருகைகளும் வீழ்ச்சியைக் காட்டின. இப்பிராந்தியத்தில் நோர்வே மட்டுமே சுற்றுலா வருகைகளில் அதிகரிப்பைப் பதிவு செய்த (12 சதவீதம்) ஒரே நாடாகும். ஆசியாவிலிருந்தான வருகைகள் 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. கிழக்காசியாவிலிருந்தான வருகைகள் 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு யப்பான் (-10 சதவீதம்), மலேசியா (-19 சதவீதம்) என்பனவற்றிலிருந்தான வருகைகள் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். இந்தியாவிலிருந்தான வருகைகள் 6 சதவீதத்தினால் அதிகரித்தமையின் காரணமாக தென்னாசியாவில் இருந்தான வருகைகள் 5 சதவீதத்தினால் அதிகரித்தன. அவுத்திரலாசியா மற்றும் வடஅமெரிக்காவிலிருந்தான சுற்றுலா வருகைகள் முறையே 28 சதவீதத்தினாலும் 8 சதவீதத் தினாலும் வீழ்ச்சியடைந்த வேளையில் கிழக்கு ஐரோப்பாவிலிருந்தான வருகைகள் 3 சதவீதத்தினால் அதிகரித்தன.

இந் நாட்டிற்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளில் பெரும்பான்மையானோர் விடுமுறைக்காக வந்தவேளையில் ஏறத்தாழ 11 சதவீதத்தினர் ஏனைய நோக்கங்களுக்காக வருகை தந்தனர். மற்றைய நோக்கங்களான வியாபாரம், நண்பர்கள் உறவினர்களைக்காணல், சமய மற்றும் கலாச்சார நோக்கங்களுக்கானதாக இருந்தன. மொத்த வருகைகளில் 78 சதவீதத்தினர் கிரமமான பிரதேசங்களுக்கிடையேயான பறப்புக்களின் மூலம் வருகை தந்தவேளையில் 19 சதவீதத்தினர் கிரமமான பிரதேசங்களுக்குள்ளேயான பறப்புக்களின் மூலமும் 3 சதவீதத்தினர் ஒப்பந்த அடிப்படையிலான பறப்புக்களின் மூலமும் வருகைதந்தனர். 2001ஆம் ஆண்டில் சிறிலங்கன் எயர்லைன்சு 2000ஆம் ஆண்டின் 51 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 55 சதவீதத்தினரைக் கொண்டவந்தது. இம்மேம்பாடு 1999இலும் 2000ஆம் ஆண்டிலும் ஆறு புதிய வானூர்திகள் மேலதிகமாகத் தொகுதிக்குச் சேர்க்கப்பட்டதுடன் ஆண்டின் முதலரைப்பகுதியின் சிறந்த செயலாற்றத்தினைப் பிரதிபலிப்பதாக இருந்தது. 2000ஆம் ஆண்டு நவெம்பரில் சிறிலங்கள் ஏயர்லைன்சினால் அவுத்திரேலியாவுக்கும் சுவீடனுக்கும் அறிமுகப்படுத்தப்பட்ட இரு

புதிய நேரடிப் பறப்புக்கள் இவ்விரு மூலங்களிலுமிருந்தான வருகைகள் அதிகரிக்க உதவியது. 2001இன் முதலரைப் பகுதியில் சிறிலங்கன் எயர்லைன்சில் பயணம் செய்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 25 சதவீதத்தினால் அதிகரித்தது. 2001ஆம் ஆண்டின் பின்னரைப்பகுதியில் இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 41 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஆண்டு முழுவதையும் நோக்குகையில் 9 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியைக் காட்டியது. எனினும் யூலையில் வானூர்தி நிலையம் தாக்கப்பட்டதன் பின்னர் மிகச்சில வானூர்தி நிறுவனங்களே தொழிற்பாட்டினை மேற் கொண்டமையின் காரணமாக இதன் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவம் அதிகரித்தது. ஒப்பந்தப் பறப்புக்களின் பங்கு 2000ஆம் ஆண்டின் 7 சதவீதத்திலிருந்து 2001இல் 3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

சூழல் சுற்றுலா, மற்றும் கலாச்சார சுற்றுலா, போன்ற புதிய சுற்றுலா உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கான உள்ளார்ந்த வளத்தினை இலங்கை கொண்டுள்ளமையைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வனவிலங்குப்பூங்கா, தாவரப் பூந்தோட்டங்கள், விலங்கியல் காட்சிச்சாலை, மற்றும் கலாச்சார முக்கோணப் பிரதேசங்களுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் மூலம் பெறப்படும் வருமானம் 2001இல் தொடர்ந்தும் அதிகரித்தது. இலங்கைக் கண்காட்சிப் பணியகம் 2001ஆம் ஆண்டில் கூட்டங்கள், ஊக்குவிப்புப் பயணங்கள் மாநாடுகள், மற்றும் கண்காட்சிச் சுற்றுலா ஆகியவற்றைத் தொடர்ந்தும ஊக்குவித்தது. கூட்டங்கள், ஊக்குவிப்புப் பயணங்கள், மாநாடுகள், மற்றும் கண்காட்சிச் சுற்றுலா உலகின் சுற்றுலாவில் மிக இலாபம் தரும் ஒரு தனித்துறையாகக் கருதப்படுகின்றது. 2001இல் பணியகம் 78 மாநாடுகள், 7 கண்காட்சிகள், 5 ஊக்குவிப்புக் குழுக்களுக்கு அனுசரணை வழங்கியது. கூட்டங்கள் ஊக்குவிப்புப் பயணங்கள் மாநாடுகள் மற்றும் கண்காட்சி வகையின்கீழ் நாட்டிற்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் தொகை 2001இல் 1,795 என மதிப்பிடப்பட்டது. கூட்டங்கள், ஊக்குவிப்புப் பயணங்கள் மாநாடு மற்றும் கண்காட்சிச் சுற்றுலாவிற்கான இடமாக ஆசியாவில் இலங்கையை மேம்படுத்துவதற்காக பணியகம் பல பன்னாட்டு பிரசாரங்களில் பங்கேற்றது. மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, கொழும்பு நகர சுற்றுலாவிடுதிச் சங்கமும் இலங்கை தொழில்சார் மாநாடு/ நிகழ்ச்சிகள் ஒழுங்கமைப்பாளர் சங்கமும் மாநாடு மற்றும் கூட்டங்களுக்கு ஆகக் குறைந்த அளவு வீதங்களைப் பேணுவதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

கைத்தொழிலாளர்களால் எதிர்நோக்கப்பட்ட இடர்பாடுகளைத் தொடர்ந்து சுற்றுலாவிடுதிகளில் வெளிநாட்டு விருந்தினர்கள் தங்கும் இரவுகள் 2001இல் 23 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. கிழக்குக் கரையோரம் தவிர்ந்த அனைத்துப் பிரதேசங்களிலும் வெளிநாட்டு விருந்தினர்கள் இரவுகள் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. எண்ணிக்கையில் சிறிதாக இருந்தபோதும் கிழக்குக் கரையோரத்தில் வெளிநாட்டு விருந்தினர் இரவுகள் 24 சதவீதத்தினால் அதிகரித்தன. சுற்றுலா விடுதிக் கைத்தொழிலில் காணப்பட்ட தாழ்ந்த வெளிநாட்டு விருந்தினர் இரவுகளின் எதிர்க்கணியத் தாக்கத்தினை ஓரளவிற்கு ஈடுசெய்யும் விதத்தில் கொழும்பு நகர மற்றும் மலைநாட்டில் உள்ளூர் விருந்தினர்களின் இரவுகள் 8 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தன. குறுங்கால இடர்பாடுகளை வெற்றி கொள்ளுவதற்காக சுற்றுலாக் கைத்தொழிலினால் அறிமுகப்படுத்தப பட்ட குறிப்பிட்ட குறைந்த வீதங்களும் மேம்பாட்டுப் பொதிகளும் இவ்வதிகரிப்பிற்கு உதவின. உள்நாட்டு விருந்தினரின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு இந்நெருக்கடியான காலப்பகுதியில் சுற்றுலாக் கைத்தொழில் உயிர்வாழ உதவியது.

அறைகளில் தங்கும் வீதம் 2000ஆம் ஆண்டின் 52 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 42 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அறைகளில் தங்கும் வீதம் தென் கரையோரம் மற்றும் பண்டைய நகரங்களில் கணிசமாக வீழ்ச்சியடைந்ததுடன் அனைத்துப் பிரதேசங்களிலும் வீழ்ச்சிகண்டது. தரமிடப்பட்ட தங்குமிடத்துறையில் சுற்றுலாக் கூறுகளின் எண்ணிக்கை அனைத்துப் பிரதேசங்களிலும் 207இலிருந்து 209இற்கு அதிகரித்தது. அதாவது கொழும்புப் பெரும்பாகம் (40 இலிருந்து 39), தென்கரையோரம் (83 இலிருந்து 85), மலைநாடு (14இலிருந்து 16) பண்டைய நகரங்கள் (43 மாற்றமின்றி), எனினும் கொழும்பு நகரிலுள்ள சுறுசுறுப்பான சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை (23இலிருந்து 22இற்கு) இற்கும் கொழும்புப் பெரும்பாகம் (40 இலிருந்து 39இற்கு) வீழ்ச்சியடைந்த வேளையில் கிழக்கு கரையோரத்தின் எண்ணிக்கை 4ஆகவும் பண்டைய நகரம் 43ஆகவும் மாற்றமின்றி 4 ஆகக் காணப்பட்டது. சுற்றுலாக் கூறுகளின் எண்ணிக்கை அதிகரித்தமையின் காரணமாக அறைகளின் இயலளவு

2001ஆம் ஆண்டில் 13,311இலிருந்து 13,408இற்கு அதிகரித்தது. சுற்றுலா விடுதிகளின் நட்சத்திர பகுப்பாய்வின்படி, தரமிடப்பட்ட சுற்றுலா விடுதிகள் 2000இன் 72இலிருந்து 2001இல் 73இற்கு அதிகரித்தது.

சுற்றுலாப் பயணிகள் நாட்டில் தங்கியிருந்த சராசரிக் காலப்பகுதி 2000ஆம் ஆண்டின் 10.1 நாட்களிலிருந்து 2001இல் 9.9 நாட்களுக்கு சிறிதளவால் குறைவடைந்தது. சராசரி தங்கும் காலம் சிறிதளவு வீழ்ச்சியடைந்தமைக்கு, வழமையாக நீண்டகாலம் தங்கும் மேற்கு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகையின் பங்கு (11.3 நாட்களிலிருந்து 11 நாட்கள்), மத்திய கிழக்கு (9.5 நாட்களிலிருந்து 8 நாட்கள்), ஆபிரிக்கா (10.1 நாட்களிலிருந்து 9.6 நாட்கள்) மற்றும் கரிபியன் (11.3 நாட்களிலிருந்து 11 நாட்கள்) குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். நெதர்லாந்திலிருந்து வருகைதந்த சுற்றுலாப் பயணிகளின் சராசரி தங்கும் காலம் உயர்வாக இருந்ததுடன் (12.7 நாட்கள்) அதனைத் தொடர்ந்து ஒசுத்திரியா (12.5 நாட்கள்) டென்மாக்கு (12.4 நாட்கள்) மற்றும் சேர்மனி (12.0 நாட்கள்) என்பன காணப்பட்டதுடன் அவற்றுடன் ஒப்பிடுகையில் இந்தியா (7.4 நாட்கள்) பாக்கித்தான் (8.1 நாட்கள்) அடுத்துக் காணப்பட்டன.

2001இல் இத்துறையில் நேரடித் தொழில்வாய்ப்பு மற்றும் மறைமுகத் தொழில்வாய்ப்பு இரண்டும் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் பயண முகவர்கள் சுற்றுலாத் தொழிற்பாட்டாளர்கள் களியாட்ட வசதிகளை வழங்கும் வானூர்தி முகவர்கள் சுற்றுலாப் பயணிகள் கடைகள் மற்றும் சுற்றுலாச்சபை என்பனவற்றில் உள்ள தொழில்கள் நேரடித் தொழில் வாய்ப்புக்களாகக் கருதப்படுகின்றன. உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் உள்ளீடுகளின் வழங்குநர்கள் என்போர் மறைமுக தொழில் வாய்ப்பை உருவாக்குகின்றனர்.

இருபுடை மற்றும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான முக்கியமான துறைகளில் ஒன்றாக அண்மைய கலந்துரையாடல்களில் சுற்றுலா கருதப்பட்டிருக்கிறது. 1998இலிருந்து வங்காளதேசம், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து பொருளாதார ஒத்துழைப்பின் 2001 திசெம்பர் மியன்மார், ரங்கூனில் இடம்பெற்ற நான்காவது அமைச்சர்கள் கூட்டத்தில் இலங்கை தொழில்நுட்பத்துறையின் முதன்மை நாடென்பதனை ஏற்றுக் கொள்வதற்காக சுற்றுலாவில் முதன்மை நாடென்ற நிலையைக் கைவிட்டது. எனினும் சுற்றுலாத் துறைக்காக வங்காளதேசம், இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து – பொருளாதார ஒத்துழைப்பினால் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைத்திட்டம் நடைமுறையிலுள்ளது. இந்து சமுத்திர வலயத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான ஆய்வொன்றினை இந்தியாவுடன் கூட்டாக மேற்கொண்டது. இலங்கைக்கு வருகைதரும் சீன சுற்றுலாப்பயணிகளுக்கு வசதிகளை வழங்குவதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு பீஜிங்கிலுள்ள தூதரகத்தினூடாகவும் கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தினூடாகவும் இலங்கையை சீனாவின் அலுவல்சார் சுற்றுலா இடமாக குறித்துரைக்கச் செய்வதற்காக தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொண்டது.